விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 11 ஞாயிற்றுக்கிழமை (27.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3126)

# சுனாமியால் உயிரிழந்தோருக்கு வடக்கு கிழக்கு எங்கும் அஞ்சலி!

## உணர்வெழுச்சியுடன் உறவுகள் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

ஆழிப்பேரலை அவலத்தின் மீளா வலி பதினோராவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்றைய தினம் நாடு முழுவதும் குறிப்பாக தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கு உடுத்துறை சுனாமி நினைவாலயம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோண மலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பெருமளவான மக்கள் திரண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர். (15ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் அபாயம்

(கொழும்பு)

உலகில் மிகவும் ஆபத்தான மிதி மற்றும் வெடிக்காத வெடி பொருட்கள் உள்ள பிரதேசமாக முக மாலை பிரதேசம் உள்ளது என மனிதநேய கண்ணி வெடி அகற்றும் நிறுவனமான ஹலோ ட்ரஸ்ட் நிறுனவம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 13 வருடங்களாக...

## காணிகளை விடுவிப்பதற்கு இராணுவத்தின் தகவல் தேவை

### காத்திருப்பதாக அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் அடுத்த வருடம் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்க அரசு தீர்மானித்துள்ள நிலையில், எந்தெந்தக் காணிகளை...

காப்புத் தரப்பினர் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் தெரிவித்தார். பாதுகாப்புத்...

எந்தெந்தக் காணிகள் விடுவிக்கப் படும் என்பது தொடர்பாகத் தெளிவாகக் குறிப்பிட முடியும் என்றும்...

## முகமாலையில் அபாயம்

(கொழும்பு)

உலகில் மிகவும் ஆபத்தான மிதி மற்றும் வெடிக்காத வெடி பொருட்கள் உள்ள பிரதேசமாக முக மாலை பிரதேசம் உள்ளது என மனிதநேய கண்ணி வெடி அகற் றும் நிறுவனமான ஹலோ ட்ரஸ்ட் நிறுனவம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 13 வரு டங்களாக 15 ஆம் பக்கம் பார்க்க....

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் அடுத்த வரு டம் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்க அரசு தீர்மானித்துள்ள நிலையில், எந்தெந்தக் காணிகளை விடு விப்பது என்பது குறித்து பாது

### காத்திருப்பதாக அமைச்சர் தெரிவிப்பு

காப்புத் தரப்பினர் ஆராய்ந்து வரு வதாக அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் தெரிவித்தார். பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்ததன் பின்னரே எந்தெந்தக் காணிகள் விடுவிக்கப் படும் என்பது தொடர்பாகத் தெளி வாகக் குறிப்பிட முடியும் என்றும் அவர் தெரி 15 ஆம் பக்கம் பார்க்க....


**சுந்தர்சன் நிறுவனத்தில்**

நீண்டகாலமாக பணிபுரியும் ஊழியர்களில் சுழற்சி முறையில் கௌரவிக்கப்பட்ட ஊழியர்கள்

திரு. M. பாலசுப்ரமணியம்

திரு. B. ராஜ்குமார்

திரு. P. நிரஞ்சன்குமார்

(C-3134)


# அரசை கவிழ்க்க சதித்திட்டம்!

### புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

2016ஆம் ஆண்டுக் கான அரசாங்கத்தின் நட வடிக்கைகளை பல்வேறு வழி களில் சீர்குலைப்பதற்கு சதித்திட் டம் தீட்டப் 15 ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் மக்கள் பேரவையின் 2-வது கூட்டத்தொடர் இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர் இன்று 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட் போர் கூடத்தின் கீழ்த் தளத்தில் இடம் பெறும்.

பேரவையின் இணைத் தலை வர்களான வடக்கு மாகாணசபை முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், த.வசந்தராஜா ஆகியோர் தலை மையில் நடைபெறும் இக்கூட்டத் தில் இனப் 15 ஆம் பக்கம் பார்க்க....


**சுந்தர்சன் நிறுவனத்தின்**

**மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 40 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்**

1ஆம் பரிசு - Refrigerator

K R கவிநயன் - சங்கானை

2ஆம் பரிசு - LED TV

N மௌனகுரு - கைதடி

3ஆம் பரிசு - Microwave Oven

P ஜனார்த்தனி - சுன்னாகம்

**4 - 10 ஆம் பரிசில்கள்**

ஆ.யோகராசா - சுதுமலை
அமிர்தநாயகம் - யாழ்ப்பாணம்
ஏ.அந்தோனிப்பிள்ளை - யாழ்ப்பாணம்
P.கேஷருன் - உரும்பிராய்
தி. ரதினி - சித்தங்கேணி
T. மயூரா - ஆறுகால்மடம்
தி. இரங்கநாதன் - புலோலி

**11 - 20 ஆம் பரிசில்கள்**

ந. மதீந்திராதேவி - மாசியப்பிட்டி
சி.சுதாகர் - சங்கானை / க.தனுசிகா - பளை
ஆ.நேசவதனி - தெல்லிப்பளை /
க.சிவாகரன் - பண்டத்தரிப்பு /
வி.குமுதா - கொக்குவில்
A.கார்த்திகா - கோப்பாய் / A.ரொமீனா - நாவாந்துறை / K.கஜீரன் - யாழ்ப்பாணம்
M.சுமந்திரன் - சுன்னாகம்

**21 - 30 ஆம் பரிசில்கள்**

ந.குமார் - மானிப்பாய் / க.பகிஷன் - சுதுமலை / பா.செல்வராணி - சுதுமலை / J.சர்மிலா - கொக்குவில்
S.நிரோஜன் - அன்னுங்கை /
M.முபாரிஸ் - யாழ்ப்பாணம் /
A. இஷானி - யாழ்ப்பாணம் /
ச.அருட்செல்வன் - வட்டுக்கோட்டை /
N.மௌனகுரு - கைதடி / Raj Motors - மானிப்பாய்

**31 - 40 ஆம் பரிசில்கள்**

B. முரளிதரன் - கந்தர்மடம் /
அ.சந்திரமலர் - சங்குவேலி /
க.திருச்செல்வம் - வட்டுக்கோட்டை /
செ.செந்தில்குமார் - கோப்பாய் /
செ.அனுஷ்டன் - கைதடி / T.ரஜித்தா - நவாலி / S.பிரவீனா - கோண்டாவில் / சு.சயந்தினி /
P.சேயோன் - தெல்லிப்பளை /
S.சகந்தன் - சாவற்கட்டு

(C-3134)


**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இலங்கைக்கு 73ஆவது இடம்

(கொழும்பு)

உயர் மனித அபிவிருத்தி வகுதியில் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் 73ஆவது இடம் கிடைத்துள்ளது.

2015 ஆம் ஆண்டின் மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் இந்த தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி 188 நாடுகளை மையப்படுத்திய தரப்படுத்தலில் இலங்கை படிப்படியாக முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி இலங்கையில் பெரும்பாலான அரச பணியாளர்கள 60 வயதில் ஓய்வு பெறுகின்றனர்.

எனினும் சுய தொழில் மற்றும் நாளாந்த பணியாளர்கள் பல வருடங்களுக்கு பணியாற்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தொழில்வாய்ப்பின்மை அதிகரிப்பு வீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி தற்போது அது 12 வீதமாக பதிவுப்பெற்றுள்ளது.

இந்த தரப்படுத்தலில்இலங்கை 73-வது இடத்தில் உள்ள நிலையில் இந்தியா 130-வது இடத்தில தரப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நோர்வே, அவுஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து ஆகியன முதல் ஐந்து இடங்களில் தரப்படுத் தப்பட்டுள்ளன. மிகவும்மோசமான புள்ளிகளை கொண்ட நாடுகளாக நைகர், எரிட்ரியா, புருண்டி போன்ற நாடுகள் தரப்படுத்தலில் கீழ் மட்டத்தில் உள்ளன. (எ-11)

## துயர் பகிர்கின்றோம்



திருமதி
பரமேஸ்வரி
பஞ்சலிங்கம்
(ஓய்வு நிலை
ஆசிரியர்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும் சுகிர்தரீச்சர் குடும்பம் N.P தேவராசா குடும்பம் (கனடா) ஆகியோரின் நெருங்கிய குடும்ப உறவுகளைக் கொண்டவருமாகிய திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு மனைவி திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(2986)

சுகிர்த ரீச்சர் குடும்பம்
N.P தேவராசா குடும்பம்

கனடா
லண்டன்
அவுஸ்திரேலியா
அமெரிக்கா (U.S.A)

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் வசிகரன்

(முகாமைத்துவ உதவியாளர் - புத்தூர் பிரதேச சபை

தோற்றம்
1982
-
11
-
22



மறைவு
2015
-
12
-
26

அல்வாய் தெற்கு, அல்வாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் வசிகரன் அவர்கள் 26-12-2015 சனிக்கிழமை காலமானார். அன்னார் பாலசுப்பிரமணியம் பாலபரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் வாமன் (லண்டன்), மயூரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(28/12/2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(C-3137)

தகவல் :-
குடும்பத்தினர்
0777433950


NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் 01.01.2016
வெள்ளி காலை 8.00 மணி
A/L 2018
கலை வர்த்தகம்
கணிதம் உயிரியல்
தொழில் நுட்பம்
Note: NEC கல்வி நிறுவனத்தின் 10 வருட நிறைவினை முன்னிட்டு 27.12.2015 தொடக்கம் 01.01.2016 வரைக்கும் அனுமதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதிக்கட்டணம் இலவசம்
புதிய அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.




## யாழ்.கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்

### மகர ஜோதி மண்டல விரத மண்டல பூஜை பெருவிழா

இன்று 27-12-2015 ஞாயிறு

நல்லூர் முன் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் இருமுடி கட்டி பாதயாத்திரை ஆரம்பித்து 18ம் படி ஏறி இரவு மண்டல பூஜையும் படிப்பூசையும் நடைபெறும்.

28-12-2015 காலை நெய் அபிஷேகம் நடைபெறும்

அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக

ஈழத்து சபரிமலை
தேவஸ்தானம்

(2987)


## வெற்றுக்காணி தேவை

யாழ் நகரில் இருந்து 5 KM சுற்று வட்டத்திற்குள் அமைந்த வெற்றுக் காணி ஒன்று குத்தகைக்கு தேவைப் படுகின்றது. (கைவிடப்பட்ட வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் இருப்பின் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு
N.Ravivarman
T.P 0776623824

(C-3133)

## காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் கோவில் பாதை ஆரம்பத்தில் 27 பரப்பு காணியும், உடைந்த வீடு கிணற்றுடனும் 7 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்களுக்கு:-0778730129

(2984)

MEGA SALE

MEGA SALE

ஆல் சிலோனின் அசத்தலான

MEGA SALE

ஞாயிற்றுக் கிழமைகளிலும் எமது அசத்தல் தள்ளுபடி

"விசாலமான காட்சி அறை உங்கள் எண்ணம் போல் தெரிவு"

தள்ளுபடி விற்பனை 2015

ஓய்வான நேரத்திலும் நீங்கள் ஓய்வின்றி தெரிவு செய்ய எண்ணற்ற கற்றல் உபகரணங்கள்

இச் சலுகை ஜனவரி 16ம் திகதி வரை மட்டுமே. விரையுங்கள்

அனைத்து வகை அப்பியாச கொப்பிகளும் 35% வரையான கழிவுடன் விற்பனையாகின்றன.

இந்திய நாவல்கள், உலக தலைவர்கள், சரித்திரக் கதைகள் அனைத்திற்கும் 10% முதல் தள்ளுபடி

பாடநூல்கள் 10% - 20% வரை கழிவு

அனைத்து வகை பாடசாலை உபகரணங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட

கையிருப்பு உள்ளவரை மட்டுமே. முந்துங்கள் வெல்லுங்கள்

வைட்போட், ஓவர்கெட்புறெயெக்டர், ஸ்கிறீன், கிறீன்போட், பிலிப்சாட் போட்கள்


பாடசாலைகள், அரச, தனியார் துறைகளுக்கான அனைத்து எழுது பொருட்கள், காகிதாதிகள் மிக குறைந்த வில்லையில் இலவச போக்குவரத்துடன்

"வாடிக்கையாளர் நலன் கருதி ஜனவரி 16-ம் திகதி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது வியாபார செயற்பாடுகள் இடம்பெறும்"

"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 5542, 021 5671527
acdil@ymail.com


## நினைவேந்தி நிற்கும் முதலாம் ஆண்டு

மலர்வு
09
-
02
-
1948



மறைவு
08
-
01
-
2015

அமரர் தங்கராசா ஜெயராசா

(ஜெயராசா படமாட உரிமையாளர்)


திதி : 28.12.2015

பன்னிரு மாதங்கள் பறந்தோடி சென்றதையோ
நினைவுகளை மட்டும் தந்துவிட்டு தவிக்கவிட்டு
சென்று விட்டீர் ஐயா!
விழிகளின் ஈரமென்னும் காயவில்லை
தூய்மையான உள்ளமும் கபடமில்லா நேசமும்
இவையிழந்து ஓராண்டுகள் சென்றதையா!
உம் கடமைகளைச் செய்யவென எமைவிட்டு சென்றதேனோ
பாசமிழந்து தவிக்கின்றனர் உம் மழலைகள்
காலங்கள் எத்தனை சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சில் நீங்காது அப்பா!
நீங்கள் காட்டிய அன்புப் பாதையில் என்றும்
நாம் தொடர்ந்திடுவோம்
என்றென்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டு...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓடக்கரை,
பருத்தித்துறை.

-குடும்பத்தினர்
தொ.பே : 0789426071

(சி-3136)



ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தால் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் நிகழ்வு நேற்று உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நடைபெற்றபோது.... (படங்கள்:-உ.சாளின்)

## போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து

# இராணுவ அதிகாரிகளை காக்கத் தவறியது அரசு

### பதறுகிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

**மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் உள்ளிட்ட முக்கிய இராணுவ அதிகாரிகளை போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து காப்பாற்ற அரசாங்கம் தவறியுள்ளதாக, குற்றம்சாட்டியுள்ள பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில. “விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரை முன்னெடுத்த இராணுவ அதிகாரிகள் இப்போது கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

போரை முடிவுக்கு கொண்டு வந்தவர்கள் மீதே போர்க் குற்ற விசாரணைகளை நடத்த தீர்மானித்துள்ளனர். குறிப்பாக மேஜர் ஜெனரல் ஜெகத்டயஸ் உள்ளிட்ட முக்கிய இராணுவ கட்டளை அதிகாரிகள் மீதான போர்க்குற்றச் சாட்டுகள் விடயத்தில், அரசாங்கம் அக்கறையின்றிச் செயற்பட்டு வருகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

எமது ஆட்சியில் இராணுவத்தினரை எவ்வாறு பாதுகாத்தோம் எனபது நன்றாகவே தெரியும்.

ஆனால் இன்று அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் இராணுவத்தை போர்க்குற்றவாளிகள் என நிரூபித்து மறுபுறம் விடுதலைப் புலிகளை நியாயப்படுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து செல்கின்றது என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்த அணிக்கு புதிய பெயர்

### அமைச்சர் சஜித் சூட்டினார்

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியான கூட்டு எதிர்க் கட்சிக்கு அமைச்சர் சஜித் பிரேமதாஸ புதிய பெயர்ஒன்றை சூட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்றகூட்டம்ஒன்றில்பேசிய அவர், கூட்டு எதிர்க்கட்சிக்கு கூட்டு அழிவு என பெயரிட்டு உரையாற்றினார். இதற்கு முன்னர் கூட்டு எதிர்க்கட்சியை சில ஊடகங்களும் நபர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அபயராம பிரிவு என குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில், அமைச்சர் பிரேமதாஸவின் கருத்துக்கு பதிலளித்துள்ள கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன, அமைச்சர் சஜித் பிரேமதாஸவின்புரிதல்தொடர்பில் இதன் மூலம் கேள்வி எழுவதாக தெரிவித்தார். (இ-7)

## போரை மறந்த சிங்கள மக்கள் மகிந்த கவலை



நாட்டில் போர் நடைபெற்றதை சிங்கள மக்கள் மறந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை வீரக்கெடிய கோனாதெனிய விஹாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மதவழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்டுள்ள அவர், பின்னர் மக்களை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் பேசிய அவர்,

நாட்டில் நிலவி வந்த பிரிவினைவாதப் போரை இன்று சிலர் மறந்து விட்டார்கள். இன்று நாட்டில் நடக்கும் விடயங்களை பார்த்தால் இதனை புரிந்து கொள்ள முடிகிறது என்றார்.

ஒரு காலத்தில் இந்த நாடு பயங்கரவாதத்தால் பீடிக்கப்பட்டு அழிவுகளை சந்தித்தது. அந்த அழிவுகளை யாரும் நினைவில் வைத்திருக்கவில்லை. இராணுவத்தினரின் தியாகத்தை மறந்து விட்டார்கள் என்றும் அவர் கருத்துரைத்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதியின் பேரனை நலம்விசாரித்த பாப்பரசர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வத்திக்கான் விஜயத்தின்போது அவரது புதல்வி சதுரிக்காவின் மகன் குறித்து புனித பாப்பரசர் நலம் விசாரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது மூத்த புதல்வி சதுரிக்கா மீது அளவு கடந்த பாசம் கொண்டுள்ளார். அதே போன்று சதுரிக்காவின் மகன் குறித்தும் ஜனாதிபதிக்கு தனிப்பாசம் உண்டு. தனது மூத்த பேரனை தன்னோடு அழைத்துக்கொண்டு செல்வது ஜனாதிபதிக்கு மிகவும் விருப்பமான ஒன்றாகும்.

இந்நிலையில் ஜனாதிபதியின் வத்திக்கான் பயணத்தின்போது புனித பாப்பரசரும் ஜனாதிபதியின் பேரன் குறித்து நலம் விசாரித்துள்ளார். அத்துடன் மிகவும் சூட்டிகையான பையன் என்றும் சிலாகித்துள்ளார். (இ-7)

## தாய்ப்பால் தொண்டைக்குள் சிக்கி இரண்டு மாத குழந்தை பலி

தாய்ப்பால் தொண்டைக்குள் அடைபட்டதன் காரணமாக சுவாசம் தடைப்பட்ட நிலையில் இரண்டு மாதக் குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

தம்புள்ளை, பன்னம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. சம்பவத்தில் கிஹான் மதுசங்க எனும் இரண்டுமாதக் குழந்தையொன்றே பலியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு குறித்த குழந்தை பல தடவைகள் தன் தாயிடம் தாய்ப்பால் அருந்தியுள்ளது. காலையில் குழந்தையின் தாயார் கண் விழித்துப் பார்த்தபோது குழந்தை மூச்சுப் பேச்சின்றி காணப்படவும உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். எனினும் அதற்குள்ளாக குழந்தையின் உயிர் பிரிந்திருந்தமை குறப்பிடத்தக்கது. (இ-7)

## அரசுக்கு ஆதரவு திஸ்ஸ அறிவிப்பு

நாட்டில் அனைத்து இன சமூகங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு தனது கட்சி ஆதரவளிக்கும் என முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை அவர் நடத்தியிருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், நாட்டில் இனங்களுக்கிடையிலான பிளவுகளை ஏற்படுத்தியது ஐக்கிய தேசியக் கட்சியே என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் காரணமாகவே நாட்டில் இனப்பிரச்சினையும், அதன் காரணமாக உள்நாட்டு யுத்தமும் ஏற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அதே ஐக்கிய தேசியக்கட்சி தற்போது இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முனனெடுத்து வருவதாகவும், அனைத்து இன சமூகங்களுக்கும் சம அந்தஸ்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அனைத்து இனங்களினதும் முக்கிய வைபவங்களை தேசிய விழாக்களாக கொண்டாட தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே இது உண்மையில் வரவேற்கத்தக்க விடயமாகும் என கூறிய அவர், அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு தமது தலைமையிலான சமசமாஜக் கட்சி என்றும் ஆதரவை வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பேஸ்புக் பயனாளர்களின் வயது தொடர்பில் அரசாங்கம் கவனம்

சமூக வலைத்தளமான பேஸ்புக்கை பயன்படுத்துவதற்கு குறைந்த பட்ச வயதெல்லையை நிர்ணயம் செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் நாட்டில் பேஸ்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க குறைந்தபட்ச வயதெல்லை ஒன்றை நிர்ணயம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளமான பேஸ்புக் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவிகள் பலர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகக்கூடிய அபாயம் அதிகளவில் காணப்படுவதனால் குறித்த திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## 27 வருட கடூழிய சிறைத்தண்டனைக்கு உள்ளானவர் நிரபராதியென விடுதலை

பாலியல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் 27 வருட கடூழிய சிறைத்தண்டனைக்கு உள்ளாகியிருந்த ஒருவரை மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. மரபணு பரிசோதனையின் அடிப்படையிலேயே இந்த விடுதலை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

10 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் குருநாகலை சேர்ந்த ஒருவருக்கு 2012ஆம் ஆண்டு குருநாகல் மேல்நீதிமன்றம் 27 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் புலிகள் பெரும் பணியாற்றினர்

## சிறிதரன் எம்.பி புகழாரம்

(யாழ்ப்பாணம்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது உலகமே வியக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும்பணியாற்றியிருந்தனர்.

இன்று எல்லாவற்றையும் இழந்த நிலையில் நிர்க்கதியாய் நாம் உள்ளோம். எனினும் உறுதி தளராது நம்பிக்கையுடன் தொடர்வோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் உடுத்துறையில் நடைபெற்ற சுனாமி அனர்த்தத்தின் பதினொராம்ஆண்டு நினைவு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை ஏற்பட்டு பதினொரு ஆண்டுகள் உருண்டோடிவிட்டது. ஆண்டுகள் பல கடந்த பின்னரும் எங்கள் தாய்மார்கள், தந்தைமார்கள் குழந்தைகள், தோழர்களின்நினைவுகளை மறக்க முடியவில்லை. ஆழிப்பேரலையின் கோரத்தால் ஆயிரக் கணக்கானவர்கள் நொடிப்பொழுதில் காணாமல் போயினர்.

எங்கள் உறவுகளை தேடி அனைவரும் அழுதோம், எமது வரலாற்றில் வாழ் நாளில் கேட்டிராத துயரத்தை ஆழிப்பேரலை பதிவு செய்தது. இதனால்தான் இன்றைய தினம் இவ்வளவு பேருடன் கூடியிருந்து எங்கள் நினைவுகளுடன் கண்ணீர் வடிக்கின்றோம்.

உடுத்துறை, தாளையடி, மணற்காடு மற்றும் கட்டைக்காடு போன்ற இடத்தில் உள்ள எமது உறவுகளை புதைத்த இடமெல்லாம் நினைவுகளை அனுஷ்டிக்கின்றோம். டென்மார்க்கில் வாழும் வடமராட்சி வாழ் மக்கள் இந்த நினைவாலயத்தை அமைத்து கொடுத்துள்ளார்கள்.

தமிழர் வரலாற்றில் சங்க காலம் முதல் உயிரிழந்தவர்கள் நினைவாக நடுகல் வழிபாடு மேற்கொள்வது மரபாக இருந்து வருகின்றது. இந்த நினைவு கற்கள் அவர்களுடைய வரலாற்றை எடுத்து இயம்பி உள்ளது. அந்த வகையில் இந்த நினைவாலயத்தை அமைத்து கொடுத்த டென்மார்க் உறவுகளுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

இது நினைவுகள் மட்டுமல்ல, இதற்கு பின்னர் பெரும் சரித்திரங்களே உள்ளன. சுனாமி அனர்த்தத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார்கள்.

உலகமே பார்த்து மெச்சக்கூடிய வகையில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் சுனாமி திட்டத்துக்காக இலங்கை வந்தபோது தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் பொறுப்பாளராக இருந்த ரெஜியை சந்தித்து நன்றியை தெரிவித்திருந்தார்.



நீங்கள் பெரும்பணியை சுனாமி அனர்த்தத்தின் போது ஆற்றியிருந்தீர்கள் என அமெரிக்க ஜனாதிபதி ரெஜியிடம் கூறியிருந்தார். யாருமே ஆற்ற முடியாத அளவுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது படையணியை வைத்து அனர்த்த முகாமைத்துவம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில்தான் இந்த நினைவு தூபி (உடுத்துறை) அமைக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வனால் திறந்து வைக்கப்பட்டது. இது தற்போது மறைக்கப்பட்டுள்ளது.

அதில் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் மறைக்கப்பட்டாலும் அவர்களின் நினைவுகள இந்த இல்லத்தில் இருக்கின்றன என்பதனை நான் நினைவு படுத்துகின்றேன்.

சுனாமியில் உயிரிழந்தவர்கள் மட்டுமல்ல விடுதலைப் போரில் உயிரிழந்தவர்களையும் தான் நாம் நினைத்து அழுகின்றோம் என்பதனை வெளியே சொல்ல முடியாத நிலையில் உள்ளோம் என்றார் சிறிதரன். (எ-4)

# 2010இற்கு முன்னரான மோசடி குறித்தும் விசாரணை

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம்

(கொழும்பு)

2010ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தக் கூடிய வகையில் பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட உள்ளது.

பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் குறித்த ஜனாதிபதி ஆணைக் குழு தற்போது 2010ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பிலேயே விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் 2010ஆம் ஆண்டுக்கு முன்னர இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஆணைக்குழுவுக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2010 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையிலான மோசடிகள் தொடர்பில விசாரணை நடத்துவதற்கே ஆணைக்குழுவுக்கு தற்போதைக்கு அதிகாரம் காணப்படுவதாக ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்னைய காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்த அதிகாரம் அளிக்கும் வகையில் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறித்த சட்டங்களில் திருத்தம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2010ஆம் ஆண்டுக்கு முன்னதாக இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்த முறைப்பாட்டு அறிக்கை ஒன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார். (எ-11)


**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 42ஆவது வீதியில் 3-ம் இல. தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/ கிழமை/ மாத வாடகைக்குண்டு.

தொடர்பு:-0778378597 (2989)

**ALL OUT**
**Pest Control Service**



கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
ந.ரூபகாந்த்
077 151 5897. 021 499 3200

**உடனடி வேலைவாய்ப்பு**

சுத்தப்படுத்தல் வேலைகள் ( Cleaning )
ஆண், வயது 18-40
நிறுவனம் : பிரெஞ்சு மொழி கற்பிக்கும் சர்வதேச தனியார் நிறுவனம்

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri Nallur Road, Jaffna.
Phone : 021 222 8093 (8am-5pm இடையில் அழைக்கவும்)
(2983)

**பதவி வெற்றிடம்**

**Mobile Application Developers for iphone and Android platform**

யாழ்ப்பாணத்தில் Student Success Centreஇனை தளமாக கொண்டு இயங்கும் USA நிறுவனம் ஒன்றிற்கு Software Development துறையில் ஆர்வம் உள்ள பின்வரும் தகைமை உடையவர்கள் இப் பதவி வெற்றிடத திற்கு விண்ணப்பிக்கலாம்.

- Java அல்லது Object Oriented Language தெரிந்தவராக இருத்தல் வேண்டும.
- Swift language இல் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- Software Development துறையில் ஆர்வமுள்ளவராகவும்,புதிய தொழிலநுட்ப விடயங்களை கற்பதில் அக்கறை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- User interface designs இல் திறமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. உங்கள் சுயவிபரக்கோவையினை பின்வரும் email முகவரிக்கு எதிர்வரும் 30/12/2015ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

(சி-3139)


**Student Success Centre,**
320, main street, Jaffna.
021 221 55 69, 021 49 266 55, 077 00 800 75, 077 61 694 70
email address – sscjaffna@gmail.com

**ஒத்து மாறல்**

வடக்கு மாகாணத்தில் குடும்ப நல உத்தியோகத்தராக கடமையாற்றும் ஒருவர் குறித்த பதவியில் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்புகளுக்கு : (C-3141)
0772301587


## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நவரத்தினம்

புளியங்கூடல் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரத்தினம் 25.12.2015இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லைற் வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, சிவகடாட்சம் மற்றும் இராசரத்தினம், இராசலட்சுமி, அமரர் மகாதேவா மற்றும் அமிர்தாதேவி, சிவசுப்பிரமணியம், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மைத்துனர்
தி.ஞானசம்பந்தன்.
0776162092

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.
(சி-3138)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு மனைவி திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொழும்பு பழைய மாணவர்கள் சங்கம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(சி-3142)

# மரண அறிவித்தல்

## செல்வி சின்னத்துரை திலகவதி



விஷ்ணு மகால் வண்ணாங்கேணி பளையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வி சின்னத்துரை திலகவதி அவர்கள் (25.12.2015) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செயமன் சின்னத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சபாரட்ணம் (கொழும்பு), கனகம்மா, அமரர் தர்மலிங்கம் மற்றும் செல்வநாயகி (கொழும்பு), லயன் சுந்தரலிங்கம் (கிருஷ்ணா சிவில் என்சினியரிங், கென்ஸ்ரக்சன்), நாகலிங்கம், அமரர் மகாலிங்கம் மற்றும் பூரணம் (துன்னாலை), தங்கமலர் அமரர் குணரட்ணம் மற்றும் டெய்சிராணி (கனடா), சண்முகரட்ணம் (கனடா), டயாளினி (லண்டன்), அமரர் சித்திரவதனி மற்றும் ரூபவதனி (கனடா), குபேதரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பற்றிமாவின் வளர்ப்புத்தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (27.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் விஷ்ணு மகால் A9 வீதி வண்ணாங்கேணி பளையில்' உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக மலையான் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

'விஷ்ணு மகால்'
A9 வீதி, வண்ணாங்கேணி, பளை.
077 725 0584, 077 374 8596

(2985)

தகவல் :
குடும்பத்தினர்

# வடமாகாணசபை நியமித்த நிபுணர்குழு தெளிவானபதிலைக் கூறத்தவறியுள்ளது

## மாக்சிச—லெனினிசக் கட்சி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்னிலையத்தைச் சூழவுள்ள நான்கு பிரதேசச் செயலகப் பிரிவுகளிலுள்ள கிணறுகளில் ஏற்கனவே கழிவு எண்ணெய் கலந்ததால் மாசடைந்துள்ள நீரினை குடிக்கலாமா இல்லையா என்பதற்கு மாகாணசபை நியமித்த நிபுணர்குழு தெளிவான பதில் கூறத் தவறியுள்ளது. அதன்மூலம் நிபுணர்குழு மக்களுக்கு உண்மையை மறைக்க முற்படுகிறதா? என்ற ஐயம் எழுந்துள்ளது. எனவே மாகாண சபையும் மத்திய அரசும்மௌனம் சாதிக்காது மக்களுக்கு உரிய பதிலை வழங்க வேண்டும்.

இவ்விடயத்தில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு மக்களில் தூய நீர் பெறும் உரிமையை உறுதி செய்யவேண்டும் என்பதை மக்கள் சார்பில் வலியுறுத்துகிறோம். இவ்வாறு நிபுணர்குழு வெளியிட்டுள்ள அறிக்கை பற்றி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக சுன்னாகம் மின்னுற் பத்தி நிலையத்தைச் சுற்றியுள்ள நான்கு பிரதேச செயலகங்களின் கீழுள்ள பகுதிக ளில் ஐந்நூறு வரையான நன்னீர்க் கிணறு கள் எண்ணெய்க் கழிவால் மாசடைந்துள் ளன. இதனை மக்கள் சார்பு அமைப்புகள் வெளிக்கொணர்ந்து தூய நீர் வேண்டியும் கழிவு எண்ணெய்க் கலப்புக்குக் காரணமான வர்களைக் கண்டறியும் படியும் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தனர். நீர்வழங் கல் வடிகாலமைப்பு அதிகாரசபையும், தூய நீருக்கான செயலணியும் கழிவு எண்ணெய் கலந்திருப்பதை சுட்டிக்காட்டி நீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல என்றே அறிக்கை வெளியிட்டன.

கழிவு எண்ணெய் நிலத்தடி நீரில் கலந்த விடயம நீதிமன்றம் வரைசென்றது. "நொதேர்ன பவர்" எனும் மின்னுற்பத்தி செய்யும் பல் தேசியக் கம்பனி மீதே கழிவுஎண்ணெய்க் கலப்புச் சந்தேகம் எழுப்பப்பட்டது. இந் நிலையிலேயே மாகாண சபை இதற்கான நிபுணர் குழுவை நியமித்திருந்தது. இந்நிபுணர் குழுவின் முதற்கட்ட அறிக்கையானது தளம்பலாகவே காணப்பட்டது. இப்போது வெளியிடப்பட்டிருக்கும் இறுதி அறிக்கையும் உண்மையை மறைப்பது போன்றே காணப்படுகிறது. இந் நிபுணர் குழு அறிக்கையானது மாசடைந்த சுன்னாகம் நிலத்தடிநீர் குறித்து பேசாது, குடாநாட்டு நிலத்தடி நீரில் மலக் கழிவுகளும் நைத்ரேட்டுக்களும் கலந்திருப்பது பற்றியே சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் மூலம் மாகாண சபை நியமித்த நிபுணர்குழு உண்மைகளை மறைக்க முயல்வதாகத் தோன்றுகிறது. அதேவேளை மாகாணசபையும் அமைச்சர் வாரியமும் மௌனம் காத்துவருவதன் மூலம் மக்கள் மத்தியில் சந்தேகம் வலுப்பெற்று வருகிறது. இந்நீர் மாசடைந்தமை பற்றி எமது கட்சி கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம் மூலம் எடுத்துரைத்திருந்தது. இது பற்றிய நடவடிக்கையை நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு எடுக்கும் எனவும் ஜனாதிபதி செயலகம் எமக்குத் தெரிவித்திருந்தது. ஆனால் இதுவரை இப்பிரச்சினைக்கு தீர்வு எதுவும் காணப்படவில்லை. எனவே மாகாண சபையும் மத்திய அரசும் மக்களுக்கு தூய நீர் பெறுவதற்கான வழிவகைகளை செயற்படுத்த வேண்டுமென எமது கட்சி வலியுறுத்துகிறது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# புதிய காலைக்கதிர் சஞ்சிகை வெளியீடு

காலையடி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்ற மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் சிறுவர் சஞ்சிகையான புதிய காலைக்கதிர் சஞ்சிகையின் ஆறாவது இதழ் வெளியீட்டு நிகழ்வும், கடந்த 2014 க.பொ.த. சா.தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான அமரர் வை. சிவஞானம் ஞாபகார்த்தப் பரிசில் வழங்கலும் தரம் 5 மாணவர்களுக்கான ஊக்குவிப்புப் பரிசு வழங்கலும், விசேட கலை நிகழ்வும்நாளை திங்கட்கிழமை பிப 4.30 மணியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராசா மகேந்திரன் குடும்ப உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக மறுமலர்ச்சி மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரும், கனடா நாட்டில் வசிக்கும் பிரபல தொழிலதிபருமான தியாகராசா யோகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

# 70 வீதமான உயிரிழப்புகளுக்கு தொற்றாத நோய்களே காரணம்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் நிகழும் மரணங்களில் சுமார் 70 வீதமானவற்றிற்கு தொற்றாத நோய்களே காரணமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொற்றாத நோய்கள் சுகாதாரத் துறைக்குள் காணப் படுகின்ற முக்கிய சவாலாகும் என சுகா தார சேவைகள் பணிப்பாளர் நாயகம், டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

பண்டிகைக்காலத்தில் அதிகளவில் சக்கரை மற்றும் எண்ணெய்த் தன்மையுடைய உணவுகளை உட்கொள்வதை தவிர்க்குமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இதுதவிர பண்டிகைக் காலத்தை முன்னிட்டு உறவினர் வீடுகளுக்கும், தூர இடங்களுக்கான பயணங்களையும் மேறகொள்ளும் போது உடல்நலனுக்கு ஏற்ற பழங்கள் போன்ற உகந்த உணவுகளை எடுத்துச் செல்லுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழ்ச்சங்க நாவலர் விழா இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கவுள்ள நாவலர்விழா இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் பேராசிரியர் மா. வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் 'நாவலர் கனவு' என்ற பொருளில் அமைந்த சிறப்புரை, கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நாவலர் பணிகளில் இன்றைய காலத்தில் வலியுறுத்தப்படவேண்டிய பணி தொடர்பான கருத்தாடற்களம் சிறுவர்களும் முதியவர்களும் நகைச்சுவையுடன் நாவலரை விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் அமைந்த சிறுப்பிட்டியூர் கலைமாமணி சத்தியதாஸ் குழுவினரின் வில்லுப்பாட்டு என்பன இடம்பெறவுள்ளன. (இ-7)

# இராசி பலன்

27.12.2015
(மார்கழி 11, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு,
துதியை பிற்பகல் 4.29 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 1.13 மணிவரை
இராகுகாலம் 4.57-6.27 மணிவரை
சுபநேரம் 9.27-10.57 மணிவரை
பரசுராம ஜெயந்தி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம்<br>காலை 6.45 இற்கு<br>கடக-சந் | | சந் |
| | | | |
| சூரி<br>புத | சனி<br>சுக் | | குரு<br>ராகு<br>செவ் |

**மீனம்**: தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மைதரும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும்.

**மேடம்**: சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்**: தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்தாசைகள் கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு குதூகலம் தரும்.

**மிதுனம்**: நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கும்பம்**: கடன் பிரச்சினைகளைத் தீர்க்க புதிய வழியைக் கையாள்வீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், மறைமுக போட்டிகள் மாறும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**கடகம்**: விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம், ஆழ்ந்த சிந்தையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்**: நினைத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில்நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை அமையலாம்.


**தனுசு**: கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்**: பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், மகிழ்ச்சி தரும் விதத்தில் தொலைபேசி அழைப்புகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.


**துலாம்**: எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**கன்னி**: பயணங்கள் செல்ல எடுத்த முயற்சிகள் கைகூடும், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பொருளாதார நிலை உயரும், போசன சுகமுண்டு.

# அலையோடு அள்ளுண்டு போன உறவுகளை நினைந்து...





உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில்













உடுத்துறை




புலோலி




மணற்காடு



உலகையே உலுக்கிய சுனாமி அனர்த்தத்தின் 11ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தால் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் நிகழ்வு நேற்று வடமராட்சி கிழக்கு உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் மணற்காடு, புலோலி, சூசையப்பர் ஆலயம் உள்ளிட்ட இடங்களில் பல்லாயிரக்கணக்கான உறவுகளின் கதறல்களுடன் நடைபெற்றது. (படங்கள்:-சாளின், மகாலிங்கம், செழியன்)

# வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலர்

## வெளியீட்டு விழா 27.12.2015

## அழைப்பிதழ்

காலம்:-27.12.2015 ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 2.00 மணி
இடம்:- வியாவில், ஐயனார் தேவஸ்தானம், காரைநகர்

**தலைமை**

திரு.ப. விக்னேஸ்வரன் (ஓய்வு நிலை வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர்)

**பிரதம விருந்தினர்**

சி.வி.கே. சிவஞானம் (சபை முதல்வர், வட மாகாண சபை)

**நிகழ்ச்சி நிரல்**

**மங்கல இசை**

விக்னேஸ்வரன் சித்தார்த்தன் , விக்னேஸ்வரன் பிரதித்தன்

**மங்கல விளக்கேற்றல்**

கல்விக் கொடையரசு திரு. திருமதி.சண்முகம் சிவஞானம் தம்பதிகள்
கல்விக்காருண்யன் திரு.திருமதி.E.S.P.நர்கரத்தினம், தங்கமலர் தம்பதிகள்

**திருமுறை ஓதல்**

கலாபூஷணம் கே.எஸ். சிவஞானராஜா

**திருப்புகழ் இசை**

சித்தவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி செ.லோகநாதன் (மன்னார்)

**வரவேற்புரை**

கலைஞானகேசரி திரு.க. சோமசேகரம் (அறங்காவலர், ஐயனார் தேவஸ்தானம், வியாவில்)

**ஆசியுரை**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)
பிரம்மச்சா-ரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் ( சின்மயா மிஷன் யாழ்ப்பாணம் )
சிவத்திரு. வி. ஈஸ்வரக்குருக்கள் ( பிரதமகுரு, ஈழத்துச் சிதம்பரம், காரைநகர் )
சிவத்திரு. சபா. வாசுதேவக் குருக்கள் (வீணாகான குருபீடம் குருமார் சந்நிதானம், சித்தங்கேணி )

**தலைமையுரை**

பிரதம விருந்தினர் உரை,சிறப்பு விருந்தினர் உரை
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
(யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னைநாள் தலைவர்)
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
(ஓய்வுநிலை பேராசிரியர், யப்பான் கச்சுயின் பல்கலைக்கழகம்)
வே. முருகமூர்த்தி (அதிபர், யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்)
ந. விஜயசுந்தரம் (ஆசிரியர் வலம்புரி )
கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தி (பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

**வெளியீட்டுரை**

பேராசிரியர் க. தேவராஜா (யாழ். பல்கலைக்கழக வணிகபீட முன்னைநாள் பீடாதிபதி

**நூல் வெளியீடு**

மலர் ஆசிரியர் பா. துவாரகன், பிரதம விருந்தினருடன் இணைந்து நூலை
வெளியிட முதற் பிரதியை
கல்விக்காருண்யன் திரு.E.S.P. நாகரத்தினம் J.P அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

**சிறப்புப் பிரதி வழுங்கல்**

கல்விக் கொடையரசு திரு. சண்முகம் சிவஞானம்
இராசநாயகம் முருகதாசன் (இலண்டன்)

**நூல் மதிப்பீடு**

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்
(அறங்காவலர், பொன்னாலை சித்திவிநாயகர் தேவஸ்தானம்)

**நூல் நயப்புரை**

கலாபூஷணம் தருமபூபதி சிதம்பரநாதன்

**ஏற்புரை**

நூலாசிரியர்

**நன்றியுரை**

தெய்வத் தமிழிசைக் கவிஞர், இராசையா குகதாசன்

பேரன்புடையீர்!

**கலாநிதி பண்டிதர் க.வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலர் சிறப்புப்பிரதி பெறுதல்**

கலாநிதி பண்டிதர் க.வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலர் 500 பக்கங்களில் 2000 ரூபா செலவில் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் மூன்றாவது "ஞானதானம்" ஆக வெளியிடப்படவுள்ளது.

27.12.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வியாவில் ஐயனார் கோயிலில் நடைபெறவுள்ள நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து தாங்களும் ஒரு சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மேற்படி ஆலயம் மேற்கொண்டு வரும் பல்வேறு அறப்பணிகளுக்கும் திருப்பணிகளுக்கும் தங்கள் மேலான ஒத்துழைப்பை வழங்கி ஐயப்பன் அருள்பெற்றுய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

ஐயனார் தேவஸ்தானம்,
வியாவில், காரைநகர். (சி-3117) அறங்காவலர்

## சான்றிதழ் வழங்கலும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மூன்று மாதகாலக் கற்கைநெறி பூர்த்திச் சான்றிதழும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணியளவில் யாழ். பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி குருகுலத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெட்சுமி தலைமையில் இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக சமஸ்கிருத ஆசிரியர்கள் பிரம்ம ஸ்ரீ ப. சிவானந்தசர்மா, பிரம்மஸ்ரீ சு.நவநீதகிருஷ்ஸணசர்மா, சிங்கள ஆசிரியர் க. சரவணமுத்து, ஆங்கில ஆசிரியர்சி.ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக கணக்காளர் எம்.ஜி காண்டீபன், உதவிப் பணிப்பாளர் ஆர்.கர்ஜன், திருமதி ஹேமலோஜினி குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

டயானா பிளாஸ்டிக் மீள்சுழற்சி
பழைய பொலித்தீன் மற்றும் பழைய பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்.
TP: 021 222 8680,
077 592 5088
(சி-3042)

### திருவாசக முற்றோதல்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரம் கண்ணகியம்மன் ஆலயங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.(இ

ரலண்ட் அக்கடமி
(மல்லாகம் சந்திக்கு கிழக்குப் புறமாக) (077 214 0675)
அனைவருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்!
எங்குமில்லாத மிகவும் குறைந்த கட்டணத்தில் வேலை வாய்ப்புடன் கூடிய
கணனிக் கல்வி (ஆங்கில மொழி தமிழ்மொழி)
(அனைத்து கணனிக் கற்கைகளும் ஆரம்பம்:
27.12.2015 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு
(100 பேருக்கு மாத்திரம் அனுமதி
மாதாந்தம் மிகவும் குறைந்த கட்டணம் 350/= இலிருந்து..
(2957)

### ஆண்டு நிறைவு விழா

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (இ-5)

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்

அதிகளவு சீனிப் பண்டங்களை உண்பதால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம். (2967)

**Sugar Kills, Consume with care**

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 08
உயரம்:163cm
தகைமை/தொழில்:பொறியியலாளர்/ தனியார் தொழில் கட்டார்
தொ.இ: B/5317

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 28 செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/பூசகர்
எதிர்பார்ப்பு: பூசகர்
தொ.இ: B/5318

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 48
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSC, MSC/ பொறியியலாளர் கட்டார்
தொ.இ: B/5319

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 60 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/Lசுவிஸ் PR
தொ.இ: B/5321

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 60 சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5322

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 15 செவ் 8 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்:HND
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5323

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 10 1/2
உயரம்: 160cm
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5324

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 27
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:மருத்துவபீட மாணவி
தொ.இ: G/5329

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# அடக்கத்தின் அற்புதம் வைத்தீசுவர குருக்கள்




வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு அடிப்படை எது என்று ஆராய்ச்சி செய்தால் தூய மனமே என்பதனை அறியலாம். தூய மனம் உள்ள இடத்திலே உண்மை அன்பு ஒளிரும். அந்த அன்பு நிலைப்பட்ட வாழ்வே உண்மை வாழ்வாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உயர்ந்த மனிதர்கள் தங்களிடம் இருந்த அத்தனை சக்திகளையும், சுயநலமின்றிப் பிறருக்கே அர்ப்பணம் செய்துள்ளார்கள். அவ்வகையில் மனத்தூய்மையுடன் சுயநலமின்றிப் பிறருக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த செம்மனச் செம்மலே வைத்தீசுவர ஐயா. பொதுநல நோக்குடன் அடக்கத்துடன் சாந்த சொரூபியாக வாழ்ந்தவர, பழக இனியவர், பண்புக்கு இருப்பிடம்.

அகத்தின் அழகு முகத்திற் தெரியும் என்பதற்கிணங்க மலர்ந்தமுகம் அனைவரையும் அரவணைக்க வல்ல குளிர்ந்த பார்வை நேரிய பாதையில் செல்லும் போக்கு உள்ளத்தை வசமாக்கும் இனிய வார்த்தைகளை உடையவரே எங்கள் வைத்தீசுவர ஐயா.

**இன்றைய தினம் 27.12.2015 காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் "வைத்தீசுவரக் குருக்கள் நூற்றாண்டு மலர:" வெளியிடப்படுவதை சிறப்பிக்கும் முகமாக இக்கட்டுரை பிரசுரமாகிறது**

காரைநகரில் தமிழ் வளர்ச்சிக்கழகம் ஒன்றை நிறுவி, மாணவர்களின் தமிழ்மொழிக்காக அருந்தொண்டாற்றியவர். வேதாகமங்களில் அறிவு பெற்றவர். காரைநகரில் மணிவாசகர் சபையினை நிறுவி சைவ சமயத்திற்கு அருந்தொண்டாற்றியவர். ஈழத்துச் சிதம்பரத்தை சிவபூமி ஆக்குவதில் பெரும் பங்காற்றியவர்.

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழ் சங்கத்தை நிறுவ முன்னின்று உழைத்தவர். அத்துடன் அங்கு பண்டிதர் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் இலவசமாகக் கற்பித்தவர்.




பல சைவத் தமிழ்நூல்களை இலகு தமிழில் உருவாக்கி வெளியிட்டவர். இதனால் மாணவர்கள் இலகுவாகத் தமிழ் அறிவையும், சைவ வாழ்வின் சிறப்பையும் அறியும் வகை செய்தவர்.

ஈழத்துச் சிதம்பர ஆலயத்துக்குச் சமீபமாக தன் வசிப்பிடத்தை ஆக்கி அங்கு குருகுலக் கல்வியை நடத்தியவர். உலகில் அறிஞர்கள் பலர் உள்ளனர். அவர்கள் எல்லோரும் பண்பாளர்களாக வாழ்கின்றார்களா என்பது கேள்விக்குறி. ஆனால் ஐயா அவர்கள் கசடறக் கற்று அதன் வழியில் அடக்கத்துடன் நின்றொழுகிய பெருமைக்குரியவர்.

இறைவன் அன்புள்ளத்தையே விரும்புவன் என்பதை சுவாமி விபுலானந்தர் 'உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்று குறிப்பிடுவது இவருக்குப் பொருத்தமானது. அந்த வகையில் என்றும் அன்பு ததும்பும் சிரிப்பை தன் உடமையாகக் கொண்ட செம்மனச் செல்வராகிய ஐயா வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மையும் அவ்வழி நடக்க உழைத்த சான்றோர் ஆவர். அவர் தான் செய்யும் பணிகளை ஆரவாரமில்லாமல் ஆற்றியமையால் அவர் பணி சிவப்பணியாகத் திருத்தொண்டாகச் சைவத்தமிழர்களால் போற்றப்படுகின்றது. உண்மையில் அடக்கத்தின் அற்புத வடிவாக ஐயா விளங்கியமை அவருடன் பழகியவர்களுக்குத் தெரிந்த ஒன்று. அடக்கத்தின் அற்புதமான அவர் வாழ்வைப் போற்றிப் பாராட்டுவோம்.

**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**இந்து நாகரிகத்துறை,**
**யாழ்.பல்காலைக்கழகம்**

## 12.2015 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 537 - ஹேகியா சோபியா கட்டி முடிக்கப்பட்டது.
- 1703 - இங்கிலாந்துக்கு வைன்களை இறக்குமதி செய்வதற்கு போர்த்துக்கீசருக்கு தனியுரிமை வழங்கு ஒப்பந்தம் இங்கிலாந்துக்கும் போர்த்துக்கல்லுக்கும் இடையில ஏற்பட்டது.
- 1831 - சார்ல்ஸ் டார்வின் உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுக்காக தென்அமெரிக்கா நோக்கிப் புறப்பட்டார்.
- 1836 - இங்கிலாந்தின் வரலாற்றில் மிக மோசமான புயல் சசெக்ஸ் நகரில் இடம்பெற்றது. 8 பேர் கொல்லப்பட்டனர்.
- 1845 - பிள்ளைப் பேறுக்கு ஈதர் மயக்க மருந்தாக முதற் தடவையாக ஐக்கிய அமெரிக்காவில் ஜோர்ஜியாவில் பயன்படுத்தப்பட்டது.
- 1864 - இலங்கையில் முதலாவது தொடருந்து சேவை கொழும்புக்கும், அம்பேபுசைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1911 - இந்தியாவின் தேசியப் பண் ஜன கண மன முதன்முதலில் கல்கத்தா நகரில் இசைக்கப்பட்டது.
- 1918 - ஜேர்மனியருக்கெதிரான பெரும் எழுச்சி போலந்தில் ஆரம்பமானது.
- 1922 - ஜப்பானின் ஹோஷோ உலகின் முதலாவது விமானம் தாங்கிக் கப்பலாக பாவிக்கப்பட்டது.
- 1923 - ஜப்பானிய மாணவன் ஒருவன் இளவரசர் ஹிரோஹிட்டோவைக் கொல்ல முயற்சித்தான.
- 1934 - பேர்சியா ஈரான் என்ற பெயரைப் பெற்றது.
- 1939 - துருக்கியில் ஏர்சின்கன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 30,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1945 - 28 நாடுகளின் ஒப்புதலுடன் உலக வங்கி உருவாக்கப்பட்டது.
- 1949 - இந்தோனீசியா ஒன்றுபட்ட விடுதலை பெற்ற நாடாக நெதர்லாந்து அறிவித்தது.
- 1956 - தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- 1968 - சந்திரனுக்கான முதலாவது மனித விண்வெளிப்பயணக் கப்பலான அப்பல்லோ 8 பாதுகாப்பாக பசிபிக் கடலில் இறங்கியது.
- 1978 - ஸ்பெயின் 40வருட கால சர்வாதிகார ஆட்சியின் பின்னர் ஜனநாயக நாடானது.
- 1979 - சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியது. ஜனாதிபதி ஹபிசுல்லா அமீன் சுட்டுக்கொல்லப்பட்டு பப்ராக் கர்மால் தலைவரானார்.
- 1996 - தலிபான் படைகள் ஆப்கானிஸ்தானில் பக்ராம் வான்படைத் தளத்தைக் மீளக் கைப்பற்றினர்.
- 1997 - வடக்கு அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து துணை இராணுவக்குழுத் தலைவர் பில்லி ரைட் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2000 - யாழ்ப்பாணம், தென்மராட்சி மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற எட்டு பொதுமக்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2007 - பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனசீர் பூட்டோ ராவல்பிண்டியில் தற்கொலைக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

- 1571 - ஜொஹான்னெஸ் கெப்லர், ஜேர்மானிய அறிவியலாளர் (இ. 1630)
- 1654 - ஜேக்கப் பெர்னோலி, சுவிஸ் கணிதவியலாளர் (இ. 1705)
- 1796 - மிர்சா காலிப், உருதுக் கவிஞர் (இ. 1869)
- 1822 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர் (இ. 1895)
- 1901 - மர்லீன் டீட்ரிக், அமெரிக்க நடிகை, பாடகி (இ. 1992)
- 1945 - டேவிட் ராஜேந்திரன், ஈழத்து வானொலி, மேடை நாடகக் கலைஞர் (இ. 2013)
- 1965 - சல்மான் கான், இந்தி நடிகர்

### இறப்புகள்

- 1922 - தாமஸ் வில்லியம் ரைஸ் டேவிட்ஸ், பாளி அறிஞர் (பி. 1843)
- 1923 - அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ்சுப் பொறியியலாளர் (பி. 1832)
- 1979 - ஹஃபிசுல்லா அமீன், ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி (பி. 1929)
- 2007 - பெனசீர் பூட்டோ, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் (பி. 1953)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 170 | 240 | 260 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 650 | 800 | 800 | 800 |
| தக்காளி | 140 | 100 | 120 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 50 | 40 |
| கோவா | 150 | 160 | 140 | 150 | 200 | 150 |
| கரட் | 220 | 300 | 220 | 200-400 | 280 | 200 |
| பூசணி | 70 | 60 | 35 | 50 | 60 | 50 |
| புடோல் | 140 | 150 | 100 | 120 | 160 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 50-60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 140 | 100 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 350 | 400 | — | 400 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 100 | 200 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 260 | 300 | 200 | 240 | 240 | 250 |
| லீக்ஸ் | 150 | 200 | 120 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 200 | 300 | — | — | 300 | — |
| கறிமிளகாய் | 400 | 600 | — | 300 | 1000 | 500 |
| முருங்கைக்காய் | 450 | — | — | — | — | — |
| போஞ்சி | 330 | — | — | 360 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | — | 150 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 40 | 60 | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 200 | 80 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25 | 50 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 200 | 100 | 160 | 160 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 250 | — | 280 | — | 300 |
| முள்ளங்கி | 140 | 100 | — | 100 | 120 | 140 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 25 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | — | 50 | 80 | — |

# தேடுங்கள் கண்டடைவீர்கள்; தேவனின் மொழி இது எனவே எமது தேடல்...?



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்

மனித வாழ்க்கையில் தேடல் இல்லையேல் பொருளில்லை எனலாம். இலட்சியப் பாதையில் இத்தேடல் மனிதனுக்கு மனிதன் மாறுபடுகின்றது. வாழ்வை சுவையாக்கிக் கொள்ள மனிதன் தேடல்களை அதிகரித்துக் கொண்டே செல்கின்றான்.

### தேடல்கள் பலவிதம்

கவிஞனின் தேடல் மனதில் கற்பனை. காதலனின் தேடல் வாழ்வில் காதலி. கலைஞனின் தேடல் பார்வையில் அழகு. விஞ்ஞானியின் தேடல் உலகில் புதிய கண்டுபிடிப்பு. உளவியலாளரின் தேடல் உள்ளத்தில் அமைதி. பக்தனின் தேடல் பாருலகில் பரம்பொருள். எனவே பல்வேறு காரணங்களுக்காக பலவிதமான தேடல்கள் மனிதனில் புதைந்து கிடக்கின்றன.

### ஒவ்வொன்றும் ஒருவிதம்

தேடலில் மையங்கொண்ட மனித வாழ்க்கை மனிதனுக்கு மனிதன் மாறுபட்டாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதத்தில் அமைகின்றது. தங்கள் வாழ்வில் இறைவனைத் தேடியவர்கள் பலர். கண்டு கொண்டவர்கள் சிலர். முதல் கிறிஸ்மஸ்'க்கு சற்று முதல் இறைவனைத் தேடியவர்களுள் மரியாவும், எலிசபெத்தும் முக்கியமானவர்கள். அவர்களுக்கு இறைவன் அதிகமாகத் தேவைப்பட்டார். குழந்தைப்பேறு இல்லாமல் தவித்த எலிசபெத், தன் சொந்த வாழ்வின் குறையைத் தீர்க்க இறைவனை தேடினார். மரியா என்ற இளம்பெண்ணும் தன் சொந்தத் தேவைகளைக் காட்டிலும், சமுதாயத்தின் தேவைகளுக்காக இறைவனைத் தேடினார். அவர் வாழ்ந்த காலத்தில், யூதேயா முழுவதும் உரோமைய ஆதிக்கம், அராஜகம் அடக்குமுறை அதிகம். எந்நேரத்திலும் இளம் பெண்களுக்கு படைவீரர்களால் ஏற்படும் ஆபத்துகள் ஏராளம். தம் சொந்த நாட்டிலேயே சிறையிலடைக்கப்பட்டதைப் போல் பெண்கள் வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்த மரியா இறைவனைத் தேடினார். தேடிய கடவுளையே கருவினில் தாங்குமாறு, தாயாகுமாறு அவரை அழைத்தார் இறைவன். குழந்தைப்பேறு இல்லாமல், அழுது புலம்பி, ஊராரின் பழிச் சொற்களைக் கேட்டுக்கேட்டு மனம் வெறுத்து வீட்டுக்குள் தன்னையே சிறைபடுத்திக் கொண்ட எலிசபெத் கடவுளை தேடினார். முதிர்ந்த வயதில் கருத்தரிக்க முடியாது என்று அன்று சொல்லப்பட்ட அவருக்கு தேடிய கடவுள் தன் அருள் முகத்தைக் காட்டினார். அந்த வயதிலும் கருதரித்திருந்தார் அவர். இறைவனைத் தேடிய மரியாவுக்கும், எலிசபெத்துக்கும் இறைவன்வெகுவாகத்தேவைப்பட்டார். அவர்கள் தேடலில் உண்மை இருந்தது எனவே உண்மையானவர் தன்னை அவர்களுக்கு காட்டினார். அவர்களும்கடவுள் அருளிய மீட்பைக் கண்டனர்.

தன்னைத் தேடியவர்களைத் தேற்ற இறைவன் வந்தார் என்பதை ஆணித்தரமாக உணர்த்தும் ஓர் அற்புத விழாவே கிறிஸ்மஸ். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான எல்சால்வதோரின் தலைநகரான சான்சால்வதோரில் பணிபுரிந்தவர் புகழ்பெற்ற பேராயர் ஆஸ்கர் ரொமேரோ. உள்நாட்டுப் போரில் துன்புற்ற அம்மக்களுக்கு அவர் வெளியிட்ட கிறிஸ்மஸ் செய்தியின் ஒருபகுதி: "உண்மையில் ஏழையாக மாறாதவர்கள் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட முடியாது. தன்னிடம்எல்லாமே உள்ளன, தான் மட்டுமே தனக்குப் போதும் என்ற மமதையில் வாழ்பவர்களுக்கு இறைவன் தேவைப்படுவதில்லை. அவர்களுக்குக் கிறிஸ்து பிறப்பும் தேவைப்படுவதில்லை. ஏழைகள், பசியுற்றோர்,தேவையில் இருப்போர். இவர்களாலேயே கிறிஸ்து பிறப்பு விழாவின் பொருள் காண முடியும். அவர்களைத் தேடியே எம்மானுவேல், அதாவது, "கடவுள் நம்மோடு" என்ற பெயர் தாங்கிய இறைவன் வருவார். "மனித குலத்தின் ஏக்கப் பெருமூச்சின் இறுதி வெளிப்பாடே கிறிஸ்து பெருவிழா எனலாம்.

வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு வரலாற்றையே மாற்றியமைத்தது என்றால் அது கிறிஸ்து பிறப்பு மட்டுமே. எனவே முதல் கிறிஸ்மஸ்'க்கு சற்று பின்பு இரண்டு வித்தியாசமான தேடல்கள் கிறிஸ்துவில் மையப்படுத்தப்படுகின்றன. பாவத்தின் சேற்றில் அமைதியின்றி பரிதவிக்கும் பாவிக்கு நேசக்கரம் நீட்டி அமைதியை தன்னகத்தே கொண்டு மனிதனைதேடி மாட்டுக் கொட்டிலில் இயேசு பிறக்கின்றார். பிறந்த பாலனைத் தேடி ஞானிகள் ஒருபுறம்,அரசன் ஏரோது மறுபுறம். ஆனால் இவர்களின் தேடலின் நோக்கம். இருவேறு முரண்பட்ட காரணங்களாக இருந்தன.

உண்மையானவரை உண்மையாகவே தேடுகின்றார்கள் ஞானிகள். ஞானிகள் பாவத்தில் பாழாப்போன உலகை மீட்க, பாரெங்கும் நல்லமைதியை அருள நாயகன் பிறந்துள்ளார் என அவரைத் தேடுகின்றனர். அவரை வணங்கி அவரிடம் ஆசீர்பெற அவரைத் தேடினார்கள். உண்மையாகவே அவர்களின் உள்ளம். உலக மீட்பரைத் தேடும் உள்ளம் என்பதால் இறைவார்த்தை அதிசய விண்மீனாக அவர்களின் தேடலுக்கு பாதைகாட்டியது. ஆநிரைத் தொழுவில் அகிலத்திற்கும் அமைதி அருள்பவரைக் கண்டு நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து வணங்கினர். சுயநலமற்றதேடல் அவர்களில் சுத்தமாக இருந்ததால். தேடிய தேவனை கண்டனர். வேண்டிய அமைதியை அவரில் பெற்றனர். மன்றாடிய ஆசீரும் மனமகிழக் கிடைத்தது.

எனது அரசிற்கு போட்டியாக ஓர் அரசனா? உலகில் அவனை வாழ விடுவதா? அவனைக் கொல்ல வேண்டும். கங்கணம் கொண்ட ஏரோது நாயகன் இயேசுவை நகரெங்கும் தேடப் புறப்படுகின்றான். கொடுமையாகச் செயற்படும் அரசன் இவன். தனது குடும்ப நபர்களையும் இராபிகளையும் கொன்று குவித்தவன். அராஜகத்தோடு அரசைக் கைப்பற்றியவன். சகோதரனின் மனைவியை தனதாக்கியவன். மெசியா வருகையைப் பற்றிக் கேள்வியுற்று அஞ்சுகிறான். நடுங்குகிறான். குழப்பம் அடைகின்றான். அவன் ஒருபொய்யன். இயேசுவைக் கண்டபின் என்னிடம் வாருங்கள். நானும் அவரைக் கண்டு ஆராதிப்பேன் என்று ஞானிகளிடம் பொய் சொல்லுகின்றான். இயேசுவின் வருகை இவனது அரசுக்கு அச்சுறுத்தும் செயலாக இருக்கும் என்ற அச்சம் இவனைக் கவ்வியது.

வள்ளல் தேவனைக் கண்டு வணங்கி அகில மீட்பரில் ஆசிபெறவென பொய்ப்போர்வையில் உண்மையானவரைத் தேடுகின்றான். ஏரோதின் தேடலில் ஏமாற்றும் எண்ணம் இருந்தது. ஏற்றுக்கொள்ளும் உள்ளம் இருக்கவில்லை. பொய்மை இருந்தது. உண்மை இருக்கவில்லை. அநீதி இருந்தது நீதி இருக்கவில்லை. பழிவாங்கும் எண்ணம் இருந்தது. பரிவுபசாரம் இருக்கவில்லை. வஞ்சகம் இருந்தது. நேர்மை இருக்கவில்லை. இதனால் நேச இயேசுவை அவனால்கண்டுகொள்ளமுடியவில்லை. ஆகவே இரண்டுவயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தைகளை வெட்டிக் கொன்றான். இவர்கள் மாசில்லாக் குழந்தைகள். குழந்தைப் பருவத்திலேயே, குழந்தை இயேசுவைக் காணாதிருந்தும் குழந்தை இயேசுவுக்காக இரத்தம் சிந்திய முதல் மறைசாட்சிகள். அராஜக மன்னனின் கொடுங்கோலாட்சியில் இயேசுவுக்காகப் பலியாடுகளானவர்கள். இவர்கள் இயேசுவிற்கு பதிலாய் தங்கள் உயிரை ஈந்தவர்கள். ஏரோதுவின் தேசமெங்கும் பச்சிளம் பாலகரின் தலைகள் உருண்டன. பச்சை இரத்தம் ஆறாகியது. இருந்தும் தேடிய இயேசுவை கண்டு அழிக்க முடியவில்லை. காரணம் அவனது தேடலில் சுயநலம் சுற்றிப் போயிருந்தது. தேவனுக்கு அவன் தேடல் உகந்ததாக இருக்கவில்லை.

எமது மண்ணில் இன்றைய தேடல்கள் பலவிதம். காணியைத் கைப்பற்ற கணக்கற்றதேடல்கள். பணத்தை சேமிக்க பல வழித் தேடல்கள். கட்டடங்களை வாங்கி வாடகைக்கு விட வெளிநாடுகளிலிருந்து முட்டியடித்து வந்து மூலை முடுக்கெங்கும் தேடல்கள். வீட்டைக் கட்ட விதம் விதமான தேடல்கள். வீதியெங்கும் ஆடப்பரக்குடில்கள் அமைக்க போட்டிபோட்டு ஆங்காங்கே தேடல்கள். பணத்தினை சாம்பலாக்க பலவகை பட்டாசுகளை கடை கடையாகதேடல். இவ்வாறுஇன்றைய தேடல்கள் சுயநலத் தேடல்களாக அதிகரிக்கின்றன. இதற்கு மத்தியில் நாட்டில் நல்லமைதியை வேண்டி ஆட்சியாளர்கள் தேடுகின்றார்கள் இவர்கள் உள்ளங்களில் ஞானிகள் தேடல் உள்ளதா? ஏரோதின் தேடல் உள்ளதா? யாரறிவார் இந்த மண்ணிலே.

### உனது தேடல்

கற்பனைகளில் கோட்டை கட்டாமல் யதார்த்தங்களில் குடிசை கட்டவே இயேசு மாட்டுக்குடிலில் பிறந்தார். கிறிஸ்து பிறப்புவிழாக் கொண்டாட்டங்கள், புறக்கொண்டாட்டங்களாக இல்லாமல், இறையன்பு மற்றும் பிறரன்பிற்கான அழைப்பிற்கு செவிமடுப்பதன் வெளிப்பாடாக இருக்கவேண்டும். கிறிஸ்மஸ் விழா சுயநலத்தை களைந்து பிறர் நலத்தை நமதாக்கி கொள்ள வானில் நின்று வந்த விழா. நாம் நம்முடைய வாழ்க்கையில் சுயநலத்தை வெறுப்போம். சுத்தகருத்துடன் தேவனைத் தேடுவோம். ஆலகையின் மாயைகளை வெறுத்து ஆண்டவரைத் தேடுவோம். புழுவும் பூச்சியும் அரிக்கும் செல்வங்களை தேட வேண்டாம் புண்ணிய செல்வங்களை பூமியெங்கும் தேடுவோம். சுய இலாபத்தால் இருண்ட இதயத்தை இடித்துவிட்டு இயேசுவின் அமைதியை தேடுவோம். இனியும் வேண்டாம் ஏரோதின் தேடல்கள். ஏற்போம் ஞானிகளின் தேடலை. தேடுங்கள் கண்டடைவீர்கள். தேவனின் மொழி இது.

---

## வாரம் ஒரு தகவல்

### வாழ்க்கை

மகிழ்ச்சியாக வாழ நினைப்பவருக்கு என் ஆலோசனை இது தான். வாழ்க்கையின் சீரியஸான தருணத்திலும் கொஞ்சம் விளையாட்டுத் தனத்துடன் இருங்கள்!

உங்களது அபிப்பிராயங்களை மாற்றுங்கள். உங்கள் வாழ்க்கையை மாற்றலாம். மனைவியை அடிக்கடி மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால் மனைவி பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள முடியும். வேலையை அடிக்கடி மாற்றிக் கொள்ள முடியாது.

ஆனால் வேலை பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிவிட கொள்ள முடியும். உலகத்தை மாற்றி விட முடியாது. ஆனால் உலகம் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள முடியும்.

இன்றைக்கும் சில மகாகவிகள் நம்மிடையே மறைந்து இருக்கலாம். அவர்களை இனங்கண்டு ஏற்றுக் கொள்ளாமல் பழையவற்றோடு ஒப்பிட்டுப் பேசியே ஒதுக்கித்தள்ளி விட்டால் தமிழுக்கு கிடைக்கவிருக்கும் உன்னத அணிகளை நாம் இழந்தவராவோம்.

பழைமையைப் போற்றலாம். மரபை மதிக்கலாம்.அதற்காக புதியவர்களைப் புதைத்து விட நினைப்பது அறியாமை. கடந்த காலத்திலேயே காலூன்றி நிற்கும் மனிதர்களால் வாழ்க்கை என்னும் வானத்தில் சிறகடிக்க இயலாது.

எதிர்காலத்திற்கே தாவிக் கொண்டிருப்பவர்களும் கடந்த காலத்திலேயே உறைந்து போனவர்களும் வாழ்வின் உண்மை இன்பத்தை கணப்போதும் காண இயலாது.

நிகழ்காலத்தில் இந்தக் கணத்தில் உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறதோ நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதிலேயே பூரணமாக லயிக்கும் போது தான் நீங்கள் உயிர்ப்புடன் இருப்பவர்களாகிறீர்கள், வாழ்பவர்களாகிறீர்கள்.

---

## கோத்தாவைக் காப்பாற்றுவதற்கு புலம்பெயர் இலங்கையர் முயற்சி

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தினரை பாதுகாக்க முன்வருமாறு புலம்பெயர் இலங்கையர் அமைப்பொன்று மகாநாயக்க தேரர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐரோப்பா மற்றும்அவுஸ்திரேலியா, மத்திய கிழக்கு, கனடா நாடுகளில் வாழும் இலங்கையின் தொழில் சார் நிபுணர்கள் ஒன்றிணைந்து சர்வதேச இலங்கையர் பேரவை என்ற ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்த அமைப்பு அண்மையில் மூன்று பௌத்த நிகாயவினதும் மகாநாயக்க தேரர்களுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அதில் அவன்கார்ட் நிறுவனத்தின் செயற்பாடுகளை குற்றம் சாட்டி அதன் மூலம் முன்னாள் பாதுகாப்பு செயலாளர்கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த மகாநாயக்கர்கள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்தமைக்காக மகாநாயக்கர்களின் பாராட்டுப் பத்திரம் பெற்ற கோத்தபாயவை மாத்திரமன்றி வன்னிப் போரில் முக்கிய கடமையாற்றிய இராணுவ அதிகாரிகளையும் தண்டிக்கும் முயற்சிகளை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றும் நோக்கில் நல்லாட்சி அரசாங்கம் இந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டுவருவதில் பாரிய பங்களிப்புகளைச் செய்த மகாநாயக்கர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு, அரசாங்கத்தின் பழிவாங்கும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ-7)

---

## விவசாயிகளுக்காக ஜே.வி.பியின் திட்டம்

வரவு செலவுத்திட்டத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அவர்களுக்கு தெளிவுபடுத்தும் விரிவான வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க போவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கை மற்றும் வரவு செலவுத்திட்டத்தின் பாதிப்புகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நோக்கில் இந்த வேலைத் திட்டத்தை செயற்படுத்த உள்ளதாக அந்த முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் கம சபை எனப் பெயரிடப்பட்டுள்ளது. விவசாயிகளை ஒன்றுதிரட்டி கலந்துரையாடல்களை நடத்தி, விடயம் சம்பந்தமாக அவர்களுக்கு தெளிவுப்படுத்த உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதம் அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்காணித்து எதிர்காலத்தில் எடுக்கப்போகும் தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்யப்படும் எனவும் ல்ஸ்காந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# “GSP” வரிச்சலுகைக்கான சர்வதேச அங்கீகாரம் இலங்கைக்கு கிடைக்குமா?


**சண்டே லீடர் பத்திரிகையில் “இலங்கையின் மனித உரிமைச் செயற்பாடுகளில் ஊக்கமளிக்கும் அறிகுறிகள் தென்பட்ட போதிலும் அது செய்ய வேண்டியதோ எவ்வளவோ அதிகமாகவே உள்ளது” எனும் தலைப்பில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...**

...மேலும், படைத்துறையினர் வர்த்தகம் சம்பந்தமான செயற்பாடுகளில் சம்பந்தப்படுவது போன்ற நடைமுறைகளை முடிவிற்குக்கொண்டு வருவதுடன் அவர்களை பாதுகாப்புப் பிரிவு சீர்திருத்தப் பணியில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அரசு வாக்குறுதியளித்திருந்தது. எப்படியும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகக் குழுக்கள் மீது விழிப்புணர்வுடன் கூடிய கண்காணிப்புக்கான கூடுதல் தேவை இருப்பதாகவும் ‘மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு’ கூறுகிறது. படைத்தரப்புக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஏனைய காணிகளையும் விடுவிப்பது, தடுத்துவைக்கப்பட்டோரை விடுவிப்பது மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பது போன்ற வாக்குறுதிகளை முற்றிலும் நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் தாமதங்களுங்கூட மக்களின் விரக்தியை அதிகரிப்பதாகவேயிருக்கும்.

“நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான இத்தகைய நடவடிக்கைகள் உண்மையான மீள் இணக்கப்பாட்டிற்கு அத்தியாவசியமானது. ஆயினும் வாக்குறுதிகள் வெறும் வாய்ப்பேச்சாகிப் போய்விடும் நிலையில் உண்மையான முன்னேற்றம் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது” என்பதே மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பின் கூற்றாகும். ‘நம்பகமானதொரு உள்ளகப்பொறிமுறை’ பற்றி மைத்திரிபால சிறிசேன அரசு வாக்குறுதியளித்திருந்தது. இந்த பொறிமுறை பற்றிய மாற்றுக்கொள்கைகளுக்கான அமைப்பு மேற்கொண்ட ஜனநாயக ரீதியிலான பிந்திய கணக்கெடுப்பின்படி போரின் இறுதிக்கட்ட நடவடிக்கைகள் பற்றிய நம்பகமான பொறுப்புக்கூறலுக்கு நம்பிக்கைக்குரிய விதமான பொறிமுறையொன்றுக்கே 48.1% இலங்கையர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

இவற்றுள் ‘பிரத்தியேகமானதொரு உள்ளகப் பொறிமுறைக்கு’ 43.8% ஆதரவும் ‘கலப்புப்பொறிமுறைக்கு’ 30% ஆதரவுடன் ‘பிரத்தியேகமானதொரு சர்வதேசப் பொறிமுறைக்கு’ 17.1% ஆதரவுமே கிடைத்துள்ளது.

கொழும்பில் அமைந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய (EU) அலுவலகத்தின் கூற்றுப்படி “ ‘GSP- வர்த்தக சலுகை’ ஒன்றுக்குரிய வெற்றிகரமான அனுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 சர்வதேச பிரதிநிதிகள் சபை விதிமுறைகளுக்கு இணக்கப்பாடான செயற்பாடுகள் தேவை. இந்த வித பிரதிநிதிகள் சபை உடன்படிக்கைகளில், ‘சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை’, ‘சித்ரவதைகளுக்கு எதிரான பிரதிநிதிகள் சபை’ மற்றும் ‘சிறுவர் உரிமைகளுக்கான பிரதிநிதிகள் சபை’ போன்றவற்றுடனான உடன்பாடுகளும் அடங்கும். இந்த சர்வதேச பிரதிநிதிகள் சபை தீர்மானங்களனைத்தையும் ஏற்று கையெழுத்திட்டிருக்கும் இலங்கை சட்டபூர்வமான முறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதென்பது அரசின் மீள் இணக்கப்பாடு, நல்லாட்சி போன்ற அரசியல் கொள்கைத் திட்டகளுடன் ஒரு சிறகு போன்ற வடிவில் இணைந்து விரிந்து செயற்படுவதாக இருக்கும்.


கிறிஸ்ரோஃவ் ஹெய் ன்ஸ்

இந்த சர்வதேச உடன்பாடுகளுக்கு இணக்கமாகச் செயற்படுவதென்பது அதுமட்டிலான அரசின் நேர்மையான கடப்பாடுகளை மட்டுமல்லாது நாட்டின் ஸ்திரத் தன்மையையும் கருதிய உறுதியான செயற்பாடாகவே இருக்கும். அண்மையில் நடந்தது போன்ற, மாணவர்களது எதிர்ப்புப் பேரணி போன்ற நடவடிக்கைகளின்போது அவர்கள் மீதான பொலிஸாரின் வன்முறைப் பிரயோகம் மேற்கொள்ளப்படுமானால் அந்தவித நடவடிக்கைகளுக்கு பொலிஸாருக்கும் ஏனைய படைத்துறை சேவைகளுக்கும் அனுமதிக்கத்தக்க உகந்தளவு வன்முறைப் பிரயோகம் எந்தளவில் இருக்க வேண்டுமென்பது போன்ற கேள்விகள் எழுகிறது. இந்த விடயத்தில் பொலிஸாரின் இந்த பலப்பிரயோகத்தினை இலங்கையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு அனுகூலமற்ற தவறான செயற்பாடாகவே கண்டித்திருந்ததை நான் அறிவேன் என்பதுடன் இதற்கான அதிகார தரப்பினரது பிரதிபலிப்புக்களை அறிந்து கொள்வதிலும் நான் ஆர்வமாகவே உள்ளேன்” என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிட் டெலி கூறியிருந்தார். அவர் மேலும் கூறுகையில், “பலவந்தமான முறையில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் குறித்து ஆராயும் ஐ.நா. செயற்குழுவினர் காணாமற் போனவர்களது குடும்பங்களை சந்தித்ததைத் தொடர்ந்து அவர்களது அச்சந்திப்பைப் பற்றி புலனாய்வு தரப்பினால் சிலரிடம் கேள்விகள் கேட்கப்பட்டதாக ஐ.நா. செயற்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ‘இது உண்மையானால்’ தொடர்ந்தும் இவ்விதம் நடைபெறுவதற்கு காரணம் என்ன? இந்த ‘GSP -puls’ வர்த்தக வரிச் சலுகை என்பது பற்றிய பேச்செல்லாம், முக்கியமானதொரு வர்த்தக சலுகையைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டுமல்லாது ஆட்சியுடன் மனித உரிமைகளுக்கான பாதுகாப்பையும் முன்னேற்றகரமாக நகர்த்திச் செல்வதற்குமேயாகும். போர் முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்துவந்த வருடங்களில் மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடன் குறிப்பாக பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் போன்ற முனைப்பான நன்மைகளையும் இலங்கை பெற்றுள்ளது” என அவர் மேலும் கூறியிருந்தார். ஐரோப்பிய ஒன்றியமும் அதன் உறுப்பு நாடுகளும் இலங்கையின் போருக்குப் பிந்திய காலகட்டத்தில் நாடு முழுவதும் இடம் பெற்றுக்கொண்டிருந்த மீள் எழுச்சித் திட்டங்களுக்கு அளித்திருந்த பெருவாரியான நிதிமூலங்கள் ஊடாக பேருதவி ஆற்றியதுடன் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதற்கு காத்திருக்கின்றனர். ஆனாலும் நீடித்து நிலைக்கக்கூடிய அபி விருத்திகளின் பொருட்டு மனித உரிமைகளுக்கான பாதுகாப்புடன் அதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளையும் சேர்த்தே முன்னெடுப்பது அவசியம் என்பதே டேவிட்டெலி அவர்களது கருத்தாகும்.

இலங்கை அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு தமது வரவேற்பை வழங்கிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் 28 வெளிவிவகார அமைச்சர்களும் கடந்த மாதம் இலங்கைக்குத் தெரிவித்திருந்த மிகவும் முக்கியமான செய்தியில் ‘GSP-puls’ வரிச் சலுகையை புதுப்பித்துக் கொள்வதற்கான எஞ்சிய தயாரிப்பு வேலைகளையும் தொடர்ந்து முன்னெடுக்கும்படி ஊக்கமளித்திருந்தனர்.

“இந்த சவாலை ஏற்றுச் செயற்படுமளவிற்கு இலங்கை எழுச்சி பெறுவது முடிந்த காரியமா? என்று கேட்கும் எவருக்கும் எனது பதில் ஒளிவு மறைவற்ற நேரடியான ஒன்றேதான்: இலங்கையால் நிச்சயம் இதனை சாதிக்க முடியும், ஆனாலும் அது முழு விருப்பத்துடன் செயற்படுவதுடன் தனது அம் முயற்சியை அயராது முன்னெடுத்துச் செல்வதுமே அதற்கான வழியாகும்” என்று அவர் கூறுகிறார்.


‘சொந்த வீட்டில் சிறந்த பணியாரம் சுட்டுக் கொள்வதே நாட்டிற்கும் மக்களுக் கும் கௌரவத்திற்குரிய சிறப்பாகும்’ என்று இலங்கையின் காலம் சென்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் முன்னர் கூறிய வார்த்தைகளையும் அவர் நினைவு கூர்ந்தார்.

“மேற்படி விடயங்களில் இலங்கை சாதிக்கும் முன்னேற்றமே அதற்கான ‘GSP-puls’ சலுகையை பெற்றுக் கொடுக்கும் என்று மறுவார்த்தையில் இதனைக் கூறலாம். இலங்கையின் குடிமக்கள் என்ற விதத்தில் இது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. நாட்டினது ஜனநாயக விழுமியங்களுடன் நாட்டு மக்களனைவரதும் உரிமைகளுக்கான பாதுகாப்பினையும் எந்தளவு உயர்மட்டத்தில் வைத்து இலங்கை சிறப்புற பேணிக் காத்து வருகிறது என்ற கடினமான கேள்வியை அரசை நோக்கி எழுப்புவதன் மூலம் அதனை உசார்படுத்தி எழுச்சி கொள்ள வைக்க வேண்டியவர்களும் நீங்களேதான்!” என ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

அதேநேரம், அரசியல் மட்டத்திலான பல சவால்களுள் பெண்களுக்கான சவால் தொடர்ந்து கொண்டிருப்பது பற்றியும் ‘மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்’ சுட்டிக்காட்டுகிறது. இலங்கையின் ஒட்டுமொத்த குடிசனத் தொகையில் 51% பெண்களாயிருந்தும் பாராளுமன்றத்தின் 225 ஆசனங்களில் 13 மட்டுமே பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கென உள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட ஜனநாயக கணக்கெடுப்பொன்றின்படி இலங்கை அனைத்து மக்களிலும் 73.5% பேர் பாராளுமன்ற- மாகாண சபை- உள்ளூர் அதிகார சபை ரீதியிலான பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவு என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். இதில் 64.8 வீதமானோர், தேசிய- மாகாண மற்றும் உள்ளூர் ஆட்சி மட்டங்களில் பெண்களுக்கென்று ‘கோட்டா’ ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கூறுகின்றனர். (முற்றும்)

**தமிழில் யோகர்**



# நாவலர் வழியே நல்வழியாகும்

நாவலர் ஈழத்திலே தோன்றிய ஆண்டு 1822. அவர் மறைந்தது 1879 ஆம் ஆண்டு. 57 ஆண்டுகளே இந்த உலகில் வாழ்ந்தவர். நல்லை நகர் அவரது பிறப்பிடம். தந்தை கந்தப்பிள்ளை. தாய் சிவகாமியார். சைவ வாழ்வியல் அவரது வாழ்வுச் சூழல். திருமணம் செய்யாது வாழ்ந்தவர். இவ்வளவு சுருங்கிய குறிப்புக் கொண்டு நாவலர் வாழ்ந்தார் என அவருடைய வரலாற்றை நாம் குறிப்பிட முடியாது. யாழ்ப்பாணத்து வரலாற்றில் நாவலருடைய வழி நல்வழியாக அமைந்ததை இன்று பல ஆய்வுகளும் நூல்களும் பதிவு செய்துள்ளன. எனவே நாவலரின் வாழ்வியலை இன்றும் நாம் நினைந்துச் செயற்பட வேண்டியுள்ளது. நாவலர் மறைந்து 100 ஆண்டு கழிந்த போது அவருடைய பணிகள் பற்றிய மீள்பார்வைகள் நடைபெற்றன. தொடர்ந்து ஆண்டு தோறும் அவர் நினைவு கூரப்பட்டார். எனினும் நாவலர் காட்டிய வழியில் செல்வதற்கு இன்னமும் நாம் பின்னிற்கிறோம் என்பதே உண்மை நிலையாகும். எனவே அதுபற்றி எண்ணிய போது தோன்றியதே இவ்வெழுத்துருவாகும்.

நாவலர் இளமையில் கற்ற தமிழ்க்கல்வியே அவருடைய வாழ்வை முதலில் நெறிப்படுத்தியது. தமிழ்மொழியையும் நல்லொழுக்கத்தையும் சைவசமயத்தையும் வளர்க்க வழிகாட்டியது. மரபான வாய்மொழிக் கல்வியின் வளம் அதற்கு அடித்தளமாக அமைந்தது. அவர் கற்ற நீதிநூல்களும் நிகண்டுகளும் தமிழறிவை வளர்த்தன. தாய்மொழிக் கல்வியின் ஆற்றல் பிற மொழிகளான வட மொழியிலும் ஆங்கி மொழியிலும் தேர்ச்சி பெற வைத்தன. ஆங்கிலக் கல்வியால் பார்சிவல் பாதிரியாரின் நட்பும் கிடைத்தது. பிற சமய நடைமுறைகளை நேரடியாகக் காணும் வாய்ப்பும் ஏற்பட்டது. கிறிஸ்தவ பைபிளை மொழி பெயர்க்கும் மொழி பெயர்ப்புப் புலமையும் நன்கு கிட்டியது. புதிய மொழியும் சமயமும் மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற வேளையில் அதைத் தடுக்கும் வழிகளை நாவலர் மேற்கொள்ளவும் இப்புலமையே பெரிதும் துணை செய்தது.

இன்னும் நாவலரின் மும்மொழிப்புலமை அவர் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து தென்னிந்தியாவுக்குச் சென்று நாவலர் என்ற சிறப்பையும் பெற வைத்தது. நாவலர் தான் பெற்ற மொழியறிவின் துணை கொண்டு பிற சமயத்தின் செல்வாக்கைத் தடுக்கப் பணி செய்தார். சமயம் பரப்ப கிறிஸ்தவர்கள் கையாண்ட வழிகளையே தானும் செயற்படுத்தினார். எல்லோருக்கும் கல்வியறிவை வழங்கப் பாடசாலைகளை அமைத்தார். ஈழத்தில் மட்டுமன்றி தென்னிந்தியாவிலும் பாடசாலையை நிறுவினார். 1864ஆம் ஆண்டு சிதம்பரத்திலே சிதம்பரம் சைவ வித்தியாசாலை தொடங்கப்பட்டது. அதுவே இப்போது சிதம்பரம் நாவலர் மேல் நிலைப்பள்ளி என்ற பெயரில் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர்ந்து சென்று பல்வேறு நாடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களும் தாம் வாழும் நாடுகளில் தமிழ்மொழிக் கல்வியைக் கற்பிப்பதற்குத் தமிழ்ப்பள்ளிகளை நிறுவிப்பணி செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழியும் சைவசமயமும் இடருக்குள்ளான போது நாவலர் பாடசாலை நிறுவியும் தமிழ்ப்பாட நூல்களையும் சைவசமய நெறிப் புகட்டலுக்கான நூல்களையும் எழுதி நற்பணியாற்றியதை தொடர்கின்றனர். இது நாவலர் வழியே நமக்கேற்ற வழி என்பதற்கு நல்ல சான்றாகவுள்ளது. நாவலர் தென்னிந்தியாவுக்குச் சென்று அச்சியந்திரம் வாங்கி வந்து பல நூல்களை அச்சிட்டார். அவர் தமிழ்ப் பண்பாட்டின் காவலனாக நின்று செயற்பட்டமை இன்று புலம்பெயர் தமிழர்களுக்கு சிறந்த வழிகாட்டலாக உள்ளது. பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழி பேசும் சூழலில் பல்வேறு பண்பாட்டுப் பின்புலத்திலே சென்று வாழவேண்டிய நம் உறவுகளுக்கு நாவலர் ஒரு கலங்கரை விளக்கமாக உள்ளார். நாவலர் காலத்தில் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களின் மாற்றமான போக்கை வருமாறு அவரே பதிவு செய் துள்ளார்.

"இத்தேசத்திலுள்ள வறியவர்கள் அநேகர்
சைவசமயமே மெய்ச்சமயம் என்று
அறிந்தும் அன்னம் வஸ்த்திரம் முதலியவை
பெற்றுப் படிக்கும் பொருட்டும் உபாத்தியாயர்
உத்தியோகம் பிரசங்கி உத்தியோகம்
முதலிய உத்தியோகங்களைச் செய்து
சம்பளம் வாங்கும் பொருட்டும் கவர்மெண்டு
உத்தியோகங்களின் நிமித்தம் துரைமார்களிடத்தே
சிபார்சு செய்விக்கும் பொருட்டும் கிறிஸ்து
சமயப் பெண்களுள்ளே சீதனமுடையவர்களையும்
அழகுடையவர்களையும் விவாகம் செய்யும்
பொருட்டும் கிறிஸ்து சமயத்திலே பிரவேசிப் பாராயினார்கள்"

நாவலருடைய இப்பதிவு அவரது காலத்துச் சமூக நிலையையும் மக்கள் போக்கையும் இன்று நாம் உணர வைக்கின்றது. ஆனால் இதே போன்ற நிலை புலம்பெயர் நாடுகளிலும் நிலவுகிறது. அந்த நிலையை மாற்ற நாவலர் காட்டிய வழி ஏற்றதாக உள்ளது.

தாய்நாட்டிலும் இன்று இளைய தலைமுறையினர் தமிழ் மொழியறிவும் சைவ சமய அறிவும் தேவையற்றதென எண்ணுகின்ற நிலை உருவாகியுள்ளது. கோவில் ஒரு தூய்மையான அமைதியான இடமாகக் கருதப்படுவதில்லை. பண்பாட்டு நிலையில் நடை, உடை பாவனைகள் மேலைத்தேய பண்பாட்டு முறையில் மாற்றமடைந்து விட்டன. கோவிலை மையமாக வைத்தே நாவலர் தமது சமயப்பணியைத் திட்டமிட்டார். நாவலர் பின்பற்றிய நெறி சைவநெறி. சைவநீதி உலகமெல்லாம் விளங்க வேண்டும் என்பதே அவருடைய எண்ணமாக இருந்தது. சமய நூல்களைச் செய்யுள் நடையிலிருந்து மாற்றி உரைநடையாக எழுதினார். இதனால் எல்லோரும் அதனைப்படிக்க முடிந்தது. மனிதன் ஒரு நாளிலே செய்ய வேண்டிய கடமைகளை எழுதி வெளியிட்டார். அவர் எழுதிய **சைவ வினா விடை** என்னும் நூல் இன்றைய இளந்தலைமுறையினருக்கு விடையளிக்கும் நிலையில் அமைந்துள்ளது. எதற்கும் விளக்கம் கேட்கும் இளையோருக்கு இந்நூல் கற்பிக்கப்பட வேண்டியதாகும்.

சமய வாழ்க்கையின் தேவை விஞ்ஞானத்தின் வருகையால் மறக்கப்பட்டது. நாவலர் கால மக்களின் அன்றாட பொது வாழ்வியலோடு இணைந்திருந்த சமயத்திற்கு இடையூறு ஏற்பட்டது. சமயம் கல்வியாகக் கற்பிக்கப்படவில்லை. மரபாக வாழ்வியல் நடைமுறைகளோடு கையளிக்கப்பட்டு வந்தது.

புராண படண மரபு கோவில்களிலே சமயச் செய்திகளையும் கதைகளையும் அறிவுறுத்தும் பணியை ஆற்றியது. வரலாற்றில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பிறசமயச் செல்வாக்கை நாயன்மாரின் பிரசாரப்பணி தடுத்ததை நாவலர் நன்கு மனங்கொண்டார். கோயில்களில் சமயச் சொற்பொழிவுகளைச் செய்தார்.

சைவ வாழ்வியல் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். சமயக்கல்வி அறிவைக் கேட்டல் மூலம் மக்களிடையே பரவச் செய்தார். பாடசாலைகளில் சமயம் பாட நிலையிலே கற்பிக்கப்பட்டாலும் நிறைவான விளக்கத்தைப் பெற நாவலரது சொற்பொழிவுகள் பெரிதும் துணை நின்றன. சைவ மக்கள் மத்தியிலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய நாவலரது வழி இன்றும் கடைப்பிடிக்க வேண்டிய நல்வழியாகும்.

நாவலர் நல்வழியிலே செல்வதற்கு இரண்டு கண்களைப் பயன்படுத்தினார். ஒன்று சைவ சமயக் கண். மற்றது தமிழ் மொழிக்கண். இவ்விரண்டு கண்களும் எல்லோருக்கும் தேவை. பிறப்பிலே மனிதன் பெற்ற இரு கண்களிலும் சமயத்தையும் மொழியையும் பார்வையாகக்கொண்டு செயற்பட வேண்டுமென வழி காட்டியவர் நாவலரே. இன்று ஞானக்கண், அறிவுக்கண், கலைக்கண், ஊனக்கண் எனப்பல வகையான கண்களைப் பற்றிப் பேசப்படுகின்றன. ஆனால் நாவலரே நாம் அணிய வேண்டிய கண்ணாடியை அறிவித்து சென்றுள்ளார். அவை நாம் செல்லும் பாதையில் சிக்கலின்றி நடக்க வழி காட்டும்.

எனவே பொறிமுறைக் கையாட்சியில் திளைத்திருக்கும் இந்த தலைமுறையினர் நெறிப்படுத்தப் படவேண்டிய நேரம் இதுவே. நாவலர் காட்டிய வழியில் அவர்கள் செல்ல வழிகாட்ட வேண்டியது எமது கடமை.

நாவலர் தனித்து நின்று பணியாற்றியதை நினைந்து இன்று கூட்டாக பணி செய்ய வேண்டும். நாவலர் பற்றிய ஆய்வுகளும் கருத்தரங்குகளும் இதனையே கருப்பொருளாகக்கொண்டு செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது. மொழியும் சமயமும் மனித வாழ்க்கையின் உறுதியான ஊன்று கோல்களாகும். வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டிய வழி தெரிகிறது. அவ்வழியிலே நமது தலைமுறையை ஆற்றுப்படுத்துவோம்.

முனைவர்
மனோன்மணி சண்முகதாஸ்

# ஆழிப்பேரலையின் 11 ஆவது ஆண்டு நினைவில்..........






முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற ஆழிப்பேரலையில் காவு கொள்ளப்பட்ட உறவுகளில் ஒரு தொகுதியினரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலயத்தில் நினைவு நிகழ்வு நேற்று காலை 9.25 மணிக்கு உறவுகள் மற்றும் பொது மக்களால் சுடர்கள் ஏற்றி மலர் தூவி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறப்பு வழிபாடுகளும் சுனாமி நினைவுத்தூபி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)





வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் சுனாமி ஆழிப் பேரலையின் 11 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று காலை சுனாமி நினைவுத்தூபிக்கு முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது. (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)





2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தாக்கிய சுனாமி பேரலையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்று காலை முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுள்ள கடற்கோள் நினைவாலயத்தில் நடைபெற்றது . இதன் போது இந்து,இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மூன்று மத முறைகளிலும் இடம்பெற்ற நினைவஞ்சலிப் பிரார்த்தனையில் உயிரிழந்தவர்களின் உறவுகள் , மதத்தலைவர்கள் என ஏராளமானோர் பங்கேற்றிருந்தார்கள். (படங்கள்: முள்ளியவளை, பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)







சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த உறவுகளுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று திருமறைக்கலாமன்றத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.ரி. மோகன்ராஜ் தலைமையில் மன்னாரில் நடைபெற்ற போது.. (படங்கள் :பனிக்கன்குளம் செய்தியாளர்)





வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண இயற்கை பேரிடர் தணிப்பு தினம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற போது .. (படங்கள்: கிளிநொச்சி -1 செய்தியாளர்)

# 64 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்கள்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 64 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்கள் கடந்த 23 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலாளர் இ.ரமேஸ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வைத்து வழங்கப் பட்டது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

திவிநெகும திட்டத்தின் ஊடாக ஒட்டு சுட்டான் பிரதேச செயலக பிரிவிற் குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற 10 குடும்பங்களுக்கு தலா ஒரு பசுமாடு வீதம் 10 பசு மாடுகளும் 35 குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் 8 குடும்பங்களுக்கு மின்சார நீர் இறை க்கும் இயந்திரங்களும் 10 குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகளும் ஒரு குடும்பத்தி ற்கு தையல் இயந்திரமுமாக மொத்தம் 64 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன் அடுத்த கட்டமாக 135 பயனாளிகளுக்கு எதிர் வரும் நாட்களினுள் வழங்கி வைக்கப் படுமென தெரிவிக்கப்படுகின்றது. (2-15)

மேலான மனிதன் எப்போதும் அறம் பற்றியே சிந்திக்கிறான். பாமர மனிதன் தன் சுகம் பற்றியே எண்ணுகிறான். - ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# பரணகம ஆணைக்குழுவுக்கு பதிலாக புதிய அமைச்சு

(கொழும்பு)

காணாமற்போனோர் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு வரும் பெப்ரவரி மாதத்துடன் கலைக்கப்பட்டு, இந்த விவகாரங்களைக் கையாள்வதற்கான புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பரணகம ஆணைக்குழுவின் பதவிக்காலம் வரும் 2016 பெப்ரவரி 15ஆம் நாளுடன் நிறைவடையவுள்ளது.

இந்தநிலையில், இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று, ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக குழுவின் காலத்தை நீடிக்கும்படி இன்னும் கோரிக்கை விடுக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் அறிக்கையில் இந்த ஆணைக்குழுவை கலைக்கும்படி கோரப்பட்டுள்ளதால் ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்படுமா என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

காணாமற் போனோர் தொடர்பாக அமைச்சு ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

எம்மிடமுள்ள காணாமல்போனோர் தொடர்பான ஆவணங்களை இந்த அமைச்சிடம் கையளிக்கும்படி கோரப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-11)

## சம்பந்தர்-விக்கி சந்திப்பு ஒரு சாதகமான திருப்புமுனை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

இரண்டு தலைவர்களும் ஒருவரை ஒருவர் சந்தித்து தமக்கிடையே கருத்துக்களை பரிமாறிக் கொள்ளாமல் விட்டால், அதனால் தேவையற்ற பிணக்குகள் ஏற்பட வாய்ப்பாகி விடுவதுடன், சம்பந்தரும் விக்னேஸ்வரனும் பிரிந்து நிற்க வேண்டும். அதுவே தமக்கு இலாபம் என்று நினைக்கக் கூடியவர்கள் வென்று விடுவார்கள்.

இத்தகைய நிலைமை தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமையும். எனவே இரண்டு தலைவர்களும் வயதிலும் அறிவிலும் அனுபவத்திலும் பழுத்தவர்கள். இவர்கள் இருவரும் சந்தித்துப் பேசுவதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கும்; கருத்து முரண்பாடுகளுக்கும் தீர்வு காணக்கூடியதாக இருக்கும். இதனால் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வாய்ப்பாகும் என்பது நம் தாழ்மையான கருத்து.

பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்; தீராத கோபம் யாருக்கென்ன இலாபம்? என்ற கண்ணதாசன் பாடல் வரிகள் இங்கு கவனிக்கத் தக்கன.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தனது கட்சி சார்ந்த உறுப்பினர்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது கட்டாயமானதாகும். தேவையற்ற கருத்துக்களை ஊடகங்களுக்கு வழங்குவதென்பது ஒரு பெரும் கட்டமைப்பை சின்னாபின்னமாக்கி விடும்.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் நிர்வாகம் செம்மையாக நடந்தேறுவதற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்குவதென்பது கட்டாயமானதாகும்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் எல்லையை மீறி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க யார் முற்பட்டாலும் அதனைத் தடுப்பது சம்பந்தரின் தார்மீகப் பணியாகும்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண அரசின் செயற்பாட்டிற்கு யார் குந்தகம் விளைவித்தாலும் அது தமிழினத்துக்கு எதிரானது என்ற உண்மைகள் வெளிப்படுத்தப்படவும் உணரப்படவும் வேண்டும்.

அதேநேரம் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுடன் ஒரு சுமுகமான உறவை தொடர்ந்து பேணுவதை இரா.சம்பந்தர் ஒருபோதும் தவறி விடக்கூடாது.

சம்பந்தர், விக்னேஸ்வரன் என்ற இரு தலைவர்களும் ஒற்றுமையாக தமிழ் மக்களின் உரிமைகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்துவார்களாயின் அதன் கனதி என்பது காத்திரமானதாக இருக்கும்.

இதைவிடுத்து அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவரிடம் வடக்கின் முதல்வரை குறை கூறுவது, ஏனைய வெளிநாட்டுத் தூதுவரிடம் வடக்கின் முதல்வரை குற்றஞ்சாட்டுவது என்ற செயற்பாடுகள் எந்த வகையிலும் நியாயமற்றவை. இந்த உண்மைகளை இரா.சம்பந்தர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கிற்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்திக்கவில்லை என்றால் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தர், முதல்வர் விக்னேஸ்வரனை ஒரு தடவையேனும் எட்டிப் பார்க்காவிட்டால் நீங்கள் யாருக்காக அரசியல் செய்கிறீர்கள்; ஒட்டுமொத்த தமிழினத்தின் பிரச்சினைகளையும் எப்போது நீங்கள் உங்களுடைய தனிப்பட்ட பிரச்சினையாக மாற்றினீர்கள் என்று சம்பந்தரை நோக்கி கேள்வி எழுவது நியாயமே.

எதுவாயினும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரும் வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியமை ஒரு திருப்புமுனையாக அமையும் என நம்பலாம்.

## ஜெனிவா கூட்டத்தை எதிர்கொள்ள தயாராகி வருகிறது அரசாங்கம்

(கொழும்பு)

அடுத்த ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்ளக் கூடிய வகையில், இப்போதே செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர நிகழ்ச்சி நிரலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா போர்க்குற்ற விசாரணைகளை எத்தகைய பொறிமுறையின் ஊடாக கையாள்வது என்பது தொடர்பிலான கலந்தாலோசனைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகும்.

ஜனவரியில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் முக்கிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு மார்ச் மாதத்தினுள் எவ்வாறு விசாரணைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பாக தீர்வு எட்டப்படும்.

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான பொறிமுறைகள் துரிதமாக கையாளப்பட்டு வருகிறது. யாரையும் திருப்திப்படுத்த பக்கசார்பான நடவடிக்கைகள் எவற்றையும் முன்னெடுக்க முடியாது. பொறுப்புக்கூறல் விவகாரத்தை அரசாங்கம் சரியாக கையாளும். அதேபோல எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இப்போதே செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

## இதுவரை கலைக்கப்படாத நகர சபைகளின் பதவிக்காலம் ஜனாதிபதி மைத்திரியால் நீடிப்பு

(கொழும்பு)

இதுவரை கலைக்கப்படாதுள்ள சகல நகர சபைகளினதும் உத்தியோகபூர்வ பதவிக்காலம் மேலும 6 மாதங்களால் நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

நேற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய தேர்தல் முறை தொடர்பான பிரேரணைகள் பாராளுமன்றத்தில் கடந்த முறை நிறைவேற்றப்பட்டிருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் தமது அரசாங்கம் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் அது குறித்த தீர்மானங்களை மேற்கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறை திருத்தங்களுக்காக நாடளாவிய ரீதியில் யோசனைகள் கோரப்பட்டிருந்த நிலையில் சுமார் 2000 இற்கும் அதிகமான மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (இ-7)

## தாஜுடீன் கொலை தொடர்பான அறிக்கை நீதிமன்றில் தாக்கல்

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம்தாஜுடீனின்கொலை தொடர்பான முழுமையான அறிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

அறிக்கையின் ஊடாக தாஜுடீனின் கொலையாளிகள் யார் என்பது குறித்து நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படவுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முனபு குற்றவாளிகளை அடையாளம் காண முடிந்ததாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தகவல்கள் மேலும் கூறியுள்ளன.

தீப்பிடித்து எரியும் வாகனத்திற்கு அருகில் செல்ல முயற்சித்தவர்களை தடுத்த நபர் ஒருவர் சாட்சியாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தாஜுடீன் கொலையுடன் தொடர்புடையதாக கூறப்படும் ராஜபக்ஷவினரின் சாரதி திஸ்ஸ என்பவர் கைது செய்யப்படவுள்ளதாக கூறப்பட்ட போதிலும் அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்த கொலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வருக்கு தொடர்பிருப்பதாக கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## திடீர் விபத்துக்களால் இரண்டு நாளில் 458பேர் வைத்தியசாலையில் அனுமதி

கடந்த இரண்டு நாட்களில் 458பேர் திடீர் விபத்துகளுக்கு உள்ளாகியிருப்பதாக தேசிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 184 பேர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக தேசிய வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் திடீர் விபத்துகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆயினும், பண்டிகைக் கால விபத்துகள் குறித்து நோக்கும் போது, கடந்த இரண்டு நாட்களில் மாத்திரம் 112 திடீர் விபத்துகள் பதிவாகியுள்ளதாகவும் பண்டிகைக் கால விபத்துக்களுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் திடீர் விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வைத்தியர் அனில் ஜாசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஒளிவிழா நாளை

யாழ். கிறிஸ்தவ ஊழியர் சங்கம் நடத்தும் ஒளி விழா நாளை திங்கட்கிழமை கோண்டாவில் யாழ்.சாலை வளாகத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வட பிராந்திய முகாமையாளர் உபாலி கிரிதுட்டுவ, யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் குடும்ப அதிபர் அருட்திரு சாள்ஸ் கொலின், ஊர்காவற்றுறை எக்காளத்தொனி பூரண சுவிஷேக சபை அன்ரன் யூட், உரும்பிராய் பங்குத் தந்தை எஸ்.வசந்தன்ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக வட பிராந்திய செயலாற்று முகாமையாளர் கே.கேதீசன், வட பிராந்திய பொறியியல் முகாமையாளர் எஸ்.பாஸ்கரன், கோண்டாவில் யாழ்.சாலை முகாமையாளர் எஸ்.குலபாலச்செல்வம் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## தரம் 1 மாணவர்களின் எண்ணிக்கையை 35 ஆக மட்டுப்படுத்துவது அநீதி

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் தரம் 1 மாணவர்களின் எண்ணிக்கையை வகுப்பொன்றுக்கு 35ஆக மட்டுப்படுத்தியிருப்பது நியாயமற்றது எனவும், அதன் மூலம் ஏராளமான மாணவர்கள் அனுமதியை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர்கள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

கடந்த காலங்களில் ஏராளமான ஆரம்பப் பாடசாலைகள் மூடப்பட்டதால் எஞ்சியுள்ள அரச பாடசாலைகளில் அனுமதி கோரும் மாணவர்கள் இந்த 35 மாணவர்கள் கட்டுப்பாட்டால் தமது வாய்ப்புகளை இழக்க நேரிடுவதாக அச்சங்கத்தின் பிரதம செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

வகுப்பொன்றுக்கு அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை 35ஆக எல்லைப்படுத்திய அரசு, மூடப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும், எனவே அடுத்த வருடம் ஏராளமான மாணவர்கள் அனுமதி கிடைக்காமல் திண்டாடப் போகிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, மூடப்பட்டுள்ள ஆரம்பப் பாடசாலைகளை மீண்டும் திறந்து அவற்றுக்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென தமது சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகரஜோதி மண்டல பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் சபரச ஜயப்பன் தேவஸ்தானத்தின் மகரஜோதி மண்டல பூஜை பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை நல்லூர் பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இரு முடி கட்டி பாத யாத்திரை ஆரம்பித்து 18ஆம் படி ஏறி இரவு மண்டல பூஜையும் படிப் பூஜையும் இடம்பெறும். (இ-7)

# மக்கலத்தின் அதிரடி ஆட்டத்தால் நியூசிலாந்திடம் வீழ்ந்தது இலங்கை






இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இலங்கை - நியூசிலாந்து அணிகள் மோதிய முதல் ஒருநாள் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நேற்று நடந்தது. இதில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய குணதிலகா (8), டில்ஷான் (9) நிலைக்கவில்லை. அடுத்து வந்த திரிமன்னே (1), சந்திமால் (5) ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினர்.

அணித்தலைவர் மத்யூஸ் சிறப்பாக ஆடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தான் சந்தித்த முதல் பந்திலே ஆட்டமிழந்து டக்-அவுட்டாக வெளியேறினார்.

குபுகேடேரா 8 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, 65 ஓட்டங்களுக்கே இலங்கை அணி 6 விக்கெட்டுகளை இழந்து தவித்தது.

இந்த நிலையில் ஜோடி சேர்ந்த குலசேகர, சிறிவர்த்தன (66) அரைச்சதம் கடந்து ஓட்டங்களை சற்று உயர்த்தினர். அதிரடியாக விளையாடிய குலசேகர 5 சிக்சர்களுடன் 58 ஓட்டங்கள் குவித்தார்.

இருப்பினும் நியூசிலாந்து அணியின் பந்துவீச்சு தாக்குதலை சமாளிக்க முடியாத இலங்கை அணி 47 ஓவர்களில் 188 ஓட்டங்களுக்கு சுருண்டது.

நியூசிலாந்து அணி தரப்பில், மாட் ஹென்றி 4 விக்கெட்டுகளையும், பிரேஸ்வெல் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு தொடக்க வீரர்களாக குப்தில், மக்கலம் களமிறங்கினர்.

தொடக்கத்திலே அதிரடியை தொடர்ந்த இவர்கள் அரைச்சதம் கடந்தனர். மெக்கல்லம் 25 பந்தில் 55 ஓட்டங்கள் (11 பவுண்டரி, 1 சிக்சர்), குப்தில் 56 பந்தில் 79 ஓட்டங்கள் (9 பவுண்டரி, 4 சிக்சர்) எடுத்து ஆட்டமிழந்தனர்.

லதம் 18 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் நியூசிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 21 ஓவரில் 191 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் எளிதில் வெற்றி பெற்றது. டெய்லர் (5), நிசோல்ஸ் (23) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என முன்னிலையில் உள்ளது. (க)

# கவாஜா, பான்ஸ் சதம் வலுவான நிலையில் ஆஸி





அவுஸ்திரேலியா - மேற்கிந்திய தீவுகள் அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி மெல்பேர்னில் நேற்று தொடங்கியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஹோல்டர் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி, அந்நாட்டு அணிக்கு எதிராக 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதனையடுத்து அவுஸ்திரேலிய அணி முதலில் களமிறங்கியது.

தொடக்க வீரர்களாக ஜோ பர்ன்ஸ், வோர்னர் களமிறங்கினர். வோர்னர் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் கவாஜா, பர்ன்ஸ் உடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர்.

2 ஆவது விக்கெட்டுக்கு இவர்கள் 258 ஓட்டங்கள் சேர்த்தனர். பர்ன்ஸ் 128 ஓட்டங்களும், கவாஜா 144 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலியா 3 விக்கெட்டுக்கு 345 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அணித்தலைவர் ஸ்மித் (32), வோகஸ் (10) ஆட்டமிழக்காமல் உள்ளனர். டெய்லர் 2, பிராத்வெய்ட் 1 விக்கெட்டை கைப்பற்றி உள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இறுதிப் போட்டியில் அளவெட்டி விநாயகர்

அச்சுவேலி ரொக்கெட் கழகத்தினால் நடத்தப்பட்ட 10 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் முதலாவது போட்டியில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் வினோதனுடைய சிறப்பான துடுப்பாட்டம் (39) கைகொடுக்க 6 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. அச்சுவேலி 114 (10 ஓவர்), விநாயகர் கழகம் 115-4 (9.1ஓவர்)

இரண்டாவது போட்டியில் கொக்குவில் AB அணியை எதிர் கொண்டு அந்த போட்டியிலும் வினோதனுடைய (46) மற்றும் தயாளனுடைய (26) அதிரடி மூலம் 6 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது. கொக்குவில் AB 87 (10 ஓவர்), விநாயகர் கழகம் 88-4 (9.3 ஓவர்)

அடுத்ததாக காலிறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை ராமின் ஹட்ரிக் உதவியுடன் 7 விக்கெட்டுக்களினால் இலகு வெற்றி பெற்று ஆனைக்கோட்டை 46 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து விநாயகர் கழகம் 49.3 (5.5 ஓவரில்) அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## அரசை கவிழ்க்க...

பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒத்துழையாமை நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கத்தின் திட்டங்களை சீர்குலைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு, புலனாய்வு பிரிவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த சதித் திட்டத்தின் பின்னணியில் சில அரசியல் கட்சிகளும் குழுக்களும் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் போராட்டத்தின் ஊடாக இந்த ஒத்துழையாமை சூழ்ச்சித் திட்டம் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சில உறுப்பினர்கள் கிராம ரீதியில் தெளிவூட்டல் நடவடிக்கைகளை முன்னெடுத்து சூழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த முயற்சிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக நேரத்திற்கு வேலை என்ற போராட்டத்தை ஆரம்பித்து அதன் பின்னர் பாரியளவில் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க சில அரசியல் கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த சூழ்ச்சித் திட்டம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான சவால் நிலைமைகளில் அதனை எதிர்நோக்க அமைச்சர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் இவ்வாறு சூழ்ச்சித் திட்டத்தை சில அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (எ-11)

## காணிகளை...

வித்தார். வடக்கு, கிழக்கில் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுக்க அரசு விடுத்த அறிவிப்பு குறித்து வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில், வடக்கு, கிழக்கில் அடுத்த வருடம் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பது தொடர்பாக கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இதில் 6 ஆயிரம் ஏக்கர் காணிகள் என்று குறிப்பிடுவதைவிட பெருந்தொகையான காணிகள் விடுவிக்கப்படும் என்று குறிப்பிடலாம். இருப்பினும், அந்தக் காணிகள் எவை என இதுவரை இனங்காணப்படவில்லை. எந்தெந்த காணிகளை விடுவிப்பது என்பது குறித்து பாதுகாப்பு தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர்.

விடுவிக்கப்படவேண்டிய காணிகள் எவை என்பதை அவர்கள் குறிப்பிட்ட பின்னரே அது தொடர்பாக தெளிவாகக் குறிப்பிட முடியும். இதேவேளை, வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளும் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் யாழ்ப்பாணத்துக்கு அதிகளவான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குளங்களைப் புனரமைத்து, விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கூறினார். (எ-11)

## முகமாலையில்...

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுப்பட்டு வரும் குறித்த நிறுவனம் அண்மையில் முகமாலை பிரதேசத்தில் இரண்டு இலட்சம் மிதிவெடிகளை அகற்றியிருந்தது.

குறித்த நிறுவனத்தின் தகவலின் படி ஈராக் அல்லது முகமாலை பிரதேசமா உலகில் ஆபத்தான மிதிவெடி மற்றும் வெடிபொருள் அபாயம் உள்ள பிரதேசம் என்பது தொடர்பில் ஆராய்வுகள் இடம்பெற்று வருகிறது எனவும், ஆனால் ஈராக்கை விட முகமாலை பிரதேசத்திலேயே மிதிவெடி மற்றும் கண்ணி வெடிகளுக்கு அப்பால் பொறிவெடி மற்றும் ஆபத்தான வெடிப்பொருட்கள் காணப்படுகிறது.

உலகில் வேறு எங்கும் இவ்வாறு வெடிப்பொருட்கள் காணப்படவில்லை என சுட்டிக்காட்டும் குறித்த நிறுவனம் தாங்கள் கடந்த 13 வருடங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார் ஆகிய பிரதேசங்களில் இதுவரைக்கும் இரண்டு இலட்சம் மனித எதிர்ப்பு மிதிவெடிகளும்,41601 பரந்து கிடந்த வெடிபொருட்களும், 22778 வெடிக்காத வெடிபொருட்களும், 875 வாகன எதிர்ப்பு வெடிபொருட்களும், ஆறு இலட்சத்து 71724 வெடிபொருட்களின் சிறிய துண்டுகளும் மீட்டிருப்பதாக தெரிவித்துள்ளது. (எ-11)

## தமிழ் மக்கள்...

பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட வரைபைத் தயாரிக்கும் உப குழு மற்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் அமுலாகுவதை அவதானிக்கும் உப குழு, கலை பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் உப குழுக்கள் என்பவற்றுக்கான நிபுணர்களின் தெரிவு இடம்பெறுவதுடன், நண்பகல் 12.00 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடும் நடைபெறும். (ந)

## சுனாமியால்...

பதினொரு ஆண்டுகளின் பின்னர் ஆழிப் பேரலையின் கோரத்தாண்டவம், நேற்றைய நிகழ்வுகளில் பிரதிபலித்திருந்தது. உயிரிழந்த தமது உறவுகளின் கல்லறை மீது புரண்டு அழுத காட்சிகள் கல்லறைகளையும் தட்டியெழுப்புவது போலிருந்தது.

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி உலக மக்களின் மனங்களில் ஆறாத வடுக்களை ஏற்படுத்திவிட்ட நாளாகும். இந்தோனேசியாவில் சுமத்திரா தீவின் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் எழும்பிய ஆழிப்பேரலைகள் இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கி ஒரு சொற்ப நேரத்திற்குள்ளேயே 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காவுகொண்டதோடு கோடிக்கணக்கான உடைமைகளையும் அழித்தது.

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில் கடலுக்கு அடியில் 30 கிலோ மீற்றர் ஆழத்தில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 9.1 என்ற அளவுக்கு அது பதிவானது. இதையடுத்து கடலில் எழும்பிய ஆழிப்பேரலைகள் இந்தோனேசியா, இந்தியா, மியான்மார், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து உட்பட 14 நாடுகளில் கடும் உயிர் மற்றும் பொருள் சேதத்தை ஏற்படுத்தின.

இந்தப் பேரிடரில் சிக்கி 2 இலட்சத்து 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தனர். யாழ்ப்பாணம்: 1256, முல்லைத்தீவு: 2902, கிளிநொச்சி :32 , திருகோணமலை: 984 என்ற எண்ணிக்கையில் ஈழத்திலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

இது உலகின் மோசமான இயற்கை சீரழிவுகளில் 6ஆவது இடம் என்ற சோக சாதனையைப் பெற்றது. உயிர் சேதத்துடன், கோடிக்கணக்கான ரூபாவுக்கு பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இலங்கையில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். வடக்கில் யாழ். மாவட்டத்தின் வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரம் உள்ளிட்ட கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவும், கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை மாவ! ட்டங்களும், தெற்கில் அம்பாந் தோட்டை, காலி மாவட்டங்களும் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் மிக மோசமான உயிரழிவுகளையும், சொத்தழிவுகளையும் சந்தித்த இடங்களாகப் பதிவாகியுள்ளன.

சுனாமி எனும் ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து நேற்றுடன் 11 ஆண்டுகள் கடந்துவிட்டாலும் அந்தப் பேரவலம் ஏற்படுத்திவிட்ட வலிகளிலிருந்து இன்னமும் மக்கள் மீளவில்லை. அதற்கு ஆண்டுதோறும் ஆழிப் பேரலை நினைவுநாளில் அந்த அனர்த்தத்தில் காவுகொள்ளப்பட்டவர்களின் கல்லறைகளுக்கு அவர்களின் உறவுகள் சுடர் ஏற்றுகின்றபோது அவர்கள் கதறியழுது கண்ணீர் வடிக்கும் காட்சி சான்று பகிர்கின்றது.

உடுத்துறையில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திருமதி பத்மினி சிதம்பரநாதன், மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.சுகிர்தன், கே.சயந்தன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.(எ-4)

# பாதுகாப்பு அமைச்சின் நிகழ்வில் ஜனாதிபதியின் புதல்வி பிரதம விருந்தினர்

(கொழும்பு)

புதிய அரசாங்கம், ஜனாதிபதியின் புதல்வியான சத்துரிக்கா சிறிசேனவை மீண்டும் அர்சியல் நடவடிக்கையில் இறக்கியுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை 28 ஆம் திகதி நடைபெறவுள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிகழ்ச்சி ஒன்றுக்கு சத்துரிக்கா சிறிசேன பிரதம அதிதியாக அழைக்கப்பட்டுள்ளார்.

சிவில் பாதுகாப்பு படையினருக்கான 202 வீடுகள் மற்றும் அவர்களில் அடையாளம் காணப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பேச்சாளர் மேஜர் வஜிர குமாரதுங்க இதனை அண்மையில் கூறியுள்ளார்.

சிவில் பாதுகாப்பு படையிருக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 653 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 10.2 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தில் சிவில் பாதுகாப்பு படையினரும் அவர்களின் 32 ஆயிரத்து 338 பிள்ளைகளும் பயன்பெறவுள்ளனர். (எ-11)

# புதிய யாப்புக்கான வரைபை திறமையாக மேற்கொள்ள வேண்டும்

## ஜயம்பதி தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்புக்கான வரைபை இதயசுத்தியுடன் மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியலமைப்பு தொழில்நுட்பக் குழுவின் முக்கியஸ்தருமான ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கும் தக்க தருணத்தை கைவிடவேண்டாம் என்று வலியுறுத்தியுள்ள அவர் அனைத்துக் கட்சிகளும் இதயசுத்தியுடன் இந்த விடயத்தில் செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

1977 மற்றும் 1972ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டபோதும் அவை அதிகாரத்திலிருந்த கட்சிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலே அமைந்தது என்றும் பொது மக்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் அமையவில்லை என்றும் கூறினார்.

இப்போது அவ்வாறான நிலைமை இல்லை என்றும் அந்த நிலைமை அழிக்கப்பட்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் இது புதிய அரசியல் அமைப்பை உருவாக்க தக்க தருணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்கி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பொறிமுறையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்து வருவதாகவும் மேலும் தெரிவித்தார். (எ-11)

# பிரதித் தலைவர் பதவியை நீக்க ஐ.தே.க தீர்மானம்

(கொழும்பு)

தலைமைப்பதவிகளிற்கான போட்டிகள் காரணமாக கடந்த வருடங்களில் பலபாதிப்புகளை எதிர்கொண்ட ஐக்கிய தேசிய கட்சி எதிர்காலத்தில் அவ்வாறான நிலை மீண்டும் தோன்றுவதை தடுப்பதற்காக பிரதிதலைவர் பதவியை நீக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சியின் ஸ்தாபக தலைவர்களால் உருவாக்கப்பட்ட யாப்பினை மீண்டும் உறுதியாக பின்பற்றவேண்டும் என்ற யோசனை கட்சியின் அடுத்த செயற்குழு கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ள கட்சி வட்டாரங்கள் கட்சியின் யாப்பில் பிரதிதலைவர் பதவியென்ற ஒன்று குறித்து குறிப்பிடப்படாததையும் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த காலங்களில் அரசியல் நெருக்கடி காரணமாகவே பிரதிதலைவர் பதவியையும், கட்சியின் தலைமைத்துவ பேரவை என்ற குழுவையும் உருவாக்கநேர்ந்ததாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தான் எதிர்கொண்ட நெருக்கடிகள் போன்றவொன்றை ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்கால தலைவர்கள் எவரும் அனுபவிப்பதை தான் விரும்பவில்லை என பிரதமர் ரணில்விக்கிரமசிங்க சமீபத்தில் கட்சியின் மூத்த தலைவர்களிற்கு தெரிவித்துள்ளார்.

தான் அவ்வாறான அழுத்தங்களிற்கு அடிபணிந்திருந்தால் என்ன நடைபெற்றிருக்கும் என கேள்வி எழுப்பியுள்ள பிரதமர் அவ்வேளை காணப்பட்ட அரசியல் சூழலை சரியாக புரிந்துகொள்ளும் திறனற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் சிலர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையில் மாற்றம் ஏற்படவேண்டும் என கருதியதாகவும் கட்சியின் ஐக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் யாப்பை பலப்படுத்தும் எந்த நடவடிக்கையும் கட்சியின் ஐக்கியத்தை பலப்படுத்துவதை நோக்கமாக கொண்டிருக்கும், தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் எதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படாது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தற்போதைய பிரதி தலைவராக சஜித் பிரேமதாசா பதவி வகிக்கின்ற அதேவேளை தலைமைத்துவ பேரவையின் தலைவராக சபாநாயகர் கரு ஜெயசூர்ய விளங்குகின்றார் என்றார். (எ-11)

# இளைஞனின் சடலம் மீட்பு

பொத்துவில், கோமாரி முருங்கந்தனை வயல் பிரதேசத்தில், வேளாண்மை காவலுக்குச் சென்ற 18 வயது இளைஞனொருவன், நேற்று சனிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்தில் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர் கோமாரி 2ஆம் பரிவைச் சேர்ந்த 18 வயதுடைய முத்துக் குமார தனுஜன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கோமாரி முருங்கந்தனை வயல் பிரதேசத்துக்கு, வழமைபோல வேளாண்மை காவலுக்காக வெள்ளிக்கிழமை இரவு, குறித்த இளைஞன் சென்றுள்ளான். இந்த நிலையில், குறித்த வயல் பிரதேசத்தில் தலையில் கத்தியால் வெட்டப்பட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இது தொடர்பான விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-11)

## Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)

*சிறுவர்களிற்கான கற்கைநெறி

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

TP:0779672038 | ஆசிரியர்:KRC

## FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

## பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்...

உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

| | | |
|---|---|---|
| No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி | பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 11.01 @ 4pm. | கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 13.01 @ 4pm |

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

## கார்கள் வாடகைக்கு உண்டு

T.P:0779961250

(2982)

## BEACON -TECHCITY வெலிங்டன் சந்தி யாழ் நகர்

**A/L 2018** தொழில்நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 01-01-2016, காலை 8 மணி

➡ உயர்தர தொழில்நுட்ப பாடத்துறையில் சிறந்த பெறுபேறு பெற்றிட உங்கள் சிறந்த தெரிவு.

➡ எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் சலுகைகளுடன் கூடிய அனுமதிகளைப் பெறலாம்.

எமது தனித்துவமான ஆசிரியர் அணி

| | |
|---|---|
| பௌதிகவியல் தொழில்நுட்பம் | - திரு.தி.ராம் (BSc,PGCS,NCT.Civil) |
| உயிரியல் தொழில்நுட்பம் | - திரு. டினோ (BSc.Agr) |
| தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | - திரு.கஜன் (BSc.with Edu) |

(C-3130) அனுமதிகளை உறுதிப்படுத்த : 0778429817 0773774010

## BEACON வெலிங்டன் சந்தி யாழ் நகர்

க.பொ.த உயர்தர கணித -உயிரியல் பிரிவுகள்

**A/L 2018** ஆரம்பம் : 01-01-2016 காலை 8 மணி

விஷேட தகைமையுடைய ஆசிரியர் குழாம்

தமிழ்- ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்

| | |
|---|---|
| உயிரியல் | - திரு.கஜன் |
| இரசாயனவியல் | - திரு. ஜனா |
| பௌதிகவியல் | - திரு.பிரதீபன் |
| இணைந்த கணிதம் | - திரு.தி.ராம் |

(C-3130)

உங்கள் பதிவுகளுக்கு:- 0778429817 0773774010

## மலிவு மலிவு மலிவு....

புதுவருடத்தை முன்னிட்டு...



Pro Core 2 Due 3.0Ghz
Ram DDR iii 4Gb
H.Disk 250Gb
DVD RW
Monitor Hp19"
Keyboard
Mouse

24,999/-

Warranty 06 Months

தரமான, மிகக்குறைந்த விலையில் Lenovo, Dell, Hp கணனிகள். மொத்தமாகவும் பொற்றுக் கொள்ளலாம்.

(C-3135)

மானிப்பாயில்... 077 2487082

Micro System 021 2256165

## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

DMI COMPUTER EDUCATION

புதிய பிரிவு ஆரம்பம்

பிரிவு 1 - 28/12/2015 (Mon) 9:30 a.m.

பிரிவு 2 - 02/01/2016 (Sat) 9:30 a.m.

IT & English Diploma

- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application
- Dip.in Microsoft Office
- Dip.in Web Designing
- Hardware , Mulitmedia

யாழில் முதன்மை நிலை வகிக்கும் Spoken English Veta Fluency Diploma



(C-3132)

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.

☑Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.

☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

2016ஆம் புதிய கல்வி ஆண்டுக்கான மாபெரும் மலிவு விற்பனை

அனைத்து புத்தகங்களுக்கும் 10% முதல் 20% வரையிலான விசேட விலைக் கழிவும்.

காகிதாதிகள், எழுதுகருவிகள், அப்பியாசக் கொப்பிகளுக்கு 10% முதல் 40% வரை விசேட விலைக்கழிவு

வாரத்தில் அனைத்து நாட்களும் காலை 8.00-இரவு 8.00 மணி வரை திறந்திருக்கும்.

இச் சலுகை 11/12/2015 முதல் 15/01/2016 வரை மட்டுமே

## யாழ் புத்தகசாலை

305, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7874

யாழ். கிளையில் Visa,Master Card வசதிகள் உண்டு

(கனகபுரம் விளையாட்டுக் கழக சந்தி, கனகபுரம் வீதி, கிளிநொச்சி)

T.P: 0778349507. 0214917467

(C-2837)

நீங்களும் முகவராகலாம் -உங்கள் ஊரில் இருந்தவாறே வருமானம் ஈட்டலாம்.

## V2 TRAVELS & TOURS

சர்வதேச விமானபயணச்சீட்டுகள் ,சர்வதேச பொதிகள் சேவை, உள்ளூர் பொதிகள் சேவை உட்பட 10 இற்கும் மேற்பட்ட சேவைகளை உள்ளடக்கிய எமது நிறுவனத்திற்கு பிரதேசவாரியாக அனைத்து மாவட்டங்களிலும், பிரதேசங்களிலும், ஊர்களிலும் முகவர்கள் தேவைப்படுகிறார்கள்.

மாதம் 25,000/= மேற்பட்ட வருமானத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

(C-3090)

DHL SKYNET FedEx aramex PROMPT XP

நேர்முகத்தேர்வு மற்றும் தொழில்விளக்கம் : 27-12-2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி 49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.

0768226243

## Study Engineering

SICHUAN UNIVERSITY-CHINA

100% SCHOLARSHIPS AVAILABLE *Conditions Apply

Admission Open for the March 2016

- # No IELTS
- # No Interview
- # No Bank Balance
- # 100% Visa Success Rate
- # Part Time Job Allowed
- # Fully English Medium
- # Apply with Pending Results

iCS 77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 4926222 , 077 3013060

Study Overseas 107-B 1/1,Galle Road, Colombo - 06

## நத்தார் – புதுவருடத்தில் உங்கள் வீட்டை அலங்கரிக்க...



# சிங்கர் தளபாடங்கள்

NAPLE, BELO, FANTACY, LORA, LAVENDER, KELLY, WINTER , JOVANA

Sofa Set களுக்கு 20% வரை விலைக்கழிவு அல்லது குறைந்த வட்டிவீதத்துடனான இலகுதவணைக் கொடுப்பனவு முறை

TEXES Sofa Set களுக்கு சிங்கர் 32' Led TV இலவசம்.

சாப்பாட்டு மேசைகளுக்கு ( DiningTable) களுக்கு 20% வரை விலைக்கழிவு

VICTORY, OKLEY, ALLEN, ALPINE, ORIENT,





அலுமாரி (Wardrobes) களுக்கு 10% வரை விலைக்கழிவு அல்லது விசேட இலகுதவணைக் கொடுப்பனவு முறை

(C-3125)

SINGER Plus காட்சியறைகள்... MICO, R90-2SWD, 3DOOR, STEEL WD, TUSCAN WD

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம். | பருத்தித்துறை | கொடிகாமம் | மானிப்பாய். | சங்கானை | சுன்னாகம். | நெல்லியடி. | சாவகச்சேரி | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | முல்லைத்தீவு |
| 021 222 5408 | 021 226 3411 | 0774643424 | 021 225 5343 | 021 225 1100 | 021 224 0555 | 021 226 4937 | 021 227 0197 | 021 228 0199 | 076 8622213 | 021 229 0180 |

உத்தரவாதம், விற்பனைக்குப் பிந்திய சேவை 0212224577

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 27.12.2015 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 46






# அரசியல் என்ற எல்லை கடந்த தமிழ் மக்கள் பேரவை

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோவிலில் நேற்றைய வைகறைப் பொழுதில் ஆருத்திரா தரிசனம் நடந்தேறியது. அதனால் பகல் பொழுது முழுவதும் பிள்ளையார் கோயிலில் சனக்கூட்டம் களை கட்டியிருந்தது.

மாலை ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டிற்குப் பண்டிதர் பரமலிங்கம் தலைமை தாங்கினார்.

**பண்டிதர்:** தமிழ்மக்கள் எதிர்பார்த்திருந்த ஒரு மக்கள் இயக்கம் தமிழ்மக்கள் பேரவை என்ற பெயரில் உருவாகியுள்ளது. இந்த அமைப்பிற்கு இறை ஆசி வேண்டி நாம் அனைவரும் கடவுளைப் பிரார்த்திப்போம்.

(பண்டிதர் இவ்வாறு அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று வழிபாடு செய்து நிறைவுபடுத்தினர்)

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா இப்பதான் மனதுக்கு ஆறுதலாக இருக்குது. எங்கட தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு ஒரு மக்கள் இயக்கம் உருவாகியிருக்கிறது. காலம் உணர்ந்த பணி.

**விதானையார்:** அதுமட்டுமல்ல வாத்தியார் வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பிரதிநிதிகள் மக்கள் பேரவை உருவாகிறதில முன்னின்று உழைத்தனர் என்ற போது என் இதயம் குளிர்ந்து கொண்டது. எங்கட சனங்களின்ர பிரச்சினையில தலையிடுகிற ஒரு அமைப்பை புத்திஜீவிகள் ஆரம்பித்திருப்பதை நாங்கள் பாராட்டவேணும்.

**கங்காணி:** வாத்தியார் தமிழ்மக்கள் பேரவை ஒரு அரசியல் கட்சியாக- கூட்டமைப்புக்கு எதிரான மாற்றுத் தலைமை என்று சிலர் சொல்லுகினமல்லோ...

**பண்டிதர்:** யாரும் எதுவும் எப்படியும் கதைக்கலாம். எப்படியும் விமர்சிக்கலாம் என்ற ஒரு நிலைமை வந்திட்டுது. ஆனால் தமிழ் மக்கள் பேரவையினர் தெட்டத்தெளிவாகச் சொல்லுகினம்.

இது அரசியல் கட்சியோ மாற்றுத் தலைமையோ இல்லை என்று. இப்படி அவங்கள் சொன்ன பிறகு அரசியல் கட்சி என்று நாங்கள் ஏன் சொல்ல வேணும்.

**விதானையார்:** அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று ஒரு பழமொழி இருக்குது. அந்த மாதிரித்தான் இதுவும் தமிழ்



## தமிழ் மக்கள் பேரவைக்கு இறைவன்ர ஆசி கிடைக்கட்டும்

மக்களின்ர நலனைப் பேணுகின்ற ஒரு அமைப்பைக் கண்டு அரசியல் கட்சி என்று பயம் கொள்வது தேவையற்றது.

**மூப்பர்:** எதுவாயிருந்தாலும் தமிழ்மக்கள் பேரவை அமைக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்துள்ளனர். இந்தச் சந்திப்பை நாங்கள் வரவேற்கவேணும். தமிழினம் ஒற்றுமையில்லாமல் இருந்தால் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற முடியாமல் போகும்.

ஆகையால் இரண்டு தலைவர்களும் சந்தித்தது நல்லது.

**கங்காணி:** மூப்பர் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. சம்பந்தரும் விக்கியும் மூத்த- பழுத்த தலைவர்கள். அவர்கள் இருவரும் சந்தித்து தங்களுக்குள்ள கருத்து வேற்றுமைகளைக் கலந்துரையாடித் தீர்த்துக்கொள்வது நல்லது.

தமிழ்மக்கள் பேரவை நல்ல நோக்கத்தோட உருவாகியதால் எல்லாம் நல்லா நடக்கும் என்று நம்பிறம்.

**பண்டிதர்:** ஏதுவும் எதிர்ப்பில்லாமல் நடக்காது. இயேசுபிரானை சிலுவையில் அறைந்த உலகம்,மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்ற உலகம் தானே. இந்தப் பார்க்கடலில் எல்லாம் இருக்கவே செய்யும். எதுவாயினும் உண்மையும் நேர்மையும் தான் இந்த மண்ணில் நிலைபேறடையும். மற்றவையெல்லாம் அழிந்தொழிந்து கொள்ளும்.

**மூப்பர்:** ஏதோ கடவுளேயென்று நல்லதொரு தீர்வுத் திட்டத்தை நாங்கள் தயாரித்து தமிழ்மக்கள் மற்றும் எல்லாத் தரப்புகளினதும் அனுமதியைப் பெற்று இதுவே எங்களுக்கான தீர்வுகளைத் தாருங்கள் என்று அரசிட்ட கேட்க வேணும். இதற்கு இறைவன் தான் உதவி செய்ய வேணும்.

எத்தனை காலமென்று எங்கட சனங்கள் கஷ்டப்படுகிறது. தென்பகுதி அரசியல் வாதிகள் சர்வதேச விசாரணை என்பதைத் தடுத்து நிறுத்தி தாங்களெல்லாம் சரியாகச் செய்வதாகக் காட்டக் கடும் பிரயத்தனம் செய்வர்.

எங்களுக்கு நீதி கிடைக்க வேணும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புச் சொல்லவேணும். இதுக்கு தமிழ்மக்கள் பேரவை உரிய நடவடிக்கைகளைச் செய்யவேணும் என்பது நம் விருப்பம்.

**பண்டிதர்:** மூப்பர் நீங்கள் சொல்லுறது நூறுவீதம் சரி. எங்கட புத்திஜீவிகளும் தமிழ்மக்களும் ஒன்றிணைந்து ஜனநாயக ரீதியில் எங்களுக்கான உரிமையைத் தாருங்கள் என்று கேட்பதில் எந்தத் தவறும் இல்லை.

இலங்கைத் திருநாட்டின் எதிர்காலம் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது கட்டாயமானதாகும்.

எனவே தமிழ்ப்புத்திஜீகள் தங்கட தனிப்பட்ட கருத்து நிலைகளை மறந்து ஒன்றுபட்டு தமிழ்மக்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் கடுமையாக இறங்க வேணும் என்பது என் தாழ்மையான கருத்து.

**வாத்தியார்:** உண்மையாகவும் நேர்மையாகவும் தமிழ்மக்கள் பேரவை செயற்படும்போது அதன் இயங்கு நிலை என்பது ஆரோக்கியமாக இருக்கும்.

மக்கள் நிச்சயம் அதற்கு ஆதரவு வழங்குவினம்.

**கங்காணி:** தமிழ் மக்கள் பேரவையை ஒரு அரசியல் கட்சியாகவோ மாற்றுத் தலைமையாகவோ பார்க்கின்றவர்களை நாம் விமர்சிக்க வேண்டிய தேவை இல்லை. அவர்களுக்கு உரிய விளக்கத்தை கொடுப்பது நமது கடமை.

தமிழ் மக்களின் அரசியலைப் பொறுத்தவரை தமிழ் மக்களின்ர ஒற்றுமைதான் அதனை வலுப்படுத்தும். இதைவிடுத்து தமிழ் மக்கள் பேரவையை தத்தம் சுய நலனுக்காக விமர்சித்தால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

**மூப்பர்:** அதுசரி கங்காணியார் 2016 ஆம் ஆண்டின் பிறப்பை ஒட்டி கலண்டர் அடித்து வெளியிடுகிற ஒரு நடைமுறை உண்டு. இந்தக் கலண்டர்களில நடிகர்களின்ர படங்களை அச்சிடக் கூடாது என்பது என் தாழ்மையான கருத்து.

**விதானையார்:** ஏன் மூப்பர் அப்படிச் சொல்லுறியள்.

**மூப்பர்:** விதானையார் எங்கட மண்ணில இருக்கிற எத்தனையோ அருமையான இயற்கைக் காட்சிகள் இன்னமும் வெளிவராமல் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்து கோட்டையின்ர புகைப்படத்தை கலண்டரில வெளியிட்டால் எங்கட பிள்ளைகள் அதைப் பார்த்து அதின்ர வரலாறை படிக்க முற்படுவினம்.

இதுபோல எத்தனையோ இயற்கைக் காட்சிகள் எங்களிட்ட உள்ளன. அவற்றை கலண்டர் படங்களில வெளியிட்டால் எங்களுக்கும் பெருமை. அதனை மாணவர்களும் கண்டறிவர்.

இப்படி மூப்பர் சொல்ல அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

அன்பு வாசகர்களே! ஆலடி மாநாட்டுக்கு உங்கள் கருத்துக்களை அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
வலம்புரி,
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆதித்தன்

# அரசியல் என்ற எல்லை கடந்த தமிழ் மக்கள் பேரவை


குருஷேத்திரம்

இந்திய தேசத்திற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர் மகாத்மா காந்தி. பாரத பூமி சுதந்திரமடைந்து தேசியக் கொடி ஏற்றுகின்ற மிக முக்கியமான நிகழ்வில் மகாத்மா காந்தி கலந்து கொள்ளவில்லை என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இந்திய தேசத்தின் எங்கோ ஒரு மூலையில் ஏற்பட்ட கலவரத்தைத் தடுப்பதற்காக அவர் அங்கு சென்றிருந்தார். பாரதத்திற்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்த காந்தி தேசியக் கொடி ஏற்றுவதற்கு விருப்பம் கொண்டிருப்பாராயின் மோகனதாஸ் என்ற மனிதர் மகாத்மாவாகி இருக்க முடியாது.

இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிடவேண்டும் என்று கூறிய மகாத்மா காந்தி தனது தொண்டர்களை கிராமந்தோறும் சென்று அங்குள்ள மக்களுக்குச் சேவை செய்யுங்கள் என்றார். எனினும் அரசியல் ஆசை கொண்ட காங்கிரஸார் காந்தியின் கோரிக்கையைச் செவிமடுத்திலர்.



காந்தி கூறியதன்படி காங்கிரஸ் தொண்டர்கள் இந்திய தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றிருந்தால் உலகின் முதற்தர நாடு இந்தியா என்றாகி இருக்கும்.

ஆக இன்று உலகம் முழுவதிலும் காந்தியம் பற்றிப் பேசுவதற்கு காரணமாக இருந்த மகாத்மா காந்தி அரசியலில் ஈடுபட்டிருந்தால் அவரை உலகம் இத்துணை தூரம் போற்றியிருக்காதென்பது சர்வநிச்சயம்.

இதுபோலத்தான் ஈ.வே.ரா. பெரியாரும் அரசியலில் ஈடுபட்டிருக்கவில்லை. பகுத்தறிவு என்பதை தமிழகம் முழுமைக்கும் கொண்டு சென்றார். தமிழக அரசியல்வாதிகளை நெறிப்படுத்தினார்.

பகுத்தறிவின் தந்தை ஈ.வே.ரா.பெரியார் யாரைக் காட்டுகின்றாரோ அவரே தமிழகத்தின் முதலமைச்சர் என்ற நிலைமை இருந்ததெனில், அரசியலில் ஈடுபடாத பெரியாரின் மகத்துவம் எத்துணை என்பதை உணர முடியுமல்லவா?

ஆக, அரசியலில் ஈடுபடுவதன் மூலமே மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்ற எண்ணம் அர்த்தமற்றது. அரசியலுக்கு அப்பால் மக்களுக்கான சேவையாற்ற முடியும் என்பதை இந்த இடத்தில் கூறித்தானாக வேண்டும். இத்தகையதொரு உண்மையை நிலை நிறுத்துவதற்கான ஓர் அமைப்பாக தமிழ்மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. அரசியல் எல்லைகள் கடந்து தமிழ் மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கான ஒரு அமையமாக தமிழ் மக்கள் பேரவை உருவெடுத்தமை காலம் உணர்ந்த பணி என்றே கூறவேண்டும்.

மதத்தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள் இணைந்து ஆரம்பித்த இந்த அமைப்பில் வடக்கு மாகாண் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் உள்ளடக்கியதான இணைத் தலைமை என்ற கட்டமைப்பு ஏற்படுத் தப்பட்டமை நல்லதொரு ஏற்பாடு எனலாம்.

இதற்கு மேலாக வடக்கு கிழக்கு பிரதிநிதித்துவம்



மக்கள் பேரவையில் இடம் பெற்றுள்ளமை இந்த அமைப்பின் வெற்றிக்கு மூலகாரணமாக அமையும்.

இதேவேளை தமிழ்மக்கள் பேரவை என்ற அமைப்பு ஓர் அரசியல் கட்சி என்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கான மாற்றுத் தலைமை என்றும் பிரசாரம் செய்கின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது.

அரசியல்வாதிகள் தமது

## தமிழ் மக்களின் நலன்களுக்கான மக்கள் இயக்கமாக மலரவேண்டும்

நலனுக்குப் பங்கம் வந்து விடுமோ என்று ஏங்கிக்கொண்ட போது இத்தகையதொரு பிரசாரத்தையே கையில் எடுத்தனர்.

எனினும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் மட்டும் நிதானமாக, மக்கள் பேரவையின் பணியைப் பொறுத்திருந்து பார்ப்போம். அவசரப்பட்டுக் கருத்துக்கூற முடியாது என்றார். சம்பந்தரின் இக்கருத்து அவரின் ஆழ்ந்த அரசியல் பட்டறிவைப்பு கட்டி நின்றது.

### மக்கள் நலன்சார்ந்த அரசியல் தலைமை இல்லை

2009 ஆம் ஆண்டுக்குப் பின்பான தமிழ்மக்களின் அரசியல் தலைமை என்பது பதவியை இலக்காகக் கொண்டே நகர்வடைந்து வருவதை அவதானிக்க முடியும். தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் உண்மையான கரிசனை இருந்திருக்குமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

கூட்டமைப்பிற்குள் குழப்பம் என்ற பேச்சுக்கே இடம் இல்லாத வகையில் கூட்டமைப்பின் பதிவு பாதுகாத்திருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இருந்தும் தமிழரசுக்கட்சியை முதன்மைப்படுத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைக்கின்ற ஓர் உள்நோக்கம் உள்வீட்டிற்குள் நடந்ததேயன்றி வேறில்லை என்பதை சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்தாக வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்து அதனை ஓர் அரசியல் கட்சியாக அறிவிக்கும் அதேநேரம் தமிழ் மக்கள் பேரவை என்ற ஓர் அமை ப்பை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே ஆரம்பித்திருக்க வேண்டும்.

தமிழ்ப்புத்திஜீவிகள், சமூகத் தலைவர்கள், தமிழினத்தின் நன்மைக்காக ஆத்மார்த்தமாக சிந்திப்பவர்களை உள்ளடக்கியதான வடக்கு கிழக்கு இணைந்த ஓர் அமைப்பை கூட்டமைப்பு உருவாக்கியிருந்தால் இன்று தமிழ்மக்களின் வாழ்வியலில் மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

என்ன செய்வது தமிழ் மக்களின் நலன்களைக் கவனிப்பது; தமிழ்மக்கள் படுகின்ற துன்ப துயரங்களை அறிந்து கொள்வது; அதற்குப் பரிகாரம் காண்பது என்ற விடயங்களில் அறவே அக்கறைப்படாமல் கொழும்பில் கூடி முடிவெடுப்பது, எடுத்த முடிவை தாமே தமக்குள் வைத்திருப்பதென்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

யாரும் எங்களை எதுவும் கேட்க முடியாது- கேட்பதற்கும் இடம் கொடுக்க முடியாதென்ற தனித்துவப் போக்கு தமிழ்மக்களிடையே பலத்த அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது என்ற உண்மையை யேனும் இப்போதாவது தமிழ் அரசியல் தலைமைகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

விமர்சனங்களும் பிரசாரங்களும் எதிர்விளைவாக இருந்தால் எங்களின் அரசியல் பயணம் தடையின்றித் தொடரும் என்ற சிந்தனை, அடிப்படையில் நன்மை தரக் கூடியதல்ல. இதற்கு மேலாக, தமிழ் அரசியல் தலைமையில் தனிமனித ஆதிக்கங்களும் தனிமனித காரியங்களும் எந்த வகையிலும் ஏற்புடையதல்ல என்ற நியாயத்தின் மத்தியில் தமிழ்மக்கள் பேரவையை அரசியல் என்ற எல்லைகளுக்கு அப்பால் தமிழ்மக்களின் உரிமையை, நலன்களை வலியுறுத்து வதும் வலுப்படுத்துவதும் அமைப்பாக கட்டியெ ழுப்புவது தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு பெருந்துணையாக அமையும்.

விதுரன்




# சிங்கக்குட்டியின் புது தீபாவளி

ஒரு நாள் சிங்கராஜா, குடும்பத்துடன் காட்டைச்சுற்றி வலம் வந்தது. அப்போது, இளவரசர் சிங்கக்குட்டி, காணாமல் போய்விட்டது. இளவரசர் சிங்கக்குட்டி, வழி தவறி நாட்டுக்குள் நுழைந்தது. இது தெரியாமல் காட்டில் விலங்குகள் இளவரசரைத் தேடிக்கொண்டிருந்தன.

நாட்டிலோ, அன்றைக்குத் தீபாவளித் திருநாள். எங்கு பார்த்தாலும் மனிதர்கள், பட்டாசுகளை வெடிக்கவைத்து மகிழ்ச்சியாக இருந்தார்கள். நம்ம இளவரசர் சிங்கக்குட்டிக்கோ பட்டாசு சத்தம், பயத்தை உண்டாக்கியது. இதற்கு முன்பு இதுபோன்ற சத்தத்தை அது கேட்டதே இல்லை. அதனால், ஒருவித பயத்துடன் எங்கு செல்வது, எனத் தெரியாமல், சுற்றிச்சுற்றி வந்தது. அஞ்சி நடுங்கிக்கொண்டு, ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றது. அப்போது, அந்த வழியாக வந்த தெருநாய் ஒன்று, சிங்கக்குட்டியை அடையாளங் கண்டுவிட்டது.

"என்ன சிங்கக்குட்டி! நாட்டில் தீபாவளியை வேடிக்கை பார்க்கக் காட்டில் இருந்து வந்து விட்டீரோ" என்று கேட்டுச் சிரித்தது.

தெருநாயைப் பார்த்த சிங்கக்குட்டி முதலில் பயந்தது. பிறகு அதன் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் தைரியம் பெற்றது.

"இல்லை... இல்லை.. நான் வேடிக்கை பார்க்க வரல நண்பா. வழி தவறி நாட்டுக்குள்ள வந்துட்டேன். தீபாவளி என்றால் என்னான்னே எனக்குத் தெரியாது. இங்கே எங்கு திரும்பினாலும் சத்தம் காதைப் பொளக்குதே.. இதுதான் தீபாவளியா?" எனக் கேட்டது.

"என்ன சிங்கக் குட்டியாரே! இந்தச் சத்தத்திற்கா பயந்துவிட்டீர். இது பட்டாசுச் சத்தம். தீபாவளி, நாட்டுக்குள் நடக்கும் முக்கியமான பண்டிகை. இதை மனிதர்கள் ரொம்ப ஜாலியாகக் கொண்டாடுவார்கள். ஊசிப்பட்டாசு, சரவெடி, புஸ்வாணம், சங்கு–சக்கரம் எனப் பல பட்டாசு, மத்தாப்புகளை வெடித்து மகிழ்ச்சியடைவார்கள்.

சில சமயம் சிறுவர்கள், எங்களைப்போன்ற அப்பாவி பிராணிகளின் வாலில் பட்டாசுகளைக் கட்டி அதை வெடிக்கச் செய்தும் வேடிக்கை பார்ப்பார்கள்" என்றது தெருநாய்.

"நண்பா தீபாவளி பற்றியும் பட்டாசு குறித்தும் சொன்னதற்கு ரொம்ப நன்றி. நான் காட்டுக்குச் செல்ல, வழி சொல்ல முடியுமா?" என்று கேட்டது சிங்கக்குட்டி.

"சரி! வாருங்கள் வழி காட்டுகிறேன்" என்று கூறி, காட்டின் வாசல் வரை கொண்டுவந்து விட்டது நாய்.

இளவரசரைக் காணாமல் பதறிப் போயிருந்த விலங்குகள், காட்டின் வாசலில் இளவரசரைக் கண்டவுடன் ஓடிவந்து அணைத்துக் கொண்டன. சில விலங்குகள் அரசருக்குத் தகவல் கூற விரைந்தன. சிங்கராஜாவும் விரைந்து வந்தது. இளவரசரைக் கண்டதும் மகிழ்ந்தது. தீபாவளி, பட்டாசு பற்றி இளவரசர் கூறியதைக் கேட்டுச் சிங்கராஜா வியந்துபோனது.

"அப்பா! இந்த ஆண்டு நாமும் தீபாவளி பண்டிகையைக்காட்டில்கொண்டாடலாமா?" என்று கேட்டது இளவரசர் சிங்கக்குட்டி.

"அப்படியே ஆகட்டும்" என்றது சிங்கராஜா.

காடே விழாக்கோலம் பூண்டது. எங்கு பார்த்தாலும் தோரணங்கள் சோடனைகள் கட்டப்பட்டுப் புதுக்காடாக மாறியிருந்தது. வெளியூர் சென்றிருந்த பறவைகள்பயணத்தை முடித்து, காட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

காட்டை நெருங்கியதும் தோரணங்களைக் கண்டன. நண்பர்கள் மூலம் செய்தியை அறிந்து கொண்டன. நேராக சிங்கராஜாவைச் சந்திக்க குழுவாகப் பறந்தன.

"அரசே வணக்கம். நாங்கள் ஊர் ஊராகப் பயணம் செய்பவர்கள். நிறைய ஊர்களில் தீபாவளி கொண்டாட்டங்களைப் பார்த்திருக்கிறோம். நம் காட்டில் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடப் போவதாக அறிந்தோம்; சந்தோசம். அத்துடன் வருத்தமும் அடைகிறோம்" என்றன வேதனையுடன்.

"என்ன பறவைகளே! மகிழ்ச்சி என்கிறீர்கள். கூடவே வருத்தம் என்றும் கூறுகிறீர்கள். எனக்குப் புரியும்படி கூறுங்கள்" என்றது சிங்கராஜா.

அரசே! தீபாவளி பண்டிகையை நாம் தாராளமாகக் கொண்டாடலாம். அதாவது புது உடை, பலகாரங்கள் செய்து கொண்டாடலாம். ஆனால், பட்டாசுகள் வேண்டாமே" என்றது ஒரு பறவை.

"எதற்காகப் பட்டாசுகள் வேண்டாம் எனக் கூறுகிறீர்கள்" என்று கேட்டது சிங்கராஜா.

"அரசே பட்டாசுகளை வெடிக்கும்போது, அதிலிருந்து வெளியேறும் நச்சுப்புகை, காற்று மண்டலத்தில் கலந்துவிடும். முயல், முள்ளம்பன்றி, போன்ற சிறிய விலங்குகளுக்கும், சிட்டுக்குருவி, தேன் சிட்டு பறவைகளுக்கும் மூச்சுத் திணறலை ஏற்படுத்தும். பட்டாசுச் சத்தம் ஒலிமாசை ஏற்படுத்தும். அதனால்தான், எங்களைப் போன்ற பறவைகள் கூடும் கிராமங்களில் பறவைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மனிதர்கள், பட்டாசு வெடிக்காமல், தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள்" என்றது.

"ஓ! அப்படியா? பட்டாசில் இவ்வளவு பெரிய தீங்கு இருக்கிறதா? இளவரசர் ஆசைப்பட்டதால் தான் நான் ஒப்புக்கொண்டேன்" என்றது சிங்கராஜா.

"அப்பா! பலருக்கும் தொந்தரவு தரும் பட்டாசை வெடிக்காமல், ஓசையில்லாமல் தீபாவளியைக் கொண்டாடலாமே" என்றது இளவரசர் சிங்கக்குட்டி.

"அப்படியே ஆகட்டும்" என்றது சிங்கராஜா.

மகிழ்ச்சியில் சிறகைப் *படபட*வென அடித்தன பறவைகள்.



# விழிப்புலனற்றோரின், விழி!

## BlindSquare





BlindSquare ஆனது, (GPS) புவிநிலைய ஒழுங்குமுறை தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு பயன்பாடு.

இது smart phone, ipad, tablet களில் பயன்படுத்தப்படக் கூடியது இதன் செயற்பாடுகளைப் பார்க்க முடியாது; கேட்க மட்டுமே முடியும்.

இது, தன்னைச் சுற்றியுள்ள சூழலமைவை விபரித்தல், இடங்களை- (points) பற்றி ஆர்வமளிக்கும் படி ஒலிபரப்புதல், பயணிக்கின்ற வீதியில் சந்திக்கின்றவற்றை தெரிவித்தல் போன்ற பலவழிகளில் பார்வையற்றோருக்கு வழிகாட்டுகிறது. சுதந்திரமாகப் பயணிக்க விரும்பும் விழிப்புலன் பாதிக்கப்பட்டவர்களுக்கும், விழிப்புலனற்றோருக்கும் இது இந்த வகையில் பயனளித்து வருகிறது.

உலகில் பல்லாயிரக்கணக்கான விழப்புலனற்றோர் தற்பொழுது இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சற்று விலை அதிகமானாலும் இதன் பயன்பாடு அளவிடற்கரியது.

**BlindSquare செயற்படும் முறை**

இது, சுயமாகக் குரல் கொடுக்கக் கூடியது. இதற்காக இது, பயனர், வரையறுக்கக் கூடிய- தொடர்ச்சியாக சலிப்பின்றி இயங்கக் கூடிய பேச்சொலிப்பானைத் தன்னகத்தே கொண்டுள்ளது. GPS தொழில் நுட்பத்தைக்கொண்ட ios களால் இயங்கவைக்கப்படும் இத் தொலைபேசிகள், பயனரைச் சுற்றியுள்ள சூழலமைவை, வீதியில் சந்திக்கின்றவற்றை, ஆர்வமூட்டும் இடங்களை, தெரிவிப்பதுடன் பயனர் தரித்து நிற்கும் இடத்தையும் தெரிவிக்க வல்லது.



மேலும் பயனர் இருக்கும் இடத்தை மையமாகக் கொண்டு, சுற்றியுள்ள 200 மீற்றர் கொண்ட - சதுரத்தின் தகவல் வரைபடத்தைத் GPS இன் உதவியுடன் தரவல்லது. குரல் ஒலிப்பானைப் பயன்படுத்தி, குறித்த தரிப்பிடத்தின் பயனுள்ள தகவல்களைப் பெறமுடியும்.

உதாரணமாக, 200 மீற்றர் சுற்று வட்டத்துக்குள் உள்ள ஒரு தபால் நிலையம், நூல்நிலையம், பிரபலமான கடைகள், வேறு இடங்களை கண்டுபிடிக்க முடியும்.

இச்சாதனத்தை அசைப்பதன் முலம் (shake) தரித்து நிற்கும் இடத்தை எதுவென்று அறிந்துகொள்வதுடன் அவ்விடம் பற்றிய தகவல்களையும் வீதியில் இருப்பவை போன்றன பற்றிய தகவலையும் அறிந்து கொள்ள முடியும்.


மேலும் BlindSquare, குறித்த நேர இடைவெளியில், பாதையில் பயணிக்கும் பயனர் அடையவேண்டிய இலக்கு இன்னும் எவ்வளவு தூரத்தில் உள்ளது, அவ்விடம் இருக்கும் திசை ஆகியவற்றையும் சொல்லிக் கொண்டிருக்கும்.

பயனர் தனது இலக்கு பற்றிய விரங்களை சேமிக்கவும் முடியும். அவ்வாறு சேமித்து வைத்த தகவல்களை திரும்பவும் பயன்படுத்த முடியும். அச்சமயம் மேலதிக தகவல்களைக் கேட்க வேண்டிய அவசியம் இருக்காது ஏனெனில், அது அச்சமயம் சேமித்து வைத்த தகவல்களை மட்டும் தந்துகொண்டிருக்கும். இதனால், அடுத்த தவணை அவ்விடத்திற்கு செல்லுதல் இன்னும் இலகுவாக அமையும்.

BlindSquare ஆனது, பல மொழிகளில் ஒலிக்கக் கூடியது மட்டுமல்லாமல், பயனரின் கணக்கு அங்கீகரிக்கப்படுமிடத்து அவர், (விழிப்புலனற்றோர்) முகநூல், ருவிற்றர்களையும் பயன்படுத்த முடியும்.

22 மொழிகளுக்கு மேற்பட்டு- பயன் படக்கூடியதாக இருப்பது, உலகம் முழுவதுமான விழிப்புலனற்றோருக்கான சக்திவாய்ந்த ஒரு தீர்வாக BlindSquare அமைந்துள்ளது என்பது இங்கு மேலும் குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழில் -பாமா





# வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**துன்பத்தில் உடன் இருப்பவள் அம்மா எனின் ஏன் இராமனுடன்...**

**காணாமல் போனவர்களின் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முடிவு என்ன?**

**மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவாரா?**

கௌசிதாஸ் — குப்பிளான்

**பெண்களுக்கு தாடி, மீசை இருந்தால்?**

அடப்பாவி ஆண்களிடமிருந்து பெண்கள் எடுத்துக் கொள்ளாதது இதுமட்டும் தான். இதையும் எடுத்துக் கொண்டால் நாமெல்லாம் சேலையைக் கட்ட வேண்டியதுதான்.

யுவராஜ் — நாகர்கோவில்

**அங்கிள் நீங்க எப்பிடியிருப்பீங்க?**

நான் எப்படி இருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியாதவரைதான் என் பதில்கள் உங்களுக்கு சுவாரசியமாக இருக்கும். தெரிந்து விட்டால் சப்பென்று போய்விடும்.

கரன் — யாழ்ப்பாணம்

**மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவாரா?**

நல்லாட்சி அரசிற்கு முட்டுக்கட்டை போடுவதில் புரியவில்லையா மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிப்பதை.

ஜனு — யாழ்ப்பாணம்

**காதலித்து ஏமாற்றியவர்களுக்காக வாழ்வை வெறுக்கும் ஆண்கள் பற்றி?**

மிஸ்டர் காதலர்களே! உங்களை ஒருவர் ஏமாற்றினால் அவர்கள் உங்களை ஏன் இழந்தோம் என கவலை கொள்ளும் அளவுக்கு வாழ்ந்து காட்டுங்கள். அது தான் வாழ்வின் வெற்றி. அதைவிடுத்து உங்களையே நீங்கள் அழித்துக் கொள்வது முடிவே தவிர ஆரம்பமில்லை.

சுதன் — மந்துவில்

**அன்பு, காமம் இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?**

அன்பு பந்துபோல. எறிந்தால் மீண்டும் எம்மிடமே வந்து சேர்ந்துவிடும். காமம் கல்லுப் போல. எறிந்தால் காயம்தான் ஏற்படுமே தவிர மீட்சியிருக்காது.

துகி — சிவநகர்

**காதலா நட்பா சிறந்தது?**

நட்பு உள்ளங்களை இடம் மாற்றும். காதல் உள்ளங்களையும் உடல்களையும் இடம் மாற்றும். இப்போது சொல்லுங்கள் எது சிறந்தது.

நிஷாந் — தெல்லிப்பழை

**உங்களுக்கு உலக்கையால் அடிக்கணும் போல இருக்கு மாமா?**

என் மனைவியைத் தவிர வேறு யாரிடமும் அடிவாங்குவதில்லை என சபதம் எடுத்துவிட்டேனே என்ன செய்ய?

இரா.நவா — வயாவிளான்

**துன்பத்தில் உடன் இருப்பவள் அம்மா எனின் ஏன் இராமனுடன் கோசலை காடு செல்லவில்லை?**

கணவன் இருக்கும் இடம்தான் அயோத்தி எனச் சொல்லித்தானே இராமனுடன் காடேகினாள் சீதை. தசரதன் இராமனுடன் காடேகவில்லையே. தசரதன் இருக்கும் இடந்தானே கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகியோருக்கு அயோத்தி.

அகீபன் — வரணி

**தமிழர்களைப் பற்றி கொஞ்சம் சொல்லவும்?**

பாவப்பட்ட இனம். தனக்கான இருப்பை ஒரு காலத்தில் நிலை நிறுத்தியிருந்தது. ஆனால் தமிழ் இனத்திலேயே துரோகிகள் முளைத்தனர். எம் இனம் கருவறுக்கப்பட்டது. துரோகிகளுக்கு அப்போது பொற்காசுகளும் இப்போது புதுக் காசுகளும் கொடுக்கப்படுகிறது.



ரெட்டைக் குழந்தைங்க தலைவரே, நீங்கதான் பெயர் வைக்கனும்
ரஜினிமுருகன், கமல்முருகன்

## அன்பு வாசகர்களே!

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS)**

**021 567 1532**

சமீதன் — நயினாதீவு

**உங்கள் வருங்கால இலட்சியம் என்ன?**

உங்கள் கேள்விகளுக்கு நல்ல பதில் எழுதுவதுதான்.

பிரணவன் — மானிப்பாய்

**காணாமல் போனவர்களின் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முடிவு என்ன?**

காணாமல் போன உறவுகள் மீண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில்தான் எம் உறவுகள் ஆணைக்குழு முன்னிலையில் கதறி அழுதனர். மதிப்பிற்குரிய ஜனாதிபதி காணாமல்போனவர்களை மீட்டுத்தருவார் என்ற நம்பிக்கை உறவுகளிடத்தே ஒட்டிக்கிடக்கிறது. இனி எல்லாம் அவன் செயல்.

விக்கி — கரணவாய்

**காதல் என்பது?**

என்னை உனக்குப்பிடிக்குமா? என்பதில் தொடங்கி என்னை தவிரவேறு யாரையும் உனக்குப் பிடிக்கக் கூடாது என்பதில் பயணிக்கிறது காதல்.

வே.வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி

**தவளைகளின் தொல்லை தாங்கமுடியவில்லையே?**

யாழ்ப்பாணத்தில் தவளைகள் தான் அதிகரித்து விட்டன. கடந்தவாரம் தமிழ் மக்களின் நன்மைகருதி அறிஞர்களால் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

அப்போது அதற்கு எதிராக எத்தனை தவளைகள் கத்தின தெரியுமா? தவளைகள்தான் கத்துகிறது என்று பார்த்தால் வாற்பேத்தைகளுமெல்லோ கத்துகின்றன.

வேல்நந்தன் — புலோலி

**அடுத்த ஆண்டிலாவது தமிழர் எம் சபதங்கள் மெய்ப்படுமா?**

முதலில் தமிழ் மக்கள் நரிகளையும் பரிகளையும் வித்தியாசம் காணப்பழகிக் கொள்ள வேண்டும். நரிகளுக்கு பட்டாபிஷேகம் செய்வதை நிறுத்தி நல்லவர்களை இனங்கண்டு அவர்களை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்புவோம். அதன் பின் எல்லாம் சரிவரும்.

மிதுஷியா — விசுவடு

**அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்கும் என்ன வித்தியாசம்?**

ஆன்மீகம் போதிக்கிறது. அறிவியல் சோதிக்கிறது. அவ்வளவுதான்!

# கவிதைக் கலசம்

## ஆன்மீகம் தேடும் அன்பருக்கு

ஆன்மீகத்தை தேடியலையும்
ஆத்திகவாதிகளே...
ஆலயங்களில் தேடி அலையாதீர்கள்...
கல்லிலும் சொல்லிலும் கரை காணாத
பிரபஞ்சத்திலும் ஆண்டவன்
லயிப்பதில்லை...
உங்கள் மனக்கண்ணைக் கொஞ்சம்
திறந்து பாருங்கள்... அங்கே
அன்பின் திருவுருவாய் வீற்றிருக்கும்
ஆண்டவனை நேசியுங்கள்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## வெற்றுக்கிரகமாகிறதா?

மழைக்காக தவமிருந்தவர்கள்
வெள்ள நிவாரணத்திற்காக நிற்கிறார்கள்
இயற்கையோடு பிசகிக் கொண்டவர்கள்
செயற்கையின் ஆராதனையால் அவதியில்
கற்காலத்தவனுக்கு எல்லாம் காடுதான்
பிற்காலத்தவன் காடுகளை அழித்தான்
தற்காலத்தவன் நட்ட ஈடு செலுத்துகிறான்
ஐஞ்சு பூதமும் அழுக்கேறியதால்
ஓசோன் போர்வை கந்தலானது
பூதலம் புகையில் மூச்சுத் திணறுகிறது
காபனைச் சேகரிக்க மரங்கள் இல்லை
நைதரசன் நாட்ட சிற்றுயிர் இல்லை
பூமியை வெற்றுக்கிரமாக்கி
வேற்றுக்கிரகங்களை ஆராய்கிறான்
இங்கிருந்த மனிதரின் தொன்மங்களை
ஆய்வு செய்யும் அவலத்தில் அவன்

சு.சிவராசா
நாவற்குழி

## கந்தா! கதிர்வேலா!

தன்னையறியா நங்கையவள்
தான் கறுப்பென்றெண்ணி
கண்ணீர் வடித்து நிற்க
வந்ததொரு விளம்பரம்
மூன்று திங்களில்
சிகப்பழகென்று
பூசினாள் பூசினாள்
பூசிக் கொண்டே இருக்கிறாள்
பத்துத் திங்கள் கடந்து விட்டது
பலனோ கிடைத்தபாடில்லை

மாவை. நா.கஜேந்திரன்

## உலகை வெல்ல ஊனம் ஒரு தடையல்ல

நாளைய உலகின் நாயகர் நாமே
உலகை வெல்ல எம்மால் முடியும்
வெல்வோம் உலகை வெல்வோம் நாமே
நாளை உலகை வெல்வோம் வாரீரே!

போட்டி பொறாமை கொள்ளாமல்
பொறுமையோடு சிந்தித்து
பொது நலனில் கரிசனையாய்
பங்கு கொள்வோம் வாரீரே!

வாழ்க்கை என்றும் வாழ்வதற்கே
வளங்கள் நிறைந்தது எம் நாடு
வளத்தில் சிறந்து வளங்கொழிக்க
வருந்தியுழைப்போம் வாரீரே!

உன்னத வாழ்வு வாழ்வதற்கு
ஊனம் ஒரு தடையல்ல
வாழ்வில் உயர்ச்சி பெற்று நாம்
வாழ்வோம் வாழ்வோம் வாரீரே!

வவுனியா
சோபி

## முட்களிடையே மலர்கிறோம்

எமது பிரசவத்திலேயே
வானம் அழுது வடிக்கும்
பனித்துளிகளை
பெண்மையை வருடிவிடும்
பொய்யான பரிவுகளும்
வெள்ளைத் தோலுக்காய்
வண்ணத்துப்பூச்சிகளின்
விண்ணப்பங்களும்
வயதுக்கு வந்துபோது
வாழ்வை வஞ்சித்த
விதமான நெருடல்கள் அவை
எங்கே எம்மை தேடிய உடல்கள்
நாம் வாடிய போது காணவில்லையே!
அவை ஆதிக்கத்தையே மொத்தமாக
போதித்து போகின்றன

பா.யுகந்தன்
நெடுந்தீவு

# மௌனத்தின் தேடல்- 280



## தண்டனை

நிலவினை தடுத்து நிறுத்தி
அவனின் விழிகளை குருடாக்கி
விட்டுப்போகும்
காரிருள் மேகம் போல
சில துஷ்டர்களின் கொடூர
செயல்களால் உறவுகளை
இழந்து தவிக்கின்ற
என் இனிய உறவுகளே
கலங்காதீர்கள்!
வினை விதைத்தவன்
வினை அறுப்பான்
சூரியனை தரிசித்த பனிபோல
உங்கள் சோகங்கள்
விலகட்டும் இனி
விடியட்டும் உங்கள்...?...?

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகலூர்

## ஓலமிடுகின்றான் உதவி உதவி என...

கொட்டும் மழை எங்கும்
கொடூர யுத்தம்
நித்தம் செத்து மடியும்
நம் மனித இனம்
அவர்தம் சொத்து சுகம்
குண்டுமழை தன்னில்
குற்றுயிரான உறவுதனை
கையிலேந்தி ஓடுமிவன்
ஓலமிடுகின்றான்
உதவி உதவி என்று

கதிர்ஷன், சந்நிதி

## பிரிவின் வலி

தன் உயிருக்குயிரானவளின் சடலத்துடன்
இன்னுயிர் பிரிவு தாங்க முடியாமல்
தன் உயிர் வேதனை , மனவேதனை
தாங்க முடியாத வலியில் இவன்!
உயிர் உறவின் பிரிவின் வேதனை
வலியை சிந்தித்து உணராதவர்கள்
மனிதம் இல்லாத மனிதர்களே!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## எம் சாதனை

பாசமுடன் உடனிருந்த
உறவுகளை
இரக்கமில்லா நீரலைகள்
சேர்ந்து ஒன்றாய்
உயிர்ப்பலி எடுக்கவென- அன்று
நிகழ்த்தி விட்ட கொடும்
வெறியாட்டமதில்
பலியாகிப்போன
தம்மினிய உறவுகளை
பறிகொடுத்து தாங்காது
துடிக்கின்ற – அவர்களின்
உடன் பிறந்த உறவுகளுக்கு...
நேசக்கரம் நீட்டி
அவர் துன்பம் நாம் பகிர்ந்து
மெல்லக் கதை பேசி
அவர் இடர்கள் அகற்றிடுதல்
இவர்கள் பட்ட துயர்போக்கும்
எம்கரத்தின் சாதனையே

சோலைநகர் அருள்யோன்சன்
கிளிநொச்சி

## சரித்திரம்

இயற்கையின் சீற்றம்
கண்டு அஞ்சுபவன்
வாழ்வைக் காதலிப்பவன்
புயல் வெள்ளம் பூகம்பம்
எதுவானாலும் கண்ணீராயல்ல
கவிதை போல் வந்து
பாதிக்கப்பட்டவர்களை
மீட்பவர்கள் யாரோ
இவர்களே உண்மையில்
உலகைக் காதலிப்பவர்கள்
சரித்திரம் சுயநலமில்லாத
படிப்பினையாகட்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## மனிதநேயம்

கடுஞ்சொற்களால் நெஞ்சை
காயப்படுத்திய காதலி
கண்ணெதிரில் அடிபட்டு
காயத்துடன் துடிப்பதை
கண்ணுற்ற காதலன்
கைகளினால் தூக்கி
கன்னி உயிர் காக்க
கண்ணீரோடு விரைகின்றான்
அத்தனையும் மறந்து
அங்கே வாழ்கிறது
காதலையும் தாண்டிய
அவனின் மனிதநேயம்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## கடும் மழையின் கொடுமை

வானம் மழை பொழிய
வையமெங்கும் வெள்ளம்
பெருக்கெடுத்தோடி
வீடெல்லாம் நிறைக்க
மக்கள் குடியிருக்க முடியாத
அவல நிலையில் தத்தளிக்க
தண்ணீரில் வீழ்ந்த பெண்ணை
கண்ணீரோடு தூக்கிப்
புண்பட்ட இதயத்தோடு
கரை சேர்க்கிறான் கதறியவாறு


துரை, தென்மட்டுவில்

## உணர்வுகள் எங்கே?

உணர்வுகளை எரித்துவிட்டு
உண்மை நிலை மறந்து விட்டு
உயிரற்ற ஜடமாய் மாறுகின்ற மனிதம்!
உணர்வுகளுக்கு வரம்பிட்டு
மிருகமாய் மாறும் மனிதர்கள்

மெ.புவஸ்ரினா, நாவற்குழி

# மௌனத்தின் தேடல் –281



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.12.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

பாரம்பரிய வளங்களின் பயன்பாடு எனும் தலைப்பில் க.நிஷாந்தன், எஸ்.மயூரன் இணைந்து எழுதிய கட்டுரையாக்கத்தைத் தொடர்ந்து இவ்வாரம் எமக்குள் சமூகம் சமூகத்துக்குள் நாம் உதவப்போவது யார்? எனும் தலைப்பில் தம்பிஜயா ஸ்ரீஸ்கந்தராசா எழுதிய கட்டுரையாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.







இன்றைய கால கட்டத்தில் எமது தமிழ் சமுதாயத்திற்கு உள நலம் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது பற்றி நாம் ஆராய்வோமானால் காலம் காலமாக எமது மூதாதையரால் பேணி வளர்க்கப்பட்டு வந்த கலை, கலாசார, விழுமியங்கள், பாரம்பரியங்கள் இன்று ஆணி வேருடன் பிடுங்கி சின்னாபின்னமாகச் சிதறி அபாய நிலையில் காணப்படுகின்றது. இன்றைய எமது சந்ததி பல்வேறுபட்ட கலை, கலாசாரங்களிலும் மொழிகளிலும் கலப்புற்று காணப்படுகின்றது. ஏன் இன்று எமது தாய் தந்தையர் கூட தமது பேரப்பிள்ளைகளுடன் மனமாரப் பேசிப்பழகி தமது அன்பைக்கூட பகிரமுடியாத அவல நிலையில் உடல் மொழியியல் உறவைப் பேண வேண்டியுள்ளது. இதே போக்கில் இன்றும் இரு தசாப்தங்கள் கழியுமானால் நமது இனத்தின் கலை, கலாசாரங்கள் கேள்விக் குறியாகும் என்பதில் எள்ளளவும் ஐயம் தேவையில்லை.

இவற்றிற்கெல்லாம் அடிப்படைக்காரணமாக அமைவது கடந்த இரு தசாப்தங்களாக எம் நாட்டில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களும் இன, மத வன்முறைகளினால் ஏற்பட்ட பேரழிவுகளும் பெயர்வுகளும் மன உடைவுகளுமே என்பதை எவராலும் மறக்க முடியாது. அதனால் எம்மினம் மன நெருக்கீட்டு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. படிப்படியாக எமது இனத்தின் ஆளுமை உடைத்தெறியப்பட்டது. இவற்றின் விளைவாக சித்திரவதை, தற்கொலை, கொலை, சிறுவர் துஷ்பிரயோகம், வன்முறைகள், பெண்கள் மீதான வன்முறைகளும் பாலியல் துஷ்பிரயோகம், மது துஷ்பிரயோகம், குடும்ப அயலவர் வன்முறைகள்,பாரிய உள நோய்கள் போன்ற பரிதாபமான, அநாகரிகமான நிலைக்கு எம்மினம் முகம்கொடுக்க நேரிட்டுள்ளது. சாதாரணமாக இன்று எமது சமுதாயத்தில் அதிகரித்து செல்லும் பிரச்சினைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1.முதிர்கன்னிகளின் வீதம் அதிகரிப்பு (சீதனம், ஜாதக நம்பிக்கை)

2.விதவைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு (போர், தற்கொலை)

3.அநாதைப்பிள்ளைகளின் வீதம் அதிகரிப்பு (போர், பெற்றோர் பிரிவு)

4.வயோதிபர் இல்லங்களில் சேர்க்கும் வயோதிபர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு (பிள்ளைகள் வெளிநாடு, பிள்ளைகளின் இறப்பு...)

5.தாய் நாட்டையே விட்டு ஓடுவதற்கு ஆவலாக இருக்கும் உள்ளங்களின் வீதம் அதிகரிப்பு (போர், பயம், வறுமை, வெளிநாட்டு மோகம்)

6.உடல் ஊனமுறுவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு (போர்)

7.படிப்பை இழந்த தெருவோரச் சிறார்கள் அதிகரிப்பு (வறுமை)

8.வேலையற்றோர் வீதம் அதிகரிப்பு (பொருளாதாரம், அழிவு, படித்தோர்)

9.மதுவுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

10.தத்தெடுக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு (வறுமை)

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**1.நடைமுறைப் பிரச்சினைகள்:** உ+ம்: தொழில், கல்வி, வறுமை, சமயம், கலாசாரம், பொருளாதாரம், உணவு , நீர், சுகாதாரம், போக்குவரத்து, வதிவிடம், சமூகம் போன்றன.

**2.திறமையற்ற பிரச்சினைகள்:** உள்ளதைக் கொண்டு வாழ்க்கையில் திருப்தியுடன் வாழத்தெரியாமை, தொழில் தேட முடியாமை, பரீட்சையில் சித்தி பெற முடியாமை, இருக்கும் உறவுகளுடன் ஆரோக்கியமான உறவைப்பேணமுடியாமை, கிடைக்கும்வளங்களைக்கொண்டு திறமையான நிர்வாகம் நடத்த முடியாமை... போன்றனவும்

**3.நோய் அறிகுறிகளும்/ முறைப்பாடுகளும்**– உதாரணம்: தலையிடி,நெஞ்சுக்குத்து, வயிற்றுவலி, கை கால் உளைவு, படபடப்பு, வயிற்றோட்டம், இரத்தப்போக்கு, சிறுநீர் கட்டுப்பாடு இன்றி போதல் போன்றனவும்.

**4. அதிதீவிர உணர்ச்சிகள்**– உதாரணம்: கோபம்,பயம், விரக்தி,வெட்கம், குற்றவுணர்வு, தற்கொலை எண்ணம், தோல்வி, ஏக்கம், அதிர்ச்சி, இழப்பு, பிரிவு, தனி+

**5.உள்ளார்ந்த பிரச்சினைகள்**– உதாரணம்: வயோதிபர், அகதி,அநாதை,விதவை, மலடு, சாதி, ஏழை,படிக்காதவன், படித்தவன், பணக்காரன், உடல் நிறம், இயற்கையான அங்கக் குறைபாடுகள் போன்ற தாழ்வு மனப்பான்மைகளும் ஆகும். இப்பிரச்சினைகள் ஒரு மனிதனை மன நோயாளியாக்கும் நிலைக்கு அல்லது தற்கொலை எண்ணத்திற்கும் தள்ள வழிவகுக்கக் கூடியன. எனவே இப்பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே இனங்கண்டு நாங்கள் ஒவ்வொருவரும் எம்மால் இயன்றளவு மனிதாபிமானத்துடன் உதவ முன்வருவோமானால் இவற்றின் அதிகரிப்பைஓரளவேனும்குறைக்கலாம்.


உதாரணமாக:

**1. நடைமுறைப் பிரச்சினைகள்**– ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என நாம் இனங்கண்டால் அவரிடம் உள்ள வளங்கள் திறமைகள், சமூகத்தில் அவருக்கு உதவக்கூடிய வளங்களையும் அவர் பயன்படுத்த ஊக்குவிக்கலாம். ஒரு விடயத்திற்கு தீர்மானம் எடுக்க முன் அவற்றினால் ஏற்படக் கூடிய நன்மை/ தீமைகளை ஆராய உதவலாம்.

**2. திறமையற்ற பிரச்சினைகள்:** பாதிக்கப்பட்டவரின் கடந்த கால செயற்பாடுகளை பாராட்டலாம். உளவியல் கல்வி புகட்டலாம். அவரால்செய்யப்படக்கூடிய விடயங்களை, சாதனைகளை செய்ய ஊக்குவித்து பின் அதனைப் பாராட்டலாம்.

**3.நோய் அறிகுறிகளும்/ முறைப்பாடுகளும்:** பாதிக்கப்பட்டவர் சொல்வதை அவரின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு கொஞ்சம் நிதானமாக அக்கறையுடன் செவிமடுக்கலாம். ஆதரவு அளிக்கலாம். யோகாசனம், உடற்பயிற்சி, பிரார்த்தனை போன்றவற்றில் ஈடுபட உதவலாம்.

**4.அதிதீவிர உணர்வுகள்:** கடிதம் எழுதவிடல், வெற்றுக் கதிரை அல்லது தலையணி போன்றவற்றை எதிரியென நினைத்து பேச உதவல், ஏற்றுக்கொள்ள வைத்தல், ஓய்வு நிலைப் பயிற்சிகள், சுவாசப் பயிற்சிகள். உதாரணம் குற்றவுணர்வினால் வருந்துபவர்க்கு பின்வருமாறு உதவலாம்.





மேற்படி முறையை கையாள்வதால் ஒருவரின் குற்றவுணர்வை குறைக்கலாம், குறைக்க உதவலாம். எனவே அவரின் முடிவை அல்லது அவர் எடுத்த தீர்மானத்தை மாற்ற அல்லது ஒத்திப்போட உதவ முடியும். அதேபோல்

**5.உள்ளார்ந்த பிரச்சினைகளால்**– ஒருவர் பாதிக்கப்பட்டால் இவர்களுக்கும் இவர்களின் பிரச்சினையை ஏற்றுக்கொள்ள வைக்கவேண்டும். அல்லது வருந்த உதவவேண்டும். அத் தோடு தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சுயமதிப்பு,ஆளுமை போன்றவற்றை அதிகரிக்க உதவலாம்.

**நாம் ஏன் இவர்களுக்கு உதவ வேண்டும்?**

எந்தவொரு உயிரினமும் தனித்து வாழ இயலாது என்பது உண்மை. எனவே நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு




விதத்தில் சமூகத்துடன் இணைந்து தான் வாழுகின்றோம். எமது சமூகத்தில் பலதரப்பட்டவர்களும் உள்ளடங்குகின்றனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் இயன்றளவு சம திருப்தியுடனும் மகிழ்வுடனும் வாழ்வதே ஆரோக்கியமான சிந்தனை. எமது சமூகத்தில் எவராவது ஒருவர் உள, உடல், நடத்தை, உறவு முறைகளில் பாதிக்கப்பட்டிருந்தால் அதனால் அவரின் பெற்றோர் சகோதரர் கள், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மத குருமார்கள், அயலவர் போன்றோரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர்.

ஆனால் இவர்கள் தான் எமது சமூகம். இவர்கள் தான் எமது வளங்களும்கூட. ஏனைய சக லரும் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு பகிர்ந்து நட்புடன் உதவினால் எமது சமுதா யத்தில் காணப்படுகின்ற மேற் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு எந்தவொரு உள்நாட்டு வெளிநாட்டு தொண்டர் களின் அனு தாபங்களையும் எதிர்பாராமல் நாமே எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம்.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன். தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.


**அனுப்பவேண்டிய ம்கவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

# வடக்கில் மையங்கொள்ளும் மென்புயல்..! மயங்குமா ஈழம்!

மகிந்த ராஜ பக்ச ஆட்சியிழந்த காலம், தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளை தமிழரகள் தங்கள் விருப்பு வாக்குகள் மூலம தகர்த்தெறிந்த காலம், தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ச மீதுகொண்ட கோபத் தீயை ஒற்றை விரல் நுனிகொண்டு மாற றிய காலம், இலங்கையில் சீனா செல்வாக்கு இழந்த காலம்...



இது மகிந்த ராஜபக்சவின் அதிரடி ஆட்சியின் யுகம் அல்ல. ரணில் - மைத்திரியின் இராஜதந்திர ஆட்சி. தமிழர்களின் எதிர்கால அரசியலை, தமிழ் அரசியல்வாதிகளின் எதிர்கால இருப்பை கேள்விக்குள்ளாக்கப் போகும் ஆட்சி என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இலங்கையில் தமிழர்களின் இருண்ட காலம் என்று வர்ணிகக்கூடிய இலங்கையின் முனனாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு எதிர்வரும் தை மாதம் 8ம் திகதியோடு ஓராண்டை பூர்த்தி செய்யும் நாள் நெருங்குகின்றது. அதாவது இதை பின்வரும நிலைகளில் விளக்கலாம்.

ஒன்று மகிந்த ராஜபக்ச ஆட்சியிழந்த காலம், தமிழரகள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளை தமிழரகள் தங்கள் விருப்பு வாக்குகள் மூலம் தகர்த்தெறிந்த காலம், தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ச மீது கொண்ட கோபத் தீயை ஒற்றை விரல் நுனி கொண்டு மாற்றிய காலம், இலங்கையில் சீனா செல்வாக்கு இழந்த காலம்,

மைத்திரிபால சிறிசேன ஆட்சி ஏற்ற காலம், ரணில் மீண்டும் இராஜதந்திர நகர்விற்குள் உள்நுழைந்த காலம், இதற்கு மேல் அமெரிக்க, இந்திய அரசுகளின் விருப்பு அல்லது கைப்பொம்மை அரசு ஒன்று இலங்கையில் ஆட்சிப் பீடம் ஏறிய காலம், மகிந்த தரப்பிற்கு தலையிடியாய் மாறிய காலம் என்று இன்னோரன்னமாக வகைப்படுத்தலாம்.

ஆனால், இந்த மாற்றங்கள், மாறுதல்கள் தமிழ் மக்களுக்கு ஏதேனும் அரசியல் ரீதியில் நன்மை பயக்கவில்லை என்பதை இப்பொழுது பல தரப்பினரும் சுட்டிக்காட்ட விளைகின்றனர் என்பது ஒரு புறமிருக்க, தமிழ் மக்களின் அரசியல் இருப்பிற்கும், தமிழ் இனத்தின் அடையாளங்களும் இழக்கச் செய்யப்படுமோ எனும அச்சம் மேலோங்குகின்றது.

தமிழர்களின் பூர்வீக தாயக நிலம் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விடுதலைப்புலிளை கிழக்கில் இருந்து இராணுவ நடவடிக்கை மூலமாக வெளியேற்றிய அரசாங்கம் அங்கு தனக்கு விசுவாசமான கிழக்கு மாகாண அரசொன்றை தோற்றிவித்தது.

அதற்கு முன்னரே கிழக்கு மாகாணம் எங்கும் சிங்களக் குடியேற்றங்கள் நாளுக்கு நாள் பல்கிப்பெருகிக் கொண்டிருந்தது.

ஆனாலும், கிழக்கில் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் கிழக்கு மாகாணம் இலங்கை அரசாங்கத்தின் சிங்கள மயமாக்கல் திட்டத்தில் மேலும் வலுவடைந்தது. அங்கு இப்பொழுது சிறுபான்மை மக்களின் குறை தீர்க்கும் அரசு இல்லை.

அதனால் கிழக்கு நோக்கிய பார்வை தற்பொழுது உள்ள அரசாங்கத்திற்கு அவசியம் இல்லை. அது பற்றி இன்றைய மைத்திரி- ரணில் அரசு கவலை கொள்ளவும் இல்லை.

ஆனால், அமெரிக்காவின் திட்டத்தின் கீழ் எழுச்சி பெற்ற மைத்திரி அரசின் கவலை ஒன்று மட்டுமே. அது வட மாகாணத்தை எவ்வாறேனும் சமாதானப்படுத்த வேண்டும், அல்லது வட மாகாண மக்களின் மனங்கள்ள வெல்ல வேண்டும் என்பதாகும். இதில் மைத்திரியின் பார்வை சரியானதாக அமைகின்றது போலவே தோன்றுகின்றது.

காலாகாலமாக இலங்கையை ஆண்ட சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கை ஒரு எதிரி நாடாகவே பார்த்தனர். அவர்கள் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல தவறினர். அடக்கினால் வெற்றி பெறலாம் என்று நினைத்தனர்.

அது ஜே.ஆர் ஆக இருக்கட்டும், சந்திரிக்கா அம்மையாராக இருக்கட்டும், மகிந்த ராஜபக்சவாக இருக்கட்டும் ஆட்சிப் பீடம் ஏறிய அத்தனை பேருமே வடக்கை அடக்குமுறைக்குள்ளேயே வைத்திருந்தனர்.

ஆனால் அமெரிக்காவின் மைத்திரி அந்தக் கணக்கில் இருந்து, அந்தப் பாதையில் இருந்து விலகி நடக்கின்றார். அவர் ரணில் விக்ரமசிங்கவின் மூளையின் உபாயத்தில் இருந்து செயற்படுகின்றார். ஏனெனில் மகிந்த ராஜபக்சவின் போர் வெற்றிக்கு வித்திவிட்டவர் ரணில் விக்ரமசிங்க என்பது தெரிந்த ஒன்று.

அப்படிப்பட்ட ரணிலின்மென்மையான நகர்வு எப்படி இருக்கும் என்பது பற்றி சிந்தித்தாக வேண்டும். வடக்கு மக்களின் மனங்களை வென்று, அவர்களிடம் நற்பெயர் பெற்றாலே எதிர்கால சிங்கள இராணுவ வீரர்களின் தூக்குக் கயிறுகளை கீழ் இறக்க முடியும் என்பது அமெரிக்காவின் கணக்கு. இதுதப்புக்கணக்கு அல்ல சரியான இலக்கு.

போர்க்குற்றம் பற்றிப் பேசிய அமெரிக்கா இப்பொழுது அது பற்றி வாய் திறக்காமல் அமைதி அடைந்துவிட்டது. இந்நிலையில், தமிழ் மக்களையும் அமைதியடைச் செய்ய வேண்டுமாயின் நாட்டின் தலைவர் நல்லவர் எனும் நிலையினை தமிழ் மக்களின் மனங்களில் விதைத்தாக வேண்டிய கட்டாய சூழல் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து கொடுக்கப்படும் அழுத்தங்கள், எதிர்ப்புக்களை காட்டிலும், வட மாகாணத்தில் இருந்து எழும் எதிர்ப்பே அதிகம். வடக்கு மாகாணத்திற்கு அஞ்சி ஆட்சி செலுத்தியவர்கள் தான் இதுவரை காலம் அரச கட்டிலில் ஏறியவர்கள்.

அந்நிலை மாற்றப்பட வேண்டும். அது நிகழ்ந்தால் அமெரிக்கா தான் நினைத்ததை செய்யும், இந்தியாவின் கனவு பலிக்கும்.

அந்த நகர்வுகள் மெல்ல மெல்ல நடந்து கொண்டு தான் இருக்கின்றன. மகிந்தவை வீழ்த்தியவுடன் வடக்குத் தமிழர்கள் கொஞ்சம் விட்டுக்கொடுப்பார்கள், புதிய அரசோடு நெருங்கி வருவார்கள் என்று அமெரிக்கா நினைத்திருக்க, அதற்கு பெரும் தடையாக, தலையிடியாக எதிர்பாராமல் வடக்க முதல்வர் விக்கினேஸ்வரன் மாறினார். ரணிலுக்கும் அவருக்கும் இடையில் பனிப் போர் மூண்டது.

ரணிலின் நரித்தந்திரத்தை புரிந்து கொண்டதாலோ எனனமோ முதல்வர் விக்கினேஸ்வரன் விட்டுக்கொடுப்பு அரசியலுக்குத் தயார் இல்லாமல் இறுமாப்போடு செயற்பட்டார். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையும், அதன் ஒரு சில உறுப்பினர்களும் ரணில் மைத்திரி அரசோடு நெருங்கிப் பழகினர்.

இது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடையத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. யாரை நம்புவது. விட்டுக் கொடுக்காமல் விடுதலைப் புலிகளைப் போல கொள்கையில் விடாப்பிடியாக நிற்கும் வடக்கு முதல்வரையா? அல்லது மென்மையான போக்கை கடைப் பிடித்து அரசியல் தீர்வைப் பெறலாம் எனக் கூறும் கூட்டமைபபின் தலைமையையா?

தமிழ் மக்கள் மட்டுமல்ல, அரசியல் அவதானிகளும் இந்த விடையத்தில் குழம்பித் தான் போயிருந்தனர்.

ஆனால் தமிழ் மக்கள் வடக்கு முதல்வரின் பின்னாள் நிற்பதை பலமுறை உணர்ந்த அரசாங்கம் நேரடியாக களத்தில் இறங்கியது. ஜனாதிபதியே வடக்கிற்குள் புகுந்தார். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாட்களில் இருந்து இன்றுவரை எடுத்து நோக்கினால் அவர் பெரும்பாலான சந்தரப்பங்களில் வட மாகாணத்திற்கான விஜயமே அதிகமாக இருக்கும்.

மைத்திரிபால சிறிசேன மென்மையானவர், எளிமையானவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரின் நகர்வுகள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடையத்தில் போர்க்குற்றச் சாட்டுக்கள் சுமந்தப்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் மகிந்த ராஜபக்சவை காப்பாற்றும் விடையத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும்.

இன்னொன்றையும் இவ்விடத்தில் தெளிவாக கூறலாம். மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்சவை காப்பாற்றுவார். அவர் தமிழ் மக்களிடம் நல்ல பெயரைக் பெற்றுக்கொண்டு இன்னொரு புறத்தில் சிங்கள மக்களின் நன்மைக்காக பாடுபடுவார்.

இதுவரை காலமும் நிகழ்ந்தவற்றை மறந்து ஒற்றுமையாக வாழ வாருங்கள் என்று இன்னும் சிறிது காலத்தில் அழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

வடக்கு மக்களின் மனங்களை வென்றால் வடக்கு முதல்வரின் விடாப்பிடியான அரசியல் வீணாகும். மென்மைப் போக்கைக் கொண்டவர்களின் அரசியல் சித்தாந்தம் வெற்றி பெறும், அமெரிக்க இந்திய அரசுகளின் கூட்டு முயற்சி இலக்கை அடையும், இராணுவமும், மகிந்தரும் கோத்தாவும் நிம்மதிப் பெருமூச்சு விடுவர்.

இதுவரை காலமும் தமிழ் இளைஞர், யுவதிகள் சிந்திய குருதி மண்ணுக்குள் காய்ந்து காலம் மறந்து போகும்.

வடக்கு மீது மையம் கொள்ளும் மைத்திரிபால சிறிசேன கூறும் கருத்துக்கள் உண்மையில் வரவேற்கப்படத் தான் வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால அவர் அவற்றை எல்லாம் எந்த நோக்கத்திற்காக செய்கின்றார் என்பதில் தான் தங்கியுள்ளது தமிழர்களின் தீர்மானம்.

ஏனெனில் ஜனாதிபதி மைததிரிபால சிறிசேன ஆட்சி ஏற்ற ஓராண்டு காலப்பகுதியில் அவர் தமிழ்த் தலைமை களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் எவற்றையெல்லாம் நிறைவேற்றினார் என யோசித்தால் விடை கிடைக்கும்.



இனி மைத்திரி வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரனை வெல்வாரா? வடக்கில் அவரின் மையம் வெற்றி பெறுமா என்பது தமிழ் மக்களின் கைகளில் தான் உள்ளது. இதுவரை காலமும் சோராம் போகாமல் இருந்த தமிழ் மக்கள் மயக்கம் கொள்ளாமல் இருப்பார்கள் என்று நம்புவோம். மயங்கினால் தமிழர்களின் இருப்பு அந்தோ நிலை தான்.

*எஸ்.பி. தாஸ்*

# ஒரு புல்லாங்குழல் ஊமையானது...!

சிறுகதை



**வெளியே மழை...!**

மழைக்கும் துயருக்கும் என்னதான் சம்பந்தம்..? வெயில் மனதின் வெம்மையை உணர்த்துகிறதோ...? தெரியவில்லை. மழையின் சூழலோடு மனதின் துயரம் இணங்கிப் போகிறதே...!

இங்கு வந்தபிறகு, என்னிடம் என்னதான் இருக்கிறது...?

அவளின் உள்ளக்கிடக்கைகள் சாம்பல் பூத்த நெருப்பாய் கனன்றுகொண்டே இருந்தது... மாதங்கள் பலவாகியும் கண்ணீரால் அக நெருப்பை அணைக்க முடியவில்லை.

அவள்தான் சிறகிழந்த பறவையாகிவிட்டாளே.

அவளது அர்ப்பணிப்புக்கு அர்த்தம் இருக்கிறதா இல்லையா? அவளுக்கே தெரியாத வினா அது. சாப்பிடுவதற்கோ, வெளியுலகத்தோடுதொடர்புகொள்வதற்கோ, அவனின் தயவு கிடைக்கவேண்டும் அவளுக்கு. தொலைக்காட்சிப் பெட்டியும் இல்லையென்றால் இதுவரைக்கும் அவள் முழுப்பைத்தியமாகியிருப்பாள் .

அறைக்கு வெளியே எட்டிப்பார்க்கவே பயந்த நிலையில்.. புதுமையான சிறைவாழ்வு. அதுதான் அவளுக்குக்கிடைத்த வரம் போலும்.

அவன் மனமிரங்கி ஏதாவது உதவினால் ஒளிய அவளாக எதுவும் செய்துகொள்ள முடியாத கூண்டுக்குள் அல்லவா அவள் அகப்பட்டுக்கொண்டாள்...

ஆம்! அவளின் பெற்றோரின் அறியாமையும்பேராசையும்சேர்ந்து அவளை இந்த சிறைக்குள் தள்ளிவிட்டன...

சிவலிங்கத்துக்கும் பார்வதிக்கும் ஒரு மகள்,ஒரு மகன். மகள் காந்தி, சரியான சுட்டிவாய்க்காரி. இவளுக்கு அண்ணன்தான் திலீப்.

“அண்ணா வடிவாய் ஊஞ்சல் ஆட்டிவிடடா...” இது செல்லத் தங்கையின் கெஞ்சல்.

“நீயொரு பாட்டுப்பாடு அப்பதான் ஆட்டிவிடுவன்...” இது அன்பு அண்ணனின் கெஞ்சல்...

“இல்லைநீஆட்டிவிட்டால்தான், நான் பாடுவன். ஆசையண்ணா..! ஆட்டிவிடடா..” இது தங்கயின் பிடிவாதம் இப்படித்தான் ஆனந்தமாய்க் கழிந்தது அவளது சிறு பராயம்.

அந்தநாள் நினைவுகள்புல்லாங்குழல் நாதமாய் எதிரொலித்தன.

ஊஞ்சலில் இருந்தவாறே முற்றத்தில் காயப்போட்டுக்கிடக்கும் புளுக்கொடியலையும், ஊறுகாயையும் கோழிகள் தட்டிவிடாமல் பார்த்தபடியே ஏழாம் வாய்பாடு பாடமாக்கிய நினைவுகளும்...

இன்னுமின்னும்..எத்தனையோ... மறக்கமுடியாத துயரச் சம்பவங்கள்..

கூ................டும்ம்..

கூ................டும்ம்..

............................

ஐயோ! அம்மா....! எங்கிருந்தோ வந்தது. என்னகாரணத்தால் ஏவப்பட்டது? எதுவுமே தெரியவில்லை.. செல் ஒன்று அவளின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்தது.

அப்பப்போ ஆங்காங்கே இராணுவ முகாங்களுக்கருகே ஏதாவது முட்டிமோதல்கள் (இராணுவமும் விடுதலைப்போராளிகளும் நேருக்கு நேராக சந்தித்துக்கொண்ட சந்தர்ப்பங்கள்) நடந்துவிட்டு பின் அவை ஓய்ந்துவிடுகிற காலப்பகுதி அது.

ஐயோ...! அம்மா...! அந்தக்கதறல் வேறுயாருமுடையதல்ல. திலீப் தான்... அவளின் ஆசையண்ணன் தான்...கரும்புகை மண்டலத்திற்குள் பிணமாகிக் கிடந்தான்.

இப்பொழுதும் அவள் கண்களில் நீர் பொங்குகிறது... “அண்ணா...! நீ இருந்திருந்தால் இந்த நிலை எனக்கு ஏற்பட்டிருக்குமா..

இல்லை... உன்னோடு கூட அன்றைக்கு நானும் மண்ணுக்குள்ள போயிருந்தால் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா...

அயல்நாட்டில் சிறைப்பறவையாகி.. உயிர் கருகித் துடித்துக் கொண்டிருக்கிறேனே... அண்ணா... நீ எங்கே இருக்கிறாய்..?என்னைவந்துபாரண்ணா...வா ... அண்ணா....!”

அவள் கண்ணீருக்குத்தான் முடிவேது?

அவள் நம்பிவந்த அந்த மனிதன், மனிதத்தை இழந்துவிட்டவன் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லையே.

“இறைவா! ஏன் எனக்கு இந்தக் கொடுமை?”

நாற்கலிகூட அவளை தாங்கிவைத்திருக்க பொறுமையற்று சலனப்பட்டது. வானத்து மின்மினிகள் கூட அவளது துன்பத்தைதாங்கமுடியாது ஓடிமறைந்தனபோலும்.

ஜேர்மனி நேரம் நள்ளிரவு 12.30ஐ தெளிவாக காட்டியது. ஆனாலும்... அவன் இன்னும் வந்திருக்கவில்லை.

அவன் வந்தால்தான் அவள் தன் வீட்டுக்காரருடன் தொடர்புகொள்ள முடியும். அன்றேல் தொலைபேசி அழைப்பைப் பெறமுடியாது. அது தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கும். அவன் முன்னிலையில்தான் அவள் பெற்றோருடன் தொடர்புகொள்ள முடியும்.

உண்மைதான்அவள் இப்பொழுது.. ஒரு வேலைக்காரிதான். சமைத்தல், உடுப்புக்கழுவதல், அறைகளைத் துப்பரவுசெய்தல் இதுதான் அவளது பணிகள். இதற்கான சிறு ஊதியம் போல் ஒரு கொஞ்சப்பணம் அவளது வீட்டிற்கு, இடையிடையே அனுப்பிவைக்கப்படும்...

மீண்டும் பழைய நினைவுகளில் மூழ்கிப்போகிறாள்.

சிவலிங்கத்திற்கு வயதும் அறுபதாகிவிட்டது. உழைப்புப் பிழைப்பும் அப்படி இப்படித்தான்.

“இஞ்சரப்பாபார்வதி, இவள்பிள்ளையெங்கைய்ப்பா..?” என்று கேட்டபடியே தோளில் கிடந்த துண்டால் சாய்மனைக் கதிரையின்தூசியைத்தட்டிவிட்டுஅதன் மீது அமர்ந்துகொண்டார்.

“கொம்பியூட்டர் கிளாசக்குப் போட்டாள்.”

“ம்..ம்..! இன்னும் எத்தினை நாளைக்கு?”

“ஏனப்பா..?ஏன்..?”

பரபரப்புடனே வினவினாள்பார்வதி.

எங்கட புறோக்கர் பொன்னுத்துரையர் ஒருவரன்கொண்டுவந்தவர்... வெளிநாட்டு மாப்பிளை. அதுதான் அப்பா போட்டோசாதகம் இதுகள்தந்தவர்...”

கணவனின் வார்த்தைகளைக் கேட்டுஅதிர்ந்துபோனாள் பார்வதி.

“ஏனப்பா..?ஆருக்குஇப்ப.??”

“இவள்பொடிச்சிக்குத்தான்...”

“என்னப்பாஉங்கடகதை.”

“இல்லையப்பா எனக்கும் வயசு போகுது... உழைச்சுப் பாக்கிறதுக்கு என்ரை ஆம்பிளைப் பிள்ளையும் இல்லை.”

செருமியபடி மீண்டும் சாய்மனையில்சரிந்துகொண்டார்.

“அது சரிதானப்பா.. அவளட படிப்பு...?” தடுமாறியபடியே கேட்டாள் பார்வதி.

“படிச்சது காணும். கையெழுத்து போடுவாள்தானே... பிறகென்ன..”

க.பொ.த சாதாரணப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காய் காத்திருந்த காந்திக்கு வீட்டில் கல்யாணப் பேச்சுக்கள்... இவளுக்கு இப்பொழுது தேவைதானா ஒருகல்யாணம்...?

“அப்பா!நான்படிக்கவேணும்.தயவு செய்துபடிக்கவிடுங்கோ...”

“பிள்ளைவீடுதேடிவந்தசீதேவியை காலால உதையிற கதையெல்லோ உன்ரைகதை. பெடியன்நல்லவடிவாம். குடிவெறியில்லையாம். அங்க போனா நீ ராசாத்திதான். கதையை விட்டிட்டு போற அலுவலைப்பார்.”

“அப்பா, எனக்கு கலியாணம் வேண்டாம்... வேண்டாம்... நான் வெளிநாடுபோகேல்ல.”

ஆனாலும்பயனேதுமில்லை. எழுதின எழுத்து எப்படி மாறும்?

தனது கருத்துக்கள் இனியும் எடுபட்போவதில்லையென்பதைஉணர்ந்து கொண்டாள் காந்தி. தனது கற்பனைகளெல்லாம் கலைந்துபோவதை அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. எதுவும் பேசவும் முடியவில்லை... கண்ணீர்த்துளிகள் பூமழையாய் சொரியத் தொடங்கின.

தந்தை எல்லா ஏற்பாட்டையும் செய்து முடித்தார்.

ஜேர்மனியிலிருந்து வந்து, மீண்டும்அங்கு செல்லவிருந்தஒரு தெரிந்தவருடன் கதைத்து, மகளை அவருடன் அனுப்பிவைத்தார்.

அவளை அழைததுச் செல்வதற்கு யார்வருவாரோஅவரின்புகைப்படத்தை மட்டும்அவள்வைத்திருந்தாள்.

விமானநிலையங்களின்சஞ்சாரம் அவளுக்கு புதுமையாகவே இருந்தது. ஏதோ புதுக் கிரகத்தில் நிற்பது போன்ற உணர்வைக் கொடுத்தன. அவள் ஜேர்மனியை அடைந்த பொழுது அங்கு... ஒருவர், ஹலோ காந்தி..! என்று அவள் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

“யார் நீங்கள்?” என்றாள் அவள்.

“என்னைத் தெரியவில்லையா..? நான்தான் உங்களைக் கட்டிக்கொள்ளப்போகிறவர்... சுரேஸ்...

“ஓ...*சாரி...!*புகைப் படத்தில் பார்த்ததிற்கும் ...நேரில் சற்று வித்தியாசமாக இருக்கிறீர்கள்.. அதுதான் உடனே அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. *ஐ ஆம் சோ சாரி...!*”

“*நோ..நோ.. புறொப்லெம்.*”

பார்ப்பதற்கு சுமாராகத்தான் இருந்தான் சுரேஸ். அவள் புகைப்படத்தில் பார்த்ததிலும் –நேரில் அவன் வயது கூடிய தோற்றத்தில் இருந்தான்.

அவன் மிகவும் அன்பாக நடப்பது போல் இருந்தது அவளுக்கு... அது நடிப்பா உண்மையா என்ற சந்தேகம் ஏனோ அவள் மனதில் எழுந்தது...

ஆனால், அந்த சந்தேகத்தை அவள் மன ஆழத்தில் புதைத்துவிட்டாள். இது எதிர்கால வாழ்க்கைக்கு நல்லதல்ல என்ற எண்ணம் அவளுக்கு.

அவளை அழைத்துவந்தவர் விடைபெற்றுச்சென்றுவிட்டார்.

சுரேஸ் அவளைக் காரில் அழைத்தான். அவளும் காரில் ஏறிக்கொண்டாள். அவனின் பெற்றோர் அவனுடன் இல்லை. அவர்கள் பிரான்சில் இருக்கிறார்கள், அவர்கள் திருமணத்தை நடத்திவைப்பார்கள் என்பதுதான் புறோக்கரின் உறுதிமொழி.

அந்த புதுமையான நாட்டுக்கு வந்து–அங்கு தங்குதற்கான அனுமதியைப்பெற்று, பலமாதங்களாகிவிட்டன. ஒரேயொருமுறைதான் சுகமாக வந்து சேர்ந்துவிட்டேன் என்பதைத் தெரியப்படுத்தி தனது பெற்றோருடன் கதைத்திருக்கிறாள்...அதன்பிறகுதொலைபேசி வேலைசெய்யவில்லை. அவள், இருக்கும் அறையைவிட்டு எங்கும் சென்றதில்லை. அவன் அழைத்துச் சென்றதுமில்லை.

பூட்டிய கதவின் உள்ளே நான்கு சுவர்களுக்குநடுவில்சிறைவாசம்தான். கல்யாணத்தைப் பற்றி பேச்செடுத்தால் சாக்குப்போக்கு...நாளடைவில் அன்பான பேச்சுவார்த்தைகள் அருகிப் போனது.

அவன் வேலைக்குப் போவதும் திரும்புவதும் மட்டும் உண்மையாக இருந்தது.

அவளின் தந்தை சொன்னது போலல்லாமல் –அவன், குடிப்பதும் வெறிப்பதும் அதிகமாயிருந்தது...

ஊர் அறியத் திருமணம் செய்து வைக்கப்படவுமில்லை.அவளைஅவன் மனைவிபோல்நடத்தவுமில்லை...

உண்மையில் அவள், அவனது வேலைக்காரிபோலானாள்...

ஒருநாள் அவன் மிகவும் மது வெறியில் தூங்கிக்கொண்டிருந்தவேளை.., அவனது கைபேசியில் படங்களைப் பார்த்தபோது, அவனுக்கும்ஒரு ஜேர்மன் நாட்டுப் பெண்ணுக்கும் தொடர்பு இருந்ததைப் புரிந்துகொண்டாள்..

என்னசெய்ய முடியும் அந்த இள மங்கையால். அவனின் நேர்மையீனத்தை எண்ணி அழுதுதீர்த்தாள். அந்த விடயம் தெரிந்ததுபோல் காட்டிக் கொள்ளவும் இல்லை அவள்.

அவள்மின் அழுத்தியால் அழுத்திவைத்த உடையை அணிந்து, அவள் ஆக்கிவைத்த உணவை உண்டுவிட்டு அவன் வெளியில் புறப்படத் தயாரானான்...

வெளியில் வீதியில் கார் ஒன்றின் பீம்...ஒலி கேட்டது. அவன் வெளியேறிக்கொண்டு அறைக்கதவை தாளிட்டான்.

அவள் யன்னல் இடுக்கின் ஊடே நோக்குகிறாள்... அதே பெண்... அவனுடன் புகைப்படங்களில் கூடவே இருந்த அதேபெண்... அவனது தோளில் கைபோட்டு அழைத்துச் செல்கிறாள்...

இன்று வீடுதிரும்புகையில் அவனிடம் வெளிப்படையாகக் கேட்டுவிடுவது.. என்று தீர்மானித்தாள்...

அப்படியே கேட்டும் விட்டாள்.. அவள்யார்உங்களுக்கு.

“அவள்தான் எனது உண்மையான மனைவி. நாங்கள் இன்னும் முறைப்படி திருமணம் செய்து கொள்ளவில்லை.

உன்னைஎன்பெற்றோரின்விருப்பத்துக்காகவே இங்கு அழைத்தேன். ஏனென்றால் நான், ஒரு வெள்ளைக்காரப்பெண்ணை திருமணம் செய்து கொள்வதை அவர்கள் விரும்பவில்லை.

என்பெற்றோர் இங்கு வந்து உனக்கும்எனக்கும்பதிவுத்திருமணம் செய்து வைப்பார்கள். அந்தப் புகைப்படங்கள்உன்வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படும். அவ்வளவுதான்... இதுவிடயமாக என்பெற்றோரிடமோ.. அன்றி வேறுயாரிடமோநீதெரிவிப்பாயானால் என் உயிரை மாய்த்துக் கொள்ளவும் தயங்கமாட்டேன்.. புரிகிறதா..? அத்தோடு பின்னைய நாளில் நீ விவாகரத்துப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்...நீ இதற்குச் சம்மதிக்கவில்லையெனில் என் பெற்றோர்கள் என் பிணத்தைத்தான் பார்க்கவேண்டியிருக்கும்...” மீண்டும் அழுத்திக் கூறினான் அவன்.

கதிகலங்கிப்போனாள் காந்தி. மூச்சடைத்து மயக்கம் வருவதுபோல் இருந்தது அவளுக்கு. இருக்கையில் அமர்ந்துகொண்டாள்...

தன்னைக் காப்பாற்றுவதா...? அவனைக்காப்பாற்றுவதா...?

அவளுக்குஎதுவுமேபுரியவில்லை இது வாழ்வின் தொடக்கமா? முடிவா? அவள் முடிவுசெய்யமுன் எல்லாம் நடந்துமுடிந்துவிட்டது.

உயிர் கருகி, ஊமையாகிவிட்ட அவளின் விழிநீர் சொல்லும் கதை, யாரை எட்டும்? யாரால் புரிந்து கொள்ள முடியும்?

கதை மூலம்
மல்லாவிக்கஜன்

# தெற்கின் இராஜதந்திரம்!

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கர் இலங்கையின் பிரதமராக நான்காவது தடவையாக பதவியேற்று எதிர்வரும் சனவரி 8ம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியடைகிறது. டிசம்பர் 2001ல் அவர் மூன்றாவது தடவையாக பதவியேற்றபின், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் மிக நுட்பமான முறைகளில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். சர்வதேச பாதுகாப்பு வலை திட்டத்தின் ஊடாக புலிகளை உலகளாவிய ரீதியில் பலவீனப்படுத்திய ரணில், கருணா என அழைக்கப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் தனது வலையில் சிக்கவைத்ததனூடாக புலிகளை உள்நாட்டில் பலவீனப்படுத்தினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா நீக்கப்பட்டு சரியாக ஒரு மாதத்தில் ரணில் தனது பிரதமர் பதவியை இழந்தார். அதன் பிற்பாடு, கட்சி சந்தித்த பின்னடைவுகளை அடுத்து, ரணிலின் தலைமைத்துவத்துக்கு எதிராக கட்சிக்குள் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆயினும், ரணில் தலைமைப் பதவியிலிருந்து விலகவில்லை. பல தோல்விகள், படுதோல்விகள் மற்றும் நீண்டகால காத்திருப்புகளிற்குப் பிறகு, சுமார் பதினொரு வருடம் கழித்து, கடந்த சனவரி 9ம் திகதி சிறிலங்காவின் பிரதமராக நான்காவது தடவையாக பதவியேற்றார்.

ராஜபக்சாக்களைப் போல ஆரவாரத்துடனோ அல்லது தெருச்சண்டியர்கள் போன்றோ ரணில் செயற்படுவதில்லை. மாறாக, அமைதியாக ஆனால், தூரநோக்குடனும் புத்திசாதுரியமாகவும் செயற்படும் பண்பைக் கொண்டவர். ஒருதுளி இரத்தமும் சிந்தாமல் கருணாவை தனது பொறிக்குள் வீழ்த்தி போராட்டத்தை சிதைத்தமை இதற்கு ஒரு உள்நாட்டு உதாரணம்.

ரணில் ஏப்ரல் 2004ல் பதவியை இழந்த போது அவரது மற்றுமொரு இரகசிய நகர்வு முற்றுப்பெற்றிருக்கவில்லை. புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் ஈழத்தமிழர்களையும் அவர்களது கட்டமைப்புகளையும் பலவீனப்படுத்துவதே ரணிலின் முற்றுப்பெறாத அந்த திட்டமாக இருந்தது. அந்த திட்டத்தை முழுமையடையச் செய்வதற்கு ரணில் இந்த ஆட்சிக்காலத்தை நுட்பமாகக் கையாளுகிறார். ரணிலின் தொலைநோக்குப் பார்வையென்பது, தனது பதவி, தனது கட்சி என்பதை கடந்து சிங்கள தேசத்தின் நலன்களை பேணிப்பாதுகாத்தலே ஆகும். இதை அவர், வெளிப்படையாக பேசுவதில்லை. ஆனால், செயற்பாட்டில் எல்லோரையும்விட திறம்பட செயலாற்றும் வல்லமை கொண்டவர்.

இலங்கைத் தீவில் பேரினத்தை மேலாண்மையுடையதாக நிலைநிறுத்த வேண்டும் என்றால், தமிழ்த் தேசிய சித்தாந்தத்தையும், தமிழர்களின் தனித்துவ அடையாளங்களையும் சிதைக்க வேண்டும். தமிழர்களின் இறையாண்மையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் அழிக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றால் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த வேண்டும் அல்லது அழிக்க வேண்டும் என்பது திரிபுபடுத்தப்பட்ட மகாவம்ச மனப்பாங்கு. பலர் அதனை பேசினாலும் சிலரே அதனைச் செய்துள்ளனர், செய்துவருகின்றனர். அதில் ரணில் முதன்மையானவர். ஆனால், ராஜபக்சாக்களை போன்று தன்னை இனவாதியாகவோ தேசியவாதியாகவோ காட்டிக் கொள்வதில்லை.

லிபரல் முகத்துடனேயே முற்றுப்பெறாத தனது திட்டத்துக்கு முடிவுரை எழுத ரணில் மீண்டும் திடங்கொண்டு செயற்பட்டு வருகிறார். அதன் அங்கமாகவே, புலம்பெயர் அரசியற் செயற்பாட்டாளர்களையும் கட்டமைப்புகளையும் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை தான் பதவியேற்ற காலம் தொடங்கி மீண்டும் அமுல்படுத்தி வருகிறார்.

2003 ஒக்டோபர் 5ம் திகதி மலேசியாவின் சுபங் என்ற இடத்திலுள்ள செறெற்றன் விடுதியில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக மலேசியாவில் பல்வேறு அமைப்புகள் முனைப்புடன் செயற்பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியிலேயே இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. 'தமிழ் டயஸ்பொறா' (Tamil Diaspora) என்ற அடையாளத்தோடு மிளிரும் ஈழத்தமிழர்களை 'சிறிலங்கன் டயஸ்பொறா' (Sri Lankan Diaspora) என்ற அடையாளத்துக்கு மாற்றுவதே இந்த கூட்டத்தின் இரகசிய நோக்கமாக இருந்தது. அதற்கமைவாக, மலேசியாவில் செயற்பட்ட பல தமிழ் அமைப்புகளுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. பலர் அதைப் புறக்கணித்தார்கள். சில அமைப்புகள் பங்குபற்றியிருந்தன. இறுதியில், பங்குபற்றிய அமைப்புகளை ஒன்றிணைத்து மலேசியன் - சிறிலங்கன் அமைப்புகளின் சம்மேளனம் உருவாக்கப்பட்டது. ஆயினும், புலிகள் பலமாக இருந்த காரணத்தால் தமிழ் டயஸ்பொறாவை பலவீனப்படுத்தும் ரணிலின் முயற்சி அன்று வெற்றிபெறவில்லை. ரணிலை தொடந்து வந்த ராஜபக்சாக்கள் தமக்கு தலையிடி கொடுத்து வந்த புலம்பெயர் தமிழர்களையும் அவர்களின் கட்டமைப்புகளையும் சிதைப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்தார்கள். தமிழ் தேசிய நிலைப்பாட்டோடு இருந்துவரும் புலம்பெயர் தமிழர்களை நோக்கி ராஜபக்சாக்கள் மேற கொண்ட உளவியல் போர் கணிசமான வெற்றியைப் பெற்றது. ராஜபக்சவின் காலத்தில் புலம்பெயர் கட்டமைப்புகள் பலவீனப்படத் தொடங்கி விட்டன.

புலம்பெயர் சமூகம் ஒரு சவால்விடும் சக்தியாக இருக்கக் கூடாது என்பதில் ரணில் மிகக் குறியாக இருந்து செயற்படுகிறார். ஆதலால், தமிழ்த் தேசிய செயற்பாடுகளோடு தம்மை இணைத்திருந்த குறிப்பிடத்தக்களவு செயற்பாட்டாளர்களையும், சில புலம்பெயர் அமைப்புகளையும் ஒரு கூட்டு வலைக்குள் வீழ்த்தி வருகின்றார். சிலர் தம்மை அறியாமல் இந்த பொறிக்குள் சிக்குண்டுள்ளனர். தமது சுய நலன் சார்ந்து செயற்பட்டு வந்த சிலர், பலம் உள்ள பக்கம் சாய்வோம் என்ற அடிப்படையில் சிறிலங்காவின் பக்கம் சென்றுள்ளனர்.

ரணிலின் ஒப்பரேசன்

அன்று சமாதானம் என பேசியபடியே விடுதலைப் புலிகளை அழித்தவர்கள் இன்று நல்லிணக்கம் எனப் பேசியபடியே தமிழர்களின் தனித்துவ அடையாளங்களை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கடந்த யூன் மாதம் 11ம் திகதி சிறிலங்கா வெளிவிவகார அமைச்சில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் ஒரு குழுமமாக செயற்பட வேண்டும் என தெரிவித்தார். "தமிழ் டயஸ பொறா" என்ற அடையாளம் அற்று "சிறிலங்கன டயஸ்பொறா" என்ற ஒற்றை அடையாளத தோடு அனைவரும் செயற்பட வேண்டும் என்ற தொனியே அவரது பேச்சில் தெரிந்தது. ராஜபக்சவால் அமைக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே புலம்பெயர்ந்து வாழ்வோருடனான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாகவும் மங்கள தெரிவித்திருந்தார்.

ஆட்சிகள் மாறிய போதும், அணுகுமுறைகள் மாறிய போதும், அவர்கள் இலக்கு மாறவில்லை. அதற்கு அடிப்படையாக அவர்களிடம் சரியானதும் நிலையானதுமான கொள்கை வகுப்பு உண்டு. ஆட்சிகள் மாறினாலும் அணுகுமுறைகள் மாறினாலும் தமிழர் தேசத்தை நோக்கிய சிங்களத்தின் கொள்கை வகுப்பில் மாற்றம் நிகழவில்லையென்பதை கடந்த கால மற்றும் நிகழ்கால வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

தமிழ் தேசியத்துக்கு எதிராக நீண்டகாலமாகச் செயற்பட்டு வரும் ரொகான் குணரட்ண போன்றவர்கள் கடந்த ஒரு தசாப்தங்களுக்கு மேலாக சிங்கள தேசத்தின் கொள்கை வகுப்பில் முக்கியமானவர்களாக திகழ்கிறார்கள். சர்வதேச ரீதியில் பயங்கரவாத முறியடிப்பு நிபுணராக தன்னைக் காட்டிக் கொள்ளும் ரொகான் குணரட்ண, சிறிலங்கா அரசை பேணிப் பாதுகாப்பதையும் தமிழ் தேசியத்தை அழிப்பதையும் நோக்காக கொண்டு செயற்பட்டு வருகிறார். இவரது கருத்துக்களுக்கும் ரணில் - ராஜபக்சக்களின் நடவடிக்கைகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதை இவரது எழுத்துக்களையும் பேச்சுக்களையும் அவதானிப்பவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

டிசம்பர் 2013 ல் சிறிலங்காவின் டெயிலி நியுஸ் பத்திரிகைக்கு கொடுத்த நேர்காணலில், புலம்பெயர் தமிழர்களை எவ்வாறு பலவீனப்படுத்தலாம் என்பதை ரொகான் குணரட்ண விளக்கியிருந்தார். நாம் சிறிலங்கர்கள் என்ற அடையாளத்தை கட்டியெழுப்புவதன் அவசியத்தை எடுத்துகூறிய ரொகான் குணரட்ண, தமிழ் மக்களின் மனப்பாங்கிலும் அபிப்பிராயங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அத்துடன், தமிழ் ஊடகங்களையும் நெருக்கமாக கண்காணிக்க வேண்டும் என்பதையும் தெரிவித்திருந்தார்.

ரொகான் குணரட்ண போன்ற கொள்கை வகுப்பாளர்களையும், ரணில், மைத்திரி, சம்பிக்க ரணவக்க மற்றும் சரத் பொன்சேகா போன்ற பல்வேறு அரசியல்வாதிகளையும், அரசியற் கட்சிகளையும் ஒன்று சேர்க்கின்ற இரண்டு விடயங்கள் உண்டு. அவையாவன, பேரினத்தின் நலன்களுக்கு பாதகமாக அமையக்கூடிய நிகழ்வுகள் மற்றும் தமிழர் தேசத்துக்கு எதிரான செயற்பாடுகள். இந்த விடயங்கள், சகல வேறுபாடுகளையும் கடந்து பேரின நலன் சார்ந்து செயற்படுபவர்களை ஒரு பொதுத்தளத்தில் ஒன்றிணைக்கின்றன.

தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக பின்வரும் விடயங்களில் ரணில் தலைமையிலான பேரின அரசாங்கம கவனம் செலுத்துகிறது.

1. தமிழ் பேசும் மக்களுக்கிடையில் வேற்றுமைகளை வளர்த்தல்.

2. வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஓரணியில் திரளாமல் தடுத்தல்.


3.தாயகத்தில் தமிழர் தரப்புகளுக்கிடையிலேயே முரண்பாடுகளை உருவாக்குதல், ஊக்குவித்தல்.

4.புலம்பெயர் தமிழர் தரப்புகளுக்கிடையில் பகைமையுணர்வை நீடிக்கச் செய்து புதிய முரண்பாடுகளை தோற்றுவித்தல்.

5.தமிழர் தாயகத்தில் வாழும் தமிழர்களுக்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழரகளுக்குமிடையில் வேற்றுமைகள், குழப்பங்கள், முறுகல்களை ஏற்படுத்துதல்.

இத்தகைய சூழலில், கடந்த ஒகஸ்ட் மாதம் இலங்கைத் தீவில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் தமிழர் தாயகத்தில் போட்டியிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றது.

இருப்பினும், தமிழர் தாயகத்தில் வாழும் தமிழர்களுக்கும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களுக்குமிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்கும் கூர்மையடையச் செய்வதற்குமான பணிகளை ரணிலை முதன்மையாகக் கொண்ட பேரினதேசம் கைவிடவில்லை. இந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு ரணில் தமிழர்களையே பிரதானமாகப் பயன்படுத்துகிறார். இதனூடாக,



தமிழர்களை வைத்தே தமிழர்களை அழிக்க முடியும் என்ற தனது நகர்வை பிரதமர் ரணில் மீண்டும் நிரூபிக்க முயல்கிறார்.

புலம்பெயர் தளத்தில் இயங்கும் அமைப்புகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்குமிடையில் முரண்பாடுகளையும் குழப்பங்களையும் உண்டு பண்ணும் செயற்பாடுகளுக்கும் ரணிலை முதன்மையாகக் கொண்ட அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. அதில் ஒரு அங்கமே கடந்த நவம்பர் 20ம் திகதி வெளியிடப்பட்ட மீளாய்வு செய்யப்பட்ட தடைசெய்யப்பட்டோர் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற அரசியல் அபிலாசையில் உறுதியாகவும், தமிழ் மக்களுக்கு நடந்தது இனஅழிப்பு என்பதில் திடமாகவும் இருப்போரும் தடைநீக்கப்பட்ட எட்டு புலம்பெயர் அமைப்புகள் மற்றும் 269 தனிநபர்களில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, குறித்த நிலைப்பாடுகளில் தற்போது இல்லாத அமைப்புகளும் தனிநபர்களும் இந்த தடைநீக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்னர். இது, புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித தெளிவற்ற தன்மையை உண்டுபண்ணியுள்ளது. இந்நிலை எதிர்காலத்தில் பல பின்னடைவுகளுக்கு வழிவகுக்க முடியும்.

விடுதலைப் புலிகளில் முக்கிய தளபதியாக இருந்த கருணாவை விடுதலைப் புலிகளுக்கு எதிராக திருப்பியவர் ரணில். மகிந்தவோடு நீண்டகாலம் ஒன்றாக இருந்த மைத்திரி, மகிந்தவுக்கு எதிராக போட்டியிட துணையாக இருந்தவர் ரணில். தமிழ் தேசிய கூட்டமைப்பிலுள்ளவர்களைக் கொண்டே வட மாகாண முதலமைச்சரை பலவீனப்படுத்தும் முனைப்பில் ஈடுபட்டுள்ளவர் ரணில். இந்த ரணிலே, புலம்பெயர் தமிழர்களை பலவீனப்படுத்தும் முயற்சியில் மீண்டும் இறங்கியுள்ளார்.

ரணில் உள்நோக்கத்தையும் தூர நோக்குப் பார்வையையும் புரியாவிட்டால், தமிழ் மக்கள் மீது 13ம் திருத்தச் சட்டத்துக்கு அமைவான மாகாண சபையை விடவும் அதிகாரங்கள் குறைந்த தீர்வு திணிக்கப்படலாம். அத்துடன், தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்டது இனஅழிப்பு இல்லை என்ற கருத்துருவாக்கம் வெற்றிபெறலாம். இதனால், குற்றங்களை இழைத்தோர் தண்டனைகளிலிருந்து காப்பாற்றப்படுவதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்காது போகலாம்.

இந்த நிலை தமிழ் மக்களின் தனித்துவ அடையாளங்களை சிதைத்து, தமிழர் தாயகத்தை அடிமை வாழ்வுக்குள் சிறைப்படுத்தி, தமிழ்த் தேசியத்தை அழிக்கும் தூர நோக்குப் பார்வை கொண்டது. இத்தகைய இராஜதந்திரத்தை முறியடிக்க வேண்டுமானால் தமிழ்த் தேசியத்தை பாதுகாக்கும- இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களாக தமிழர்கள் எழுச்சிபெறவேண்டிய தேவை புரியப்பட வேண்டும்.

*-நிர்மானுசனின் பத்தியிலிருந்து*



# 2015 விளையாட்டு உலகம் ஓர் பார்வை



2015 ஆம் ஆண்டு, உல கில நடந்த முக்கிய விளையாட்டு நிகழ்வுகள், விறுவிறுப் பான போட்டிகளின் தொகுப்புகள் இங்கே...

**கிரிக்கெட்**

2015 கிரிக்கெட் ரசிகர்களு



க்கு கொண்டாட்டமான வருடம்தான். இந்த வருடத்தின் தொடக்கத்திலே ஒருநாள் உலக கோப்பை, அதனை தொடர்ந்து ஐ.பி.எல், முதல் முறையாக நடைபெற்ற பகல் இரவு டெஸ்ட் போட்டி, அதிவேக சதம் என பல சுவாரஸ்யங்களை கொண்டது.

ஜனவரி மாதத்தில் தென்னாபிரிக்க நாட்டிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட மேற்கு இந்திய தீவுகள் அணி, அங்கு ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று விளையாடியது. இரண்டாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் டிவில் லிர்ஸ் 31 பந்துகளில் சதம் அடித்து புதிய உலக சாதனை படைத்தார். அந்த போட்டியில் அவர் மொத்தமாக 16 சிக்ஸர்க ளும் 9 பவுண்டரிகளும் விளாசி தள்ளினார்.

பதினொராவது உலக கோப்பை போட்டிகளை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இணைந்து நடத்தியது. போட்டிகள் பெப்ரவரி 14 தொடங்கி மார்ச் மாதம் 29 வரை நடைபெற்றன. உலக கோப்பைக்கு தகுதி பெற்ற 14 அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக் போட்டிகள் நடைபெற்றன.

"ஏ" பிரிவில் நியூசிலாந்து அணியும், "பி" பிரிவில் இந்திய அணியும் எந்த அணிக்கு எதிரா கவும் தோல்வி பெறாமல் லீக் பிரிவில் முதல் இடங்களை பிடித் தது.

இந்திய அணி தனது பரம எதிரியான பாகிஸ்தானை தனது முதல் போட்டியில் சந்தித்தது. பெப்ரவரி 15ஆம் திகதி நடந்த இந்த போட்டியில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

காலிறுதி வரை தோல்வியே சந்திக்காத இந்திய அணி, அரையிறுதயில் அவுஸ்திரேலியாவிடம் அடிபணிந்தது. மற்றொரு அரையிறுதியில்தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி, நியூசிலாந்து இறுதி போட்டிக்கு முன்னேறியது.

மார்ச் 29 ஆம் திகதி மெல்பேர்ன் மைதானத்தில் வைத்து நடைபெற்ற இறுதி போட்டியில், அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி, ஐந்தாவது முறையாக உலக கோப்பையை வென்றது.



இந்த உலகக்கோப்பை தொடரில தான் முதன் முதலாக தனிநபர் இரட்டை சதம் அடிக்கப்பட்டது. மேற்கு இந்திய தீவுகள் அணியின் க்றிஸ் கெயில், சிம்பாப்வே அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் உலகக்கோப்பை தொடரில் முதலாவது இரட்டை சதத்தை பதிவு செய்தார்.




இந்தியாவில் திருவிழாவாக கொண்டாப்படும் ஐ.பி.எல் போட்டி, இந்த ஆண்டும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி தொடங்கி மே மாதம் 24 ஆம் திகதி வரை நடைபெற்றது. வழக்கம் போல் இந்த முறையும் சென்னை அணி லீக் ஆட்டங்களில் அபாரமாக செயற்பட்டு ப்ளே ஒப் சுற்றுக்குள் நுழைந்தது.




மே மாதம் 24 ஆம் திகதி , கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இறுதி போட்டியில் சென்னை அணியும்மும்பை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடந்த இந்த இறுதி போட்டியில, மும்பை அணி வெற்றி பெற்று, கோப்பையை இரண்டாவது முறையாக வென்றது.

ஜூலை மாதம் சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகள் ஐ.பி.எல் தொடரில் விளையாட இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. சென்னை அணியின் நிர்வாகி குருநாத் மெய்யப்பன் மற்றும் ராஜஸ்தான் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான குந்த்ரா ஆகியோர் சூதாட்டததில் ஈடுபட்டதாக, அவர்களுக்கு ஆயுள கால தடையும் விதித்தது நீதி மன்றம். தடை செய்யப்பட்ட இரு அணிகளுக்கு பதிலாக புனே மற்றும் ராஜ்கோட் அணிகள் புதிதாக தேர்வு செய்யப்பட்டன. இவ்விரணடு அணிகளும் அடுத்து வரும இரண்டு ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும். சென்னை அணியின் நிரந்தர கப்டன் என பெயர் பெற்ற இந்திய கப்டன்




டோனி, 12.5 கோடிக்கு புனே அணியால்ஏலத்தில்எடுக்கப்பட்டார.

கோலி தலைமையில் இலங்கையில் டெஸ்ட் தொடர் விளையாட சென்ற இந்திய அணி, 2-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. அதன் பின்னர் இந்தியாவில் நடந்த தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரையும், விராட் கோலி தலைமையிலான இந்திய அணியை 3-0 என்ற கணக் கில் வெற்றி பெற்று, டெஸ்ட் தரவரிசையில் இரணடாம் இடத்திற்கு முன்னேறியது. அதற்கு முன்னதாக ஒரு நாள் மற்றும்இருபது-20 தொடரை இந்தியா இழந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (தொடரும்)






# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: உன்னை ஒன்று கேட்பேன்
பாடியவர்: பி.சசீலா
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
திரைப்படம்: புதிய பறவை




உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்-
என்ன பாட தோன்றும்
உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்
என்ன பாட தோன்றும்

காதல் பாட்டு பாட
காலம் இன்னும் இல்லை
தாலாட்டு பாட தாயாகவில்லை
உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்

நிலவில்லா வானம் நீரில்லா மேகம்
பேசாத பெண்மை பாடாது உண்மை
கண்ணை மெல்ல மூடும்
தன்னை எண்ணி வாடும்
பெண்ணை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்
உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்

தனிமையில் கானம் சபையிலே மோனம்
உறவுதான் ராகம் உயிரெல்லாம் பாசம்
அன்பு கொண்ட நெஞ்சில்
அனுபவம் இல்லை
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோண்றும்
உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்
என்ன பாட தோன்றும்

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
*சிவகுமாரன் குடும்பம்- அரியாலை, கஜனிகா, ரஜனி, சந்தானம், கோபி, சிந்து, கவிதா, மாலதி, பாலகிருஷ்ணன், கார்த்திகா, கெங்காதரன்*

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## தாத்தா-குறும்பட விமர்சனம்

தாத்தா குறும்படம் இயக்குநர் மதிசுதாவினால் எழுதப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட குறும்படமாகும். 2010 இல் எழுதப்பட்ட இக்குறும்படத்துக்கான கதையினை 2013இல் படம்பிடித்து உருவாக்கி இருக்கிறார்கள். நீண்டகாலம் பொதுவெளியில் வெளியிடப்படாமல் இருந்த இக்குறும்படம் இவ்வருட இறுதியில் பல்வேறு குறும்படப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தது. லண்டன் IBC குறும்பட விருதில் யூலி விருதையும் மட்டக்களப்பு வேல்ஸ் விருதில் சிறந்த திரைப்படத்துக்கான விருதையும் சிறந்த இயக்குநருக்கான விருதையும் பெற்றிருக்கின்றது.

போர்காலச் சூழலில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வியல் அவலங்களை இதுவரை பல்வேறு கதைப் பிரதிகள் பேசியிருந்தாலும் குறும்படம் மூலம் காட்சிப் படிமமாக ஒப்பேற்றுவதில் தோல்வியே கண்டிருக்கின்றன. பார்வையாளரின் கண்முன்னே கற்பனைக்கு எட்டாத போர்க்காலச் சூழலின் கொடூரங்களை முன்வைப்பதிலும் பல்வேறு இடர்பாடுகள் புறவயமாக சித்திரிப்பதிலும் கொண்டிருக்கின்றன. முடிந்தவரை யதார்த்தத்துக்கு அருகே நின்று போர்க்காலச் சூழலை காட்சிகளாக படமாக்குவதற்கு மிகுந்த பொருட்செலவினை எதிர்நோக்கக்கூடும். குறும்பட உருவாக்கத்தில் இப்பொருட்செலவுகள் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவே இருக்கின்றன.

மதிசுதா தாத்தா குறும்படம் மூலம் போர்க்காலச் சூழலில் இடப்பெயர்வில் சிக்குண்ட மக்களின் அகவயமான உணர்ச்சிகளை பேச விளைந்திருக்கின்றார். சிற்றுணர்ச்சிகள் என்று சொல்லப்படக்கூடிய வாழ்வில்




தினமும் சந்திக்கும், கண்ணீர் சிந்த வைக்கும் உணர்வுகரமான விடயங்களை உள்ளடக்கி மிகை நாடகத் தருணங்கள் [Melodramatic situations] மூலமாக தாத்தா குறும்படத்தினை உணர்ச்சிகரமான குறும்படமாக உருவாக்க முய்ன்றுள்ளார். நாடகத் தருணங்கள் உன்னதமாக்கலை [sublimation] நிகழ்த்துகின்றன. காட்சிப் படிமமும் இசையும் அகத்தை கொந்தளிக்கவும் அலைக்கழியவும் வைத்து முழுமை நோக்கை நோக்கிச் செலுத்தவும் வைக்கின்றது.

எளிமையான நேர்கோட்டில் செல்லும் கதை. இரண்டு இளையவர்கள், அவர்களின் சொந்த தாத்தா வயது முதிர்ச்சியில் முதுமை சுமையில் தள்ளாடிக்கொண்டு இருக்கின்றார். யுத்த சமயத்தில் பேரன்களும் தாத்தாவும் இடம் பெயர்கின்றார்கள். ஒரு பேரனுக்கு கணுக்காலில் காயம். அவரினை சுமந்து செல்லும் பொறுப்பை மற்றைய பேரன் ஏற்கின்றான். தாத்தாவினால் நீண்ட தூரம் நடந்து செல்ல முடியவில்லை. அவரையும் சுமந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. தாத்தா தன்னை விட்டுச்செல்ல பரிந்துரைக்கின்றார். பேரன்கள் அதனை மறுத்து தாத்தாவினை கொண்டு செல்கின்றார்கள். இதற்கு பின்னிருக்கும் உணர்ச்சிகரமான விடயங்கள்தான் கதையினை நகர்த்துகின்றன.

பேரன்களாக மதிசுதாவும் ஜனகனும் தாத்தாவாக ஏரம்போவும் நடித்திருக்கின்றார்கள். நடிப்பில் உணர்ச்சிகளை முடிந்தவரையில் அனைவரும் கூட்டாக ஒபபேற்ற விளைந்திருக்கின்றார்கள். ஜனகனின் மிகையற்ற உணர்ச்சிகளை வெளிக்கொணரும் நடிப்புத் தருணங்கள் சிறப்பாக வந்துள்ளன.

யுத்த காலப்பகுதியை கண்முன்னே கொண்டுவர முயன்று இருந்தாலும் இடப்பெயர்வில் மக்களின் செறிவு மட்டம் குறைவாக காட்சிப்படுத்தப்படுகின்றன. புறவயமாக குறும்படத்தில் அவ்வாறான காட்சிகளை காட்டுவது சிக்கலான ஒன்றாக இருந்தாலும் முடிந்தவரை அதனை ஒப்பேற்றி இருக்கின்றார்கள். யுத்தத்தினால் இறந்த மக்களின் உடல்களை காட்டுவதில் மிகுந்த கவனம் எடுத்துள்ளார்கள். உடல் சிதைந்து குடல்கள் வெளியே தெரியும் காட்சிப்படிமங்கள் யதார்த்தத்தினை கண்முன்னே கொண்டு வருகின்றன. நாய்கள் குடல்களை இழுக்கும் காட்சிகள் அனைத்தும் மிகுந்த பொறுமையாக உருவாக்கப்பட்டிருப்பதனை உணரமுடிகின்றது.

**-அனோஜன் பாலகிருஷ்ணன்-**

# ஈழத்துக் கவிதைகள்

## ப.ஆப்டீன் எனும் இலக்கிய படைப்பாளி; ஓர் அனுபவப் பகிர்வு

நாவலப்பிட்டி கட்டப்புலா தோட்டத்தில் 1937இல் ப.ஆப்டீன் பிறந்தார். தோட்டப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் கம்பளை சஹிராக் கல்லூரியில் படித்துவிட்டு நாவலப்பிட்டி சென்.மேரீஸ் கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்தார்.

அப்போது நான் நாவலப்பட்டி சென் அன்ரூஸ் கல்லூரியில் உயர்தர வகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது நாம் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

தான் எழுதிய சிறுகதைகளைக் கொண்டு வந்து எனக்குக் காட்டுவார். நான் சில திருத்தங்கள் செய்து ஆழ்ந்து படித்து எனது கருத்துக்களைக் கூறி ஊக்கப்படுத்தியுள்ளேன். அவர் தமிழில் எழுதியது கண்டு ஆச்சரியப்பட்டதுண்டு. ஆப்டீன் வீட்டில் பேசுவது மலாய்மொழி, கற்பிப்பது ஆங்கிலம், எழுதுவது தமிழ்.

ஆரம்பத்தில் நான் திருத்தி ஊக்குவித்ததை மறக்காமல் இரவின் ராகங்கள் என்ற தனது முதல் சிறுகதைத் தொகுதியிலும் பின்னர் கே.பொன்னுத்துரை என்பவரோடு தொகுத்த நந்தியும் மலையகமும் என்ற நூலிலும் குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

"கதைகள் எழுதி முடிந்ததும்-நண்பர் இர.சந்திரசேகர சர்மாவின் இல்லத்திற்கு"-இலக்கியக் கனதி மிக்க அந்தப் புனிதமான \மேல்மாடி அறைதான் இன்றும் என் ஞாபகத்தில் பசுமையாக இருக்கிறது-செல்வேன். நண்பர் இர.சந்திரசேகரன் அவர்கள் எனது ஆரம்பகாலச் சிறுகதைகளை ஆழ்ந்து படித்துவிட்டு திருத்தங்கள் செய்து ஆலோசனைகள் வழங்கி பெரிதும் உற்சாக மூட்டியும் தனது "கலைமகள் படிப்பகத்தில்" என்னையும் ஓர் உறுப்பினராக்கி நிறைய நூல்களை (டாக்டர் மு.வ.தி.மு.க.நூல்கள்) படிக்கச் செய்ததும் அந்தப் பொற்காலத்தில் தான் மகாகவி பாரதியாரின் பேர்த்தி விஜயபாரதியும் அவரது கணவர் சுந்தரராசனும் சிறுகதை மேதை கு.அழகிரிசாமியும் நாவலப் பிட்டிக்கு வந்தபோது அவர்களுக்கு ஒரு விழா மாநகரசபை மண்டபத்தில் நடத்தினோம். கு.அ.வின் சிறுகதைகள் பற்றிய பேச்சாக எனது பேச்சு அமைந்தது. விஜயபாரதி தனது கலாநிதி பட்டத்திற்கு பாரதியாரின் பாடல்களை ஆய்வு செய்ததைப் பற்றி கவிதைகளை மேற்கோள் காட்டி அரிய சொற்பொழிவாற்றினார்.

அடுத்தநாள் விஜயபாரதியும் கணவரும் ஆத்மஜோதி முத்தையாவுடன் கதிரேசன் கல்லூரிக்குச் சென்று விட்டனர். ஆத்மஜோதி நிலையத்தில் கு.அழகிரிசாமியுடன் ப.ஆப்டீனும் நானும் சேர்ந்து ஓர் இலக்கியச் சந்திப்பை நடத்தினோம்.

அவருடன் சேர்ந்து பல படங்கள் எடுத்துக் கொண்டோம்.அதன் பின்னர் மூவரும் மலைச்சாரலில் நடந்து சென்று மகாவலி கங்கையில் நீராடினோம். மாலையில் அவர் கொழும்புக்குச் சென்றார்.

கு.அழகிரிசாமி சென்னைக்கு சென்ற பின் எமக்கு எழுதிய நீண்ட கடிதத்தில் இன்னுமொருமுறை எங்களுடன் மகாவலி கங்கையில் நீராட விரும்புவதாக எழுதியிருந்தார்.

ஆப்டீன் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக இருந்த காலத்தில் நான் கொழும்பு செல்லும் வேளைகளில் மாணவர் ஒருவர் மூலம் ஒருகடிதம் அனுப்புவார். அதில் கல்லூரிக் காலைக் கூட்டத்தில் பேசும் படி அழைத்திருப்பார். இப்படிப் பலமுறை மாணவர்களுக்கு இந்து சமய விழுமியங்கள் கலை, கலாசாரம், இலக்கியம் எழுத்து என்பன பற்றி எல்லாம் பேசும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தார்.

அநேகமாக இறுதிவரை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வோம்.

அண்மையில் 2014 இல் வெளியிட்ட அவரது "கொங்காணி" என்ற சிறுகதைத் தொகுப்பில் தன்னை வளர்த்தவர்கள் பற்றிக் குறிப்பிடும்போது ஓரிடத்தில் "எனது இலக்கிய பயணத்தின் ஆரம்பகால கட்டங்களில் சிறுகதைகளைப் படித்து நெறிப்படுத்தியதில் நண்பர் இர.சந்திரசேகர சர்மா என் இலக்கிய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்ததை அடிக்கடி நினைத்துப் பார்ப்பதில் மனம் பூரிப்படைகிறேன்" என எழுதியிருக்கிறார்.

ஆப்டீன் நன்றி மறக்காதவர், அமைதியானவர், அடக்கமும் பணிவும் உடையவர், பழகியோர் மனத்தில் என்றும் நிலையாக நிற்கக்கூடியவர்.

ஆப்டீன் கடந்த 09.10.2015 இல் காலமானார். அவரது எழுத்துக்கள் என்றும் நீடுவாழும்.

**இர.சந்திரசேகரசர்மா**

சினிமா செய்தி

# தங்கமகன்

## திரை விமர்சனம்



தனுஷ்..தனுஷ்..தனுஷ்... மட்டும்தான் படம் முழுக்க. ஆனால், ஆர்ப்பாட்ட ஓப்பனிங், அதகள சண்டை, ஆக்ரோஷ சவால்கள் எதுவும் இல்லை. ஹவுஸிங் போர்டு க்வார்ட்டஸில் குடியிருக்கும் அரசாங்க ஊழியனின் மகனாக, பெற்றோரின் செல்லப் பிள்ளையாக, காதலியின் ரோமியோவாக, மனைவியின் ஆதர்சமாக, செம கலாய் நண்பனாக என ஒவ்வொரு ஃப்ரேமிலும் தனுஷிசம்!

கதை...? 'துள்ளுவதோ இளமை' காலத்திலிருந்து தனுஷ் நடித்து வரும் கதைதான். (ஆனா, சும்மா சொல்லக் கூடாது... இத்தனை வருசம் கழித்தும் தனுஷை கல்லூரி மாணவனாக ஏற்றுக் கொள்ள முடிகிறது!). வருமானவரித் துறை அலுவலரான கே.எஸ்.ரவிக்குமாரின் மகன் தனுஷ். 'ஆங்கிலோ பிராமின்' குடும்ப ஏமி ஜாக்சனை ஸ்கெட்ச் போட்டு காதலிக்க வைக்கிறார்.

லிப்லாக் மழை, கட்டிப்பிடி விளையாட்டுகளில் நாளும் பொழுதும் கழியும் போது, சின்ன ஊடல் ஜோடியைப் பிரிக்கிறது. காதல் தோல்வி மறந்து, பொறுப்பு உணர்ந்து, வேலைக்குச் சென்று, சமந்தாவை பெண் பார்த்து கல்யாணம் பண்ணிக் கொண்டு 'ஹாப்பி ஹவர்ஸ்'களில் திளைக்கிறார் தனுஷ். திடீர் இடி. அப்பா ஒரு திருட்டுக் குற்றச்சாட்டுக்கு ஆளாகி தற்கொலை செய்து கொள்ள, தனுஷின் வேலையும் பறிபோக குடும்பமே நிலைகுலைகிறது. என்ன நடந்தது என்பதை உணர்ந்து அதை சரிசெய்து குடும்பத்தின் தங்கமகனாக தனுஷ் எப்படி ஜொலிக்கிறார் என்பது... வேறென்ன வெள்ளித் திரையில் தான்!

ஆச்சரியமாக... அடக்கி வாசித்திருக்கிறார் தனுஷ். ஓப்பனிங் பில்ட்-அப் இல்லை, அதீத சவால் இல்லை, ஓவர் குடி கும்மாளம் இல்லை. சிம்பிள் ஹம்பிள் இளைஞனாக மனதுக்கு நெருக்கமான கரக்டர். சதீசுடன் சேர்ந்து அளவான சேட்டை, ஏமியுடனான காதல் கலாட்டாக்கள், வெகு இயல்பு. 'என் நம்பர் கொடுப்பேன்னு பார்த்தியா... அஸ்கு புஸ்கு..' என ஏமியிடம் அசால்ட் காட்டுவது முதல் பைக்கில் செல்லும்போது 'நான் எதுவும் பண்ணலையே' எனப் பதறி பார்வையைப் பதிக்குமிடம் வரை செம சேட்டை. அதுவே சமந்தாவிடம் கனிவான கணவனாக மென்மை ரொமான்ஸ். முதலிரவு அறையில் சமந்தா காலில் விழப் போகிறார் என்று நினைத்துப் பதறுவதும் ஏமி பற்றிய சமந்தாவின் கமெண்ட்டுக்கு சமாளிப்பதுமாக... வாழ்ந்திருக்கிறார் மனுஷன்.

அட... ஏமி பொண்ணு அழகா நடிச்சிருக்காங்க..! தனுஷ் தன்னை பின் தொடருகிறாரா என்று தவிப்புடன் பார்ப்பதும் கணவனிடம் தனுஷை விட்டுக் கொடுக்காமல் பேசுவதுமாக அசத்தல்.

இந்தப் பக்கம் செம பாந்தமாக சமந்தா. காட்டன் சேலை, கணவனுக்கு காத்திருப்பு, கஷ்ட ஜீவனம் என தமிழக ஹோம் மேக்கர்களை அழகாகப் பிரதியெடுத்திருக்கிறார். மழையில் தனுஷ் நனைந்து வந்து நிற்கும் காட்சியில் தலை துவட்டுவதா... இழுத்து அணைத்துக் கொள்வதா என்று சமந்தா தயங்கி மயங்கி நிற்குமிடம்... வாவ்!

கெத்து எகத்தாளத்தையே டிரேட் மார்க்காக கொண்ட கே.எஸ்.ரவிக்குமார் மறதி மனுஷனாக படபடக்க வைக்கிறார். மகனை கோவிலுக்குப் போக வைக்க தலையை ஆட்டி உருட்டி ஒரு ரியாக்‌ஷன் கொடுக்கிறாரே ராதிகா... ஆவ்ஸம்!

அனிருத்தின் ஹிட் ஆல்பம் வரிசையில் இந்தப் படமும் இடம் பெற, பின்னணி இசையில் வழக்கமான அதார் உதார். ஏமியோ, சமந்தாவோ பச்சக் பச்சக்கென லிப் லாக்கி விடுகிறார் தனுஷ். ஆனாலும், 'உன் மேல என்னால கோபமே பட முடியாது யமுனா' என சமந்தாவிடம் தனுஷ் உருகுமிடம்தான் காதலின் தங்கத் தருணம்.

மொட்டை மாடியில் பட்டப் பகலில் பீர் மயக்கத்தில் ஏமி தனுஷிடம் காதல் சேட்டை செய்வது, தனுஷின் நண்பன் 'பீப்' வார்த்தையை ஒரு சமயம் சொல்வது (மியூட் செய்திருக்கிறார்கள்), மனைவியே கணவனின் எக்ஸ் காதலியைப் பற்றி அவனிடம் சீண்டலாகச் சிலாகிப்பது, கர்ப்பிணி மனைவியை காக்க வைத்துவிட்டு தனுஷ் ஆக்‌ஷன் அதிரடியில் ஈடுபடுவது ஆகியவை கலாசார கண்ணியக் காவலர்கள் கவனத்துக்கு!
மனைவியின் வயிற்றிலிருக்கும் குழந்தையிடம் 'சொந்தக்காரங்களை நம்பாதப்பா' என தனுஷ் சொல்வது, 'நான் என் எக்ஸ் பாய் ஃப்ரெண்டை பத்திச் சொல்லுவேன்... ஆனா, அது உனக்கு அசிங்கமாயிரும்' என தன் கணவனிடம் ஏமி சொல்லுமிடங்களில் அப்ளாஸ் அள்ளுகிறது வசனம்!
இந்த ஹைலைட் சங்கதிகளில் பெரும்பாலானவை முன்பாதியிலேயே நிகழ, பின்பாதி... மெலோ டிராமாவாக சவசவ! 'டைஹார்டு' தனுஷ் ரசிகர்களுக்காக அர்ப்பணித்துவிட்டார்கள் போல. ஒரு செல்போனை வைத்துக்கொண்டு நாலு கோடியை ஜஸ்ட் லைக் தட் மீட்டு சித்து விளையாட்டு காட்டுகிறார் தனுஷ்.

ஆக, ஃபைனல் பன்ச் என்ன..?

தங்கமகன் ஃபர்ஸ்ட் ஹாஃப் செம ஜாலி.... செகண்ட் ஹாஃப் லாஜிக் கேலி. தனுஷ் ரசிகர்களுக்குப் படம் பிடிக்கும். மற்றவர்களுக்கு முதல் பாதி மட்டும் பிடிக்கும்!

# நல்லாட்சியை செயலிலும் வெளிக்காட்டிய ஜனாதிபதி

காலநூற்றாண்டைக் கடந்த நிலையில் அகதிகளாக அடுத்தவர் நிலங்களில் குடிசைகளை அமைத்து அவல வாழ்க்கை வாழ்ந்து வரும் வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக முக்கிய வாக்குறுதி ஒன்றை வழங்கியிருந்தார்.

தேசிய நத்தார் பண்டிகை நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் யாழ். மாநகர சபை மைதானத்தில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு வாக்குறுதியளித்திருந்தார்.

நத்தார் என்பது உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமாதானம், அன்பு செலுத்துகின்ற நாள் ஆகும். அதனால் தான் அனைவரும் அதை கொண்டாடுகிறோம். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு ஜீவ ராசிகளுக்கும் தேவைப்படுவது மிகவும் சுதந்திரமாகவாழ வேண்டும் என்பதுதான் எனவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

இடம்பெயர்ந்த நிலையில் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு ஜனாதிபதியின் இந்த வாக்குறுதி முன்பு ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் போன்று நிறைவேறாமல் போய் விடக் கூடாது . இதுவே மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களின் ஏக்கம்.

1990 ஆம் ஆண்டு சொந்த நிலங்களை விட்டு கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு வெளியேறிய மக்கள் கலவர பூமியில் வாழ்வைத் தொலைத்தவர்களாக அடுத்தவரின் உதவிக்காக காத்திருக்கின்றனர்.

மக்களுக்கு சொந்தமான நிலத்தில் மாடமாளிகைகளை அமைத்து மகாராஜாவாக வாழ நினைத்தவர் அம்மக்களின் கண்ணீரால் கனவுகள் எல்லாம் தகர்ந்து போகும் என்று நினைத்துப்பார்த்திருக்க மாட்டார்.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை அளிக்க ஒரு போதும் உடன்படமாட்டார்கள் என்பதையும் ஒன்றிணைந்து சகல இன மக்களும் வாழக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க மாட்டார்கள் என்பதையும் உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட்ட மகிந்தவுக்கு எதிர்மறையாக மைத்திரியின் மனிதநேயப் பண்பு வெளிப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் அள்ளி வீசும் வாக்குறுதிகளை வெற்றியின் பின் மறந்து போகும் அர சியல்வாதிகளுக்கு மத்தியில் நாட்டின் அதியுயர் பதவியிலுள்ள ஒருவர் எவ்வித பாதுகாப்பும் இன்றிபந்தாக்களும் இன்றி அகதி முகாமிற்குள் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

மகிந்தவுக்கும் மைத்திரிக்கும் வித்தியாசம் உண்டு என்பதையும் எல்லா சிங்களத் தலைவர்களும் தமிழருக்கு எதிரானவர்கள் அல்லர், குரோத மனப்பான்மையுடன் செயற்படுபவர்கள் அல்லர், இன ஒற்றுமை, சமாதானம் நிலைத்திருக்க வேண்டும் என்ற கொள்கையுடன் செயற்படுபவர்களும் உள்ளனர் என்பதையும் ஜனாதிபதி மைத்திரி வெளிப்படுத்தியுள்ளார்.

மக்களின் தேவைகளையும் மக்கள் படும் துன்ப துயரங்களையும் அறியாது இன, மத, மொழி, சாதி, நிற வேறுபாடுகளை சாதகமாகப் பயன்படுத்தி பிளவை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டவர்களை மக்கள் பிரதிநிதிகள் என்றோ மக்கள் தலைவர்கள் என்றோ அடையாளப் படுத்தமுடியாது. மக்களின் எதிரிகளாகவே பார்க்கப்பட வேண்டியவர்கள்.

மக்களைப் பிளவுபடுத்துவதன் ஊடாக தமது இருப்பை நீண்ட காலம் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்று நினைப்பவர்கள் ஒற்றுமையை என்றுமே விரும்ப மாட்டார்கள். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பார்களே அதேபோன்று தான்.

மக்கள் நலனைப் பேணிப் பாதுகாக்கத் தவறுபவர்கள் மக்களால் நிராகரிக்கப்படுவர்களேயானால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியதாக மாறி விடும்.

மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்தவர். அதேவேளை பிரதமர், அமைச்சர் பதவிகளையும் வகித்தவர் இன்று பதவியாசையில் பாராளுமன்ற உறுப்பினராகவுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஊடாக தனக்கும் தனது குடும்பத்தாருக்கும் எதிராக வரவிருக்கும் நெருக்கடிகளை தடுத்துவிட முடியும் என்று நினைத்தே மீண்டும் பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் கனவுடன் களமிறங்கினார். இருப்பினும் அவரது விருப்பம் நிறைவேறவில்லை.

காணாமற்போனவர்களின் உறவினர்களின் கண்ணீர், காணிகளை இழந்து கால்வயிற்றுக் கஞ்சிக்கு கூட வழியின்றி வாடிக் கொண்டு இருக்கும் ஏழைத் தமிழர் விட்ட கண்ணீரும் போரிலே கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட போது உறவுகள் கண்ணீருடன் உதிரத்தை வெளியிட்டதன் விளைவாக மகிந்தவின் ஆசையில் மண் விழுந்தது.


போரிலே பல்லாயிரக் கணக்கான மக்களைப் பறிகொடுத்த தமிழினம் கண்ணீர்விட்டு கதறியழுவதற்குக்கூட அரசிடம் அனுமதி பெறும் நிலையை மகிந்த அரசு ஏற்படுத்தியிருந்தது.

உயிரிழந்த உறவுகளை நினைத்து கண்ணீர் விட்டால் உயிரிழந்த புலிகளுக்கு உயிரூட்ட முயற்சிக்கிறார்கள் என்று கூறி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்தது படைத்தரப்பு.

தமிழரை வதைப்பதன் ஊடாக சிங்கள மக்களின்மனதை வெல்ல முடியும் என்று மனப்பால் குடித்த மகிந்தவுக்கும் அவரது சுற்றத்தாருக்கும் மைத்திரியின் வருகையைப் பயன்படுத்தி ஜனநாயக ரீதியில் தக்க பதிலளித்த தமிழினம் அதற்கு பிரதி உபகாரமாகப் பலதை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

அதில் நிரந்தர அரசியல் தீர்வு என்பது அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளதோடு காணி அபகரிப்பு நிறுத்தப்பட வேண்டும் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறி எதிர்கால வாழ்க்கையை செம்மைப்படுத்த உதவ வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

சிங்களவர்களுக்கு இணையான உரிமைகளுடன் தமது சொந்த நிலங்களில் சுதந்திரமாக தமிழர்கள் வாழவேண்டும்





என்று நினைப்பது தவறு என்று யாரும் கூற முடியாது. 25 ஆண்டுகளுக்கு மேலாக அகதிகளாக அல்லற்படும்தமிழ்மக்கள் சொந்த நிலங்களில் மீள்குடி யேற அனுமதிக்கப்படாது உள்ளதே மிகப்பெரும் தவறு. அது பாவச்செயலும் கூட.

இந்தப் பாவச் செயலுக்கு பரிகாரம் தேடும் விதமாக தேசிய நத்தார் தின விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்தி நலன்புரி நிலைய மக்களை அவர்களின் குடிசைகளுக்குள் சென்று நலன் விசாரித்த பின்னர் 6மாதங்களுக்குள் தீர்வு கிடைக்கும் என்று வாக்குறுதியளித்தார் ஜனாதிபதி.

ஜனாதிபதி மைத்திரியின் வாக்குறுதியை தேவவாக்காக நம்புகின்றோம் என்று வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் வடக்கில் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத் தப்பட்ட பகுதிகளில் யாழ். வலிகாமம் வடக்கு பிரதேசம் மிகவும் முக்கிய பிரதேசமாகும்.

இந்த பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் இன்றும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மீள்குடியேற் றத்தை எதிர்பார்த்து நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள் உறவினர்கள் மற்றும் வெளிமாவட்டங்களிலும் தமிழ் நாட்டில் அகதி முகாம்களிலும் வெளி நாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றும் காத்திருக்கின்றனர்.

வடக்கில் வலி.வடக்கு உட்பட பல பிரதேசங்களில் மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி பல போராட்டங்களையும் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல்களையும் மக்கள் மேற் கொண்டுள்ளனர். ஆர்ப்பாட்டங்கள் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெறும் காலப்பகுதியில் பொய் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு அவை இடைநிறுத்தப்பட்ட போதும் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வில்லை.

படிப்படியாக மீள்குடியேற்றம் நடைபெறும் என்று அரச தரப்பு வாக்குறுதிகளை அளித்துவந்தாலும் அகதி முகாம்களில் அவலவாழ்க்கை வாழ்ந்து வரும் மக்களின் துன்பங்களைப் போக்க முடிய வில்லை. அவர்களின் கண்ணீர்க் கதை தொடர்ந்த வண்ணமேயுள்ளன. தொழில் வாய்ப்புக்கள் இல்லை. குடிநீர் வசதியி ல்லை. போக்குவரத்து வசதியில்லை என்று மழையிலும் வெயிலிலும் மக்கள் படும்பாடு அப்பப்பா. சொல்லிமாளாது.

நல்லாட்சி அரசாங்கமாவது தமது கோரிக்கையை ஏற்று சொந்த நிலங்களில் மீளக் குடியேறும் தமது நீண்டநாள் கனவை நனவாக்க வேண்டும் என்ற. வலி.வடக்கு மக்களின் எதிர்பார்ப்பை புரிந்தவராக ஜனாதிபதி மைத்திரி அம்மக்களை நேரில்சென்று சந்தித்து ஆறுதல். வார்த்தை கள் கூறி அவர்களின் வாழ்க்கையில் ஏழ்மை குடிகொண்டுள்ளதை அறிந்துள்ளார்.


இந்தப் புரிதல் இதுவரை ஆட்சியிலிருந்த எந்தவொரு அரச தலைவர்களாலும் வெளிக்காட்ட முடியாத வொன்றாக இருந்த நிலையில் நல்லாட்சி அரசின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரி, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு தனது சிறப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் யாழ். வருகையும் தமிழ் மக்களுக்கு அளித்த முக்கிய வாக்குறுதியும் பாலன் பிறப்பை ஒட்டி அமைந்துள்ளதால் மக்களின் வாழ்க்கையிலும் ஒளிமயமான எதிர்காலம் பிறக்கவுள்ளது என்பதை வெளிபடுத்தியுள்ளது. தமிழரின் நீண்டகாலக் கோரிக்கைக்கு அரசு பச்சைக் கொடி காட்டியுள்ளதை நாம் முழு மனதோடு ஏற்றுக்கொள்ளும் அதே வேளை ஜனாதிபதியின் வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என இறைவனை மன்றாடுவோம்.

எஸ்.ஆர்.கரன்

facebook

# பேருந்து நிலையத்தில் ஓர் இரவு




இரவின் பனியில் நனைந்தபடி புறநகர் பேருந்து நிலையத்தை அடைந்தேன். வானில் இருந்து யாரோ என்னை புகைப்படம் எடுத்தது போலிருந்தது , நிமிர்ந்து மேலே பார்த்தேன் .... மின்னல். மழையில் நனையாமல் வீடு போய் சேர முடியுமா? என்ற கேள்வி எனக்குள் மெல்ல எட்டிப்பார்த்தது . பேருந்து நிலையத்தில் கூட்டம் அலைமோதியது, அன்று மிகக் குறைவான எண்ணிக்கை யிலேயான பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகின்றன.

ஏனெனில் போக்குவரத்து ஊழியர்களின் தொழிற்சங் கங்கள் ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் னிட்டு அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாததால், அடுத்த நாள் அறிவித்திருந்த வேலை நிறுத்த தொடர் போராட்டத்தை இன்றே தொடங்கி விட்டனர். அரசு ஊழியர்களின் உரிமை கள் மறுக்கப்படும்போது வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடு வது இது முதல் முறையல்ல. இதற்கு முன்பும் இது போல் பல முறை உரிமைக்காக, கடமைப் புறக்கணிப்பு நடந்துள்ளது. இந்த முறை அவர்கள் தேர்ந் தெடுத்திருக்கும் காலம் புதிய ஆண்டு பிறப்பதற்கு ஓரிரு நாட் களே இருக்கும், கிறிஸ்துமஸ் விடுமுறைக்காலம். தமிழ்நாட் டின் பல பகுதிகளிலிருந்தும் விடுமுறை முடிந்து தங்கள் சொந்த ஊருக்கு திரும்புப வர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகவேண்டியிருக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கை யினை ஸ்தம்பிக்கச் செய்து அரசாங்கத்தை பணிய வைக் கும் முயற்சி.

என் ஊருக்கு செல்ல வேண் டிய பேருந்து நிற்கும் நடை மேடை யில் ஒரே ஒரு அரசு பேருந்து நின்றிருந்தது. உட்கார இட மில்லாததால் நின்று கொண் டேன். சற்று நேரத்தில் ஒரு தனியார் பேருந்து வேகமாக வந்து நின்றதும் அநேக பயணி கள் அரசு பேருந்திலிருந்து இறங்கி தனியார் வசம் சென் றார்கள். நானும் அவர்களோடு ஐக்கியமானேன். நல்லவேளை உட்கார இடம் கிடைத்தது.

மளமளவென்று பேருந்து நிறைந்தது. ஓட்டுநர் என் ஜினை ஸ்டார்ட் செய்ததும், நடத்துனர் ஒலி பெருக்கியில் பாட்டை அலற வைத்தார். என் அருகில் அமர்ந்து இருந்த வரிடம், 'எந்த ஊருக்கு செல் கிறீர்கள்' என்று கேட்டேன், அவர் ஜன்னல் பக்கம் திரும்பி வெளியே பார்த்து வேண்டா வெறுப்பாக பதில் சொன்னார். யார் மீது உள்ள கோபமோ?. திடீரென்று வெளியில் ஒரே சலசலப்பு, அரசு நடத்துநருக் கும், தனியார் நடத்துநருக்கும் இடையே பயங்கர வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.


அட்டவணையின்படி, அந்த அரசு பேருந்து சென்ற பின் பத்து நிமிடம் கழித்து தான் தனியார் பேருந்து செல்ல வேண்டுமாம், அரசு பேருந்து தரப்பில் 'நியாயம்' பேசிக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் எங்கள் நடத்துநர் பேருந்தில் இருந்து எங்கள் அனைவரையும் இறங்குமாறு கூறினார் . காரணம் கேட்டதற்கு "பஸ் ஸ்ட்ரைக்" என்றார். "தனியார் பேருந்துக்கு என்ன ஸ்ட்ரைக்?"..என்று ஒருவர் கேட்டார் , "பேருந்தினுள் ஏறிய எங்களை இறங்க சொல்கிறீர்களே நியாயமா?".. என்று மற்றொரு வர் கேட்டார், அதற்கு நடத்துநர் கோபமாக, "உங்களுக்காகத் தான் நாங்கள் இவ்வளவு நேரம் சண்டை போட்டோம், ஆனால் நீங்கள் யாரும் எங் களுக்கு ஆதரவாக வரவி ல்லை, இப்போது பேசு கிறீர்கள் .. பேருந்து செல்லாது , பேசாமல் இறங்கிச் செல்லுங்கள்" என்று மிகுந்த மரியாதையோடு சொல்லிக்கொண்டிருந்தார். எனக்கு அவர் பஸ் ஸ்ட்ரைக் என்று சொல்லும்போது கூட சிரிப்பு வரவில்லை, ஆனால் எங்களுக்காகத்தான் சண்டை போட்டதாக சொன்னதை கேட்டவுடன் சிரித்துவிட்டேன்.

வேற வழி இல்லாமல் அனைவரும் இறங்கி விட் டோம். ஒருசிலர் மறுபடியும் அந்த அரசு பேருந்தினுள் தஞ்சமடைந்தனர், நாங்கள் அடுத்த பேருந்துக்காக காத் திருந்தோம்.

பேருந்தினுள் என்னருகே. உட்கார்ந்திருந்த அந்த நபர் இப்போது என்னருகே வந்து டைம் கேட்டார் , நான் கடி காரத்தை பார்கக முயன்றபோது ஒரு மழைத்துளி என் மணிக் கட்டில் பட்டுத் தெறித்தது. நான் அவரின் முகம் பார்த்து டைம் சொன்னேன். சற்று நேரத்தில் மற்றொரு தனியார் பேருந்து வந்து எங்களை கோழிகளை அடைப்பது போல் அடைத்துக் கொண்டது. வழக்கம்போல டிரைவர் பேருந்தை ஸ்டார்ட் செய்து காத்திருந்தார். ஆச்சரி யம் என்னவென்றால் நாங்கள் முன்னால் ஏறிய அந்த தனியார் பேருந்து கண்ணிமைக்கும் நேரத்தில் மிக விரைவாக பயணிகளை நிரப்பிக் கொண்டு விருட்டென்று சென்றுவிட்டது. எங்கள் ஓட்டுநர் என்ஜினை அணைத்துவிட்டார், அடுத்த பேருந்து வந்தால்தான் மறுபடி ஸடார்ட் செய்வார். காத்திருப்ப தை தவிர வேறு வழி இல்லை. நான் ஜன்னல் வழியாக வெளி யில் பார்த்தேன், மழை வேக மாகத் தூறிக்கொண்டிருந்தது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 586

சோபிதன் சோபி




சாள்ஸ் நியூமன்




வக்‌ஷலன்





தர்சனா சனா



சங்கர் டினோ




தனேஷ் பிருந்தா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 13

## எம்மை நாமேகாத்துக் கொள்ள முயல்வோம்



உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். நாம் நோய் வாய்ப்படும் போது எமது நோயின் உண்மையான நிலை பற்றித் தெரிந்துகொள்ளும் உரிமை எமக்கு இருக்கிறது.

ஒருவர் தனக்கு தீவிரமான நோய் நிலை இருக்கிறது எனத் தெரிந்துகொண்டால் அவர் தனது மிகுதி வாழ்க்கையை அதற்கு ஏற்றால் போல் திட்டமிடமுடியும். தான் சந்திக்க விரும்பும் மனிதர்களைச் சந்திக்கமுடியும். தான் பேச விரும்புபவர்களுடன் பேசமுடியும். தான் நிறைவேற்றிமுடிக்கவேண்டும் என்று நினைத்து நிலுவையிலுள்ள சிலகாரியங்களை நிறை




வேற்றி முடிக்கமுடியும். சிலர் தனது இறுதி சடங்குகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பதைக் கூடத்திட்டமிட்டுவார்கள். எனவே தான் கடுமையானநோய்நிலை ஒன்று ஏற்படும்பொழுது அதனை அந்த நோயாளிக்கே தெரியப்படுத்த வேண்டும் என்ற தேவை எழுகிறது.

எல்லோருக்கும் மரணம் நிச்சயமானது. ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்கள் யாரும் இன்று உயிருடன் இல்லை. இன்னும் ஒன்றரை நூற்றாண்டுகளில் இன்று இருப்பவர்கள் யாரும் உயிருடன் இருக்க போவதில்லை. இந்தக் குறுகிய இடைவெளியில் மனிதனின் வாழ்க்கை முற்றுப்பெற்றுவிட்டதாகக் கருதிவிட முடியாது.

அதன் பின்பும் அவன் நினைவுகளாய் சரித்திரமாய் இங்குதான் இருக்கபோகிறான். எனவே ஒருவன் தனது வாழ்க்கையை பூரணப்படுத்திக் கொள்வதற்குத் தனது நோய் நிலைபற்றிய தகவல்களும் தேவையானதாக இருக்கலாம்.

இவ்விடயத்திற்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது. சிலருக்குத் தமக்குக் கடுமையான நோய் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஜீரணிக்கமுடியாமல் இருக்கும். அதன் காரணமாக அவர்களின் மிகுதி வாழ்க்கை மிகவும் துன்பகரமானதாகவும், குழப்பம் நிறைந்ததாகவும் நம்பிக்கை பிடிப்பு இல்லாததாகவும் மாறிவிடுகிறது.

இந்தநிலை ஏற்படுவதை அவரது உறவினர்கள் பலர் விரும்புவதில்லை. இது அவருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை கூட்டுவதாகவே அமையும் என்று கருதுகிறார்கள். இதனால் நோயாளிக்கு நோய்நிலையின் உண்மைத் தன்மையை மறைக்க முற்படுகின்றனர். நல்ல நோக்கத்திற்காகவே இதனைச் செய்ய முயலுகின்றனர்.

இன்னும் சிலநோயாளர்களும் நோயாளர்களின் நெருங்கிய உறவினர்களும் நோயின் பிரச்சினையான பக்கங்கள் பற்றிப் பேச விருப்பப்படுவதில்லை. அவர்கள் அதுபற்றி பேசவிருப்பப்படாத சந்தர்ப்பங்களில் வைத்தியர் அவர்களின் அந்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்.

ஒரு நோயாளி தனது கடுமையான நோய் நிலைபற்றித் தனது உறவினர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டாம் என்று வைத்தியரை கேட்டுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் அதனையும் நிறைவேற்றவேண்டிய கடப்பாடு வைத்தியருக்கு இருக்கிறது. இவ்வாறு உறவினர்களுக்கு இந்தத் தகவல்கள் மறைக்கப்படும் பொழுது வைத்தியர் உறவினர்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. இவற்றை சமாளித்துக் கொள்வது வைத்தியரின் கடமை ஆகின்றது.

நோயாளி ஒருவரின் மனநிலை அல்லது அறிவு நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது அவருடன் வைத்தியர் உரையாடமுடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் நோயாளியின் நிலைபற்றி அவரின் நெருங்கிய உறவினர்களுடன் பேசவேண்டிய கடப்பாடு வைத்தியருக்கு உண்டு.

நோயின் கடுமைத் தன்மையை நோயாளிக்கோ அல்லது அவரின் உறவினர்களுக்கோ தெரியப்படுத்துவது என்பது வைத்தியருக்குக் கூட ஒரு சஞ்சலமான விடயந்தான். இது பலபடிமுறைகளைக் கொண்டது.

இதில் கவலைப்பட வேண்டியது யாதெனில் கடுமையான நோய் நிலைகளிலே பெரும்பாலானவை மக்களின் கவலையீனங்களாலும் அவர்களுக்குப் போதிய மருத்துவ அறிவு இல்லாததாலுமே ஏற்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலைவந்து விடக் கூடாது என்ற ஏக்கத்தின் காரணமாகவே மருத்துவர்கள் சிலர் நோயாளர்களுடன் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. எதனையும் வருமுன் காப்பதற்கு முயற்சி எடுப்போம். அதனையும் மீறிவருபவை எமது கைகளில் இல்லை. எம்மைப் பாதுகாப்பதற்கு எம்மால் இயன்றவரை செய்வது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

Dr. எஸ். சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.